# உதயன்




www.onlineuthayan.com

**30** பக்கங்கள் சுடர் 28 கதிர் 015 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 26 செவ்வாய்க்கிழமை (11/12/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00


## குறுகிய காலத்தில் அறிக்கை: தெரிவுக்குழு உலக சாதனை

**கூறுகிறார் ரணில்**

கொழும்பு, டிசெ.11

பொதுநலவாய நாடுகளின் விதிமுறைகளை மீறும் வகையில் இடம்பெற்று வருகின்ற நாடாளுமன்றத் தெரிவுக்குழு நடவடிக்கைகளானவை பிரதம நீதியரசரைப் பதவியிலிருந்து நீக்குவதுடன் மட்டும் நின்றுவிடாது, அதற்கு அப்பாற் சென்று பொதுநலவாய நாடுகளின் அமைப்பில் இலங்கையின் அங்கத்து

பார்க்க பக்கம் 4

இன்று ஆரம்பமாகும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அனைவரும் சிறந்த பெறுபேறுகளைப் பெறவேண்டும் என உதயன் வாழ்த்துகிறான்.

# அரசுக்கு எதிராக நேற்று கொழும்பில் மக்கள் திரள்வு

## பொது எதிரணி, சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, டிசெம்பர் 11

64ஆவது சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று கொழும்பில் அரசுக்கு எதிராகப் பெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. பிரதம நீதியரசருக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்றும், அவருக்கு எதிரான குற்றப் பிரேரணை, தெரிவுக் குழு விசாரணைகள் ஆகியவற்றைக் கண்டித்தும் எதிர்க்கட்சிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் சட்டத்தரணிகள் சங்கம் ஆகியன இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தின.

லிப்டன் சுற்று வட்டாரத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் காரணமாக, அதனை அண்டிய வீதிகள் அனைத்தும் மூடப்பட்டன. இதனால் நகரமண்டபப் பகுதியில் நேற்று பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டது; வீதிப் போக்குவரத்தும் தடைப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில், ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ, கரு ஜயசூரிய ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களும், நவசம சமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண, ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் கலாநிதி குமரகுருபரன் ஆகியோரும், பொது எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சிப் பிரதிநிதிகளும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் சட்டத்தரணிகள் சங்கத்தினரும் இதில் கலந்து கொண்டனர்.

அரசுக்குக் கடும் அழுத்தத்தைக் கொடுக்கும் நோக்கிலும், இது விடயத்தை சர்வதேசத்தின்

பார்க்க பக்கம் 4

## எனது அப்பா எங்கே?

### கடத்தப்பட்டோரை விடுவிக்குமாறு மன்னாரில் ஆர்ப்பாட்டம்



கொழும்பு, டிசெ.11

கடந்த பல ஆண்டுகளாக்க் கைது செய்யப்பட்டும் இனம்தெரியாதோர் என்ற போர்வையில் கடத்தப்பட்டும் காணாமல் போகச்செய்யப்பட்ட உறவுகளை விடுவிக்கக்

பார்க்க பக்கம் 4

## கடத்தப்பட்டவர்கள் பின்னர் கைதாகினர்

### புன்னாலைக்கட்டுவனில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ.11

இரவு வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த கணவனும் மனைவியும் கடத்தப்பட்டதாக சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. எனினும் அவர்கள் இருவரையும் கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் புன்னாலைக்கட்டுவன் வடக்கில்

பார்க்க பக்கம் 4

## யாழ். சட்டத்தரணிகள் 4 நாள் பணிப்புறக்கணிப்பு

### பிரதம நீதியரசர் மீதான விசாரணையை கண்டித்து

யாழ்ப்பாணம், டிசெ.11

பிரதம நீதியரசருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானத்தைக் கண்டித்து இன்று செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை நான்கு தினங்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக யாழ்ப்பாணப் பிராந்திய சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ். சட்டத்தரணிகளின் விசேட பொதுக்கூட்டம் யாழ். நீதிமன்ற நூலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது. பிரதம நீதியரசருக்கு எதிராக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினால் எடுக்கப்பட்ட முடிவு தொடர்பில் யாழ். சட்டத்தரணிகள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

பிரதம நீதியரசர் மீதான

பார்க்க பக்கம் 4

## மாணவர் விடுதலையை வலியுறுத்தி கிளிநொச்சியில் நேற்றுப் போராட்டம்

### மாணவரை விடுதலை செய், இராணுவமே வெளியேறு; அரசியல் கட்சி உறுப்பினர், மக்கள் திரண்டனர்



கிளிநொச்சி,டிசெ.11

யாழ். குடாநாட்டில் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸார் திடீர் தேடுதல் வேட்டையில் இறங்கி வகைதொகையின்றி இளைஞர்களைக் கைதுசெய்து வருவதை வன்மையாகக் கண்டித்தும், கைதுசெய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட அனைவரையும் உடனடியாக விடுதலை செய்யு

பார்க்க பக்கம் 4

## நிஷாந்தனின் வீடு மீது நேற்றிரவு குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், டிசெ.11

யாழ். மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரான நிஷாந்தனின் நல்லூரில் உள்ள வீடு மீது நேற்றிரவு குண்டு வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் அவர் மயிரிழையில் உயிர் தப்பினார்.

இது குறித்து 'உதயனு'க்கு நிஷாந்தன் தெரிவிக்கையில்,

''நேற்றிரவு 9.20 மணியளவில் நல்லூர் வைமன் வீதியில் உள்ள எனது வீட்டின் முன்புறமாக நான் நின்றிருந்தேன். அப்போது மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் வீட்டின் மீது குண்டு ஒன்றினை வீசினர். ஆயினும் அது வீட்

பார்க்க பக்கம் 4

## தேவாலயம் மீது வெறியாட்டம்

### பொலிஸார் பார்த்திருக்க பிக்குகள் தலைமையிலான குழு அட்டகாசம்

கொழும்பு, டிசெ. 11

அம்பாந்தோட்டை மாவட்டம் வீரகட்டிய பகுதியில் 'ஜீவனாலோக சபை' என்ற கிறிஸ்தவ தேவாலயம் நேற்றுக் காலை தாக்கிச் சேதப்படுத்தப்பட்டுள்ளது. பிக்குகள் தலைமையில் வந்த கூட்டம் ஒன்றே தேவாலயத்தைத் தாக்கியது என்று அங்கிருந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

அம்பாந்தோட்டை இலங்கையின் தென் பகுதியில் அமைந்துள்ளதுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சொந்த இடமுமாகும். தாக்குதல் நடந்தபோது அந்தப் பகுதியில் பொலிஸாரும் படையினரும் இருந்தனர் என்று சாட்சிகள் கூறுகின்றன. எனினும் அவர்களை மீறித் தேவாலயம் தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளது.

காலை வேளையில் தேவாலயத்தில் பூசை நடந்து கொண்டிருந்த நேரத்தில் 80 பிக்குகள் தலைமையில்

பார்க்க பக்கம் 4

# மாணவர் பிரதிநிதிகள் நால்வர் வெலிக்கந்தைக்கு திடீர் மாற்றம்

## மீதி 7 பேர் விடுவிப்பு

கொழும்பு, டிசெ. 11

கைது செய்யப்பட்டு வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 7 மாணவர்கள் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் 4 மாணவர்கள் வெலிக்கந்தை தடுப்பு முகாமுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்று அவர்களது உறவினர்கள் கூறுகின்றனர்.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் வி.பவானந்தன், ஒன்றியச் செயலாளர் ப.தர்ஷானந்த், கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் க.ஜெனமேஜெயந்த், விஞ்ஞான பீட மாணவன் எஸ்.சொலமன் ஆகிய நால்வருமே பயங்கரவாத விசாரணைப் பிரிவினரின் வவுனியா அலுவலகத்தில் இருந்து வெலிக்கந்தை தடுப்பு முகாமுக்கு மாற்றப்பட்டிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

''நேற்றுக் காலை நாம் வவுனியாவுக்குச் சென்றபோது அங்கு அவர்கள் இல்லை. வெலிக்கந்தைக்கு அவர்கள் கொண்டு செல்லப்பட்டு விட்டார்கள் என்று அங்கிருந்த அதிகாரிகள் எமக்குத் தகவல் சொன்னார்கள்'' என மாணவர்களில் ஒருவரின் உறவினர் தெரிவித்தார்.

மாணவர்கள் வெலிக்கந்தைக்கு மாற்றப்பட்டதற்கான காரணங்கள் அவர்களது பெற்றோருக்கோ, உறவினர்களுக்கோ தெரிவிக்கப்படவில்லை. ஆனால் மாணவர்களில் மூவருக்கு எதிராக மூன்று மாதகாலத் தடுப்புக்காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த ஜெயக்கொடி தெரிவித்தார் என்று கொழும்பு

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாநகரசபை வரவு–செலவு திட்டத்துக்கு எதிர்க்கட்சி உறுப்பினர் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ.11

யாழ். மாநகர சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்துக்கு மு.றெமீடியஸ் தவிர்ந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர். ஆளும் தரப்பு உறுப்பினர்களின் வாக்குகளால் வரவு- செலவுத் திட்டம் நேற்று நிறைவேறியது.

யாழ். மாநகர சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டக் கூட்டம் நேற்று மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தாம் ஏன் வரவு-செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்தோம் என்பது தொடர்பில் இன்று செவ்வாய்க்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அலுவலகத்தில் செய்தியாளர்கள் சந்திப்பில் விளக்குவதாகத் தெரிவித்தனர். (ஐ-7)

# கைதானவர்கள் குறித்து இதுவரை 20 முறைப்பாடு

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பதிவு

யாழ்ப்பாணம், டிசெ.11

யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பிரதேசங்களில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவித்து உறவினர்களால் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று திங்கள் வரை 20 முறைப்பாடுகளே பதிவு செய்யப்பட்டதாகப் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிப் பிரதேசங்களில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கடந்த மாதம் 30 ஆம் திகதியிலிருந்து பல்கலைக்கழக மாணவர்களும், முன்னாள் போராளிகளும் தொடர்ச்சியாகக் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

வவுனியா பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் இதுவரை யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் 45 பேர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டு, அவர்களில் 8 பேர் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் அவர்களின் உறவினர்களால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை வரை 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்று மாலை வரையில் மேலதிகமாக 3 முறைப்பாடுகளே கிடைக்கப்பெற்றுள்ளன.

பதிவு செய்யப்பட்ட 20 முறைப்பாடுகளில் பல்கலைக்கழக மாணவன் கைது தொடர்பில் ஒரேயொரு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகளில் 3 கிளிநொச்சியைச் சேர்ந்தவர்களுடையது என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று சுகவீன லீவுப் போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.11

அலுவலகப்படி உட்பட தமக்கான மூன்று வகைக் கொடுப்பனவுகளையும் அதிகரித்துத் தரும்படி கோரி யாழ். மாவட்டம் உட்பட நாடளாவிய ரீதியில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று ஒருநாள் சுகவீன விடுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.மாவட்டத்தில் 12 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுக்குட்பட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் போக்குவரத்துக் கொடுப்பனவை அதிகரிக்க வேண்டும், சீருடைகளைப் பெறுவதற்கான கொடுப்பனவு அதிகரிக்கப்பட வேண்டும், அலுவலகப்படி கொடுப்பனவு அதிகரிக்கப்பட வேண்டும்.

ஆகிய மூன்று கோரிக்கைகளை முன்வைத்தே அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தால் தொற்றுநோய்த் தடுப்பு நடவடிக்கைகள் நேற்று இடம்பெறவில்லை. நேற்று ஆரம்பமான சுகாதார வாரச் செயற்பாட்டிலும் அவர்கள் பங்குபற்றவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.(த-4-9)

## இடமாற்றத்தால் பாதிப்பு; ஆசிரியர்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ.11

ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களால் வடமாகாணக் கல்வி அமைச்சுக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பிராந்திய ஆணையாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

இடமாற்றம் தற்போது வடமாகாணத்திற்குள்ளே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த இடமாற்றங்கள் பல சர்ச்சைகளைத் தோற்றுவித்துள்ளன.

இந்த நிலையில் கிளிநொச்சி, பூநகரிப் பிரதேசத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களால் நேற்று 4 முறைப்பாடுகள் மனித உரிமைகள் இணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதிகஷ்டப் பிரதேசத்தில் 2 வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய போதும் தமக்கு இடமாற்றங்கள் வழங்கப்படவில்லையென்று தெரிவித்தே இந்த முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர்கள் இடமாற்றத்துக்காக விடுவித்துள்ள போதும் மாகாணக் கல்வி அமைச்சினால் தமக்கான இடமாற்றங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக ஆசிரியர்களின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களால் செய்யப்பட்ட முறைப்பாடுகளை ஏற்றுக் கொண்டு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பிராந்திய இணைப்பாளர் தெரிவித்தார். (த-5)

## இந்திய, தென்னிலங்கை மீனவரின் அத்துமீறலை எதிர்த்து உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், டிசெ. 11

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கண்டித்தும், வடபகுதி மீனவர்களின் வளங்களைச் சுரண்டும் பிறமாகாண மீனவர்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துமாறு கோரியும் யாழ். குருநகரில் ஒருவர் நேற்றுமுதல் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து உள்ளார்.

குருநகர் சேமக்காலைச் சந்தியில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட இடத்தில் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. "போரால் பாதிக்கப்பட்ட மக்கள் அமைப்பு" என்று கூறப்படும் அமைப்பின் தலைவராக உள்ள வி.சகாதேவன் என்பவரே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

* இலங்கைக் கடற்பிரதேசத்தினுள் எமது மீனவர்களின் வாழ்வாதாரத்துக்குச் சவால் விடும் வகையில் மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கட்டுப்படுத்த வேண்டும்.
* போரால் பாதிக்கப்பட்ட பிரதேச மீனவர் சங்கங்களின் நடவடிக்கைகளுக்குக் கட்டுப்படாமல் தொழிலில் ஈடுபடும், தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளைக் கையாண்டு எமது கடல்வளத்தை அழிக்கும் மீன்பிடி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.
* வட பகுதி மீனவர்களின் வளங்களைச் சூறையாடும் வெளிப்பிரதேச மீனவர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

ஆகிய மூன்று கோரிக்கைகளை முன்வைத்தே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகச் சகாதேவன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் :-

கடந்த 30 வருடகாலப் போரினால் பல்வேறு இழப்புக்களையும் துயரங்களையும் சுமந்து பல்வேறு அழிவுகளைச் சந்தித்துள்ள எமது மீனவர் சமூகம் போர் நிறைவடைந்து 3 வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும் அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அரச உதவிகள், வாழ்வாதார உதவித் திட்டங்கள் இன்னமும் கிடைக்கவில்லை. தற்காலத்தில் நிகழும் சம்பவங்கள் எமது மீனவர் சமுதாயத்தை முற்றாக அழித்து விடுமோ என அஞ்ச வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

போர்க்காலத்தில் கடலுக்குச் சென்ற மீனவர் பலர் மீளக் கரை சேரவில்லை. கடந்த ஒரு தலைமுறையை சூனியத்துக்குள் தொலைத்துவிட்ட எமது மீனவர் சமூகம் இன்னும் விடிவு காணாமல் உள்ளது. இவற்றைத் தட்டிக்கேட்க வேண்டிய தேவை எமக்கு உண்டு. எமது உரிமையை பிறருக்கு விட்டுக் கொடுக்கலாகாது என்று கூறினார். (த-4)



## சிவில், அரசியல் உரிமைகள் குறித்து வியாழனன்று கலந்துரையாடல்

**சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையினால் இந்தக் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணம், டிசெ.11

சர்வதேச மனித உரிமைகள்தினத்தையொட்டி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்தியக் கிளையினால் தற்கால சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பில் அரச மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலொன்று நாளைமறுதினம் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளதாக பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் நேற்று மாலை நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையினால் சிவில் சமூகப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலொன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் நாளைமறுதினம் வியாழக்கிழமை மு.ப. 9 மணிக்கு, இல.286-பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். மேல்நீதிமன்ற முன்னாள் நீதிபதி இ.த.விக்கினராஜா கலந்துகொள்ளவுள்ளார்.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் என்னும் தலைப்பில் கைதும், தடுத்து வைத்தலும் மற்றும் சித்திரவதை எனும் விடயம் தொடர்பில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கே.குருபரனும், சமூக பொருளாதார உரிமைகள் என்னும் தலைப்பில் கல்வி மற்றும் சுகாதார உரிமைகள் எனும் விடயம் தொடர்பில் பேராசிரியர் சிவனேசனும், பெண்கள் உரிமைகள் தொடர்பில் வைத்தியர் திருமதி திருமகளும், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் தொடர்பில் திருமதி கோசலை மதனும் கருத்துரை வழங்கவுள்ளனர்.

பங்குபற்றுனர்களும் கருத்துக்களை வழங்கும் முகமாக நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதாக பிராந்திய இணைப்பாளர் மேலும் தெரிவித்தார். (த-5)

## முஸ்லிம்களுக்கு எதிரான அநீதிகள்; ரணிலுடன் ஆலோசனை

இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் அராஜகங்கள், அநீதிகள் தொடர்பில் ஐ.தே.க. தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாட அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபை தீர்மானித்துள்ளது.

குறித்த சந்திப்பை விரைவாக மேற்கொள்ளும் வகையில் எதிர்க்கட்சித் தலைவரிடம் உலமா சபை நேரம் ஒதுக்கிக் கேட்டுள்ளது என அறிய முடிகின்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முஸ்லிம்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடவே உலமா சபை எதிர்க்கட்சித் தலைவரைச் சந்திக்கவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# குற்றப் பிரேரணைக்கு எதிரான மனுவை விசாரிக்க உயர் நீதிமன்றம் அனுமதி

## ஜனவரி 21 ஆம் திகதி விசாரணை நடக்கும்

கொழும்பு, டிசெ. 11.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றப்பிரேரணை தொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனுமீதான விசாரணைக்கு அனுமதியளித்து உயர் நீதிமன்ற ஆயம் ஒன்று நேற்றுமுன்தினம் தீர்ப்பு வழங்கியது.

நீதியரசர்கள் என்.ஜி. அமரதுங்க, பிரியசத்டெப் மற்றும் ஈவாவனசுந்தர ஆகியவர்கள் முன்னிலையில் இந்த மனு பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு விசாரணை நடத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டது.

சட்டத்துக்கு முன் சமத்துவத்துக்கும் சமத்துவப் பாதுகாப்புக்குமான அடிப்படை உரிமைகளைக் குற்றப்பிரேரணை மீறுவதாக உள்ளதென்று மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர். உயர் நீதிமன்ற குழுவின் பிரகாரம் ஜனவரி 21 ஆம் திகதி மனு மீதான விசாரணை ஆரம்பமாகும்.

உயர்நீதிமன்றின் வியாக்கியானம் கிடைக்கும்வரை காத்திராமல் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவானது பிரதம நீதியரசர் மீதான குற்றப் பிரேரணை மீதான விசாரணையைத் தொடர்வதற்கு முடிவெடுத்தமையானது அடிப்படை உரிமை மீறலாகும் என்று மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் விஜயதாச ராஜபக்ஷ, செயலாளர் சஞ்சய கமகே, பொருளாளர் ரஸிக்க திஸாநாயக்க மற்றும் உதவிச் செயலாளர் சரித்கல் ஹேனா ஆகியவர்கள் மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

முன்னாள்தலைவர்ஷிப்லி அஸிஸ், ஆனந்த விஜயசேகர, உபாலி குணரட்ண மற்றும் அஜந்தா அத்துக்கோரலே ஆகியவர்களுடன் இக்ரம் மொகம்மத் மனுதாரர்கள் சார்பில் முன்னிலையாகியிருந்தனர்.

மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் முன்வைத்த வாதம் ஒன்றை அடுத்து நீதியரசர், அமரதுங்க வெளியிட்ட கருத்தில், சட்டத்தையும் நிலையியல் விதிகளையும் சட்டமாக்குவதற்கு ஏதும் தராதரமிருக்கிறதா என்று கேட்டார். மேலும் நிலையியல் விதியானது 1974 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது.

அரசமைப்பானது 1978 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. அதனால் தான் நிலையியல் விதியின் சொல்லுந்தன்மைபற்றியும் கவனிக்க வேண்டியுள்ளது என்றார். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அச்சுவேலி மத்திய பஸ் நிலையத்தில் புதிய பஸ் தரிப்பிடம் ஒன்று நவீன முறையில் வலி. கிழக்குப் பிரதேச சபையால் அமைக்கப்படுகிறது. இந்தக் கட்டடம் எதிர்வரும் தைப்பொங்கலுக்கு முன்னர் கட்டி முடிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

## வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு பதில் செயலாளர் நியமனம்

வலி.தென்மேற்கு, டிசெ.11

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கு பதில் செயலாளராக திருமதி எஸ்.இரட்னேஸ்வரி உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதேச சபையில் செயலாளராகக் கடமையாற்றி வந்த திருமதி சிவலிங்கம் ஓய்வுபெற்றுச் சென்றதையடுத்து பிரதேச சபையில் உள்ளூராட்சி உதவியாளராகக் கடமையாற்றி வந்த இ.கிருஷ்ணகுமார் பிரதேச சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய பதில் செயலாளராகக் கடமையாற்றி வந்தார்.

இந்த நிலையில் சேவை மூப்பு அடிப்படையில் பிரதேச சபையில் கடமையாற்றிவரும் திருமதி எஸ். இரட்னேஸ்வரியை பதில் செயலாளராக நியமிக்குமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிரதேச சபைக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து இவர் பதில் செயலாளராகக் கடமையாற்றி வருகிறார்.

இதேவேளை ஏற்கனவே செயலாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற திருமதி சிவலிங்கத்தின் பதவிக் காலத்தை ஒரு வருடத்துக்கு நீடிக்குமாறு பிரதேச சபையால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட போதிலும், அவரின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கு ஆணையாளர் அனுமதி வழங்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-115)

## இணக்கசபை அமர்வு ஒத்திவைப்பு

வடமராட்சி, டிசெ.11

ஜீ.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சை நடைபெறுவதை முன்னிட்டு 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவிருந்த கோப்பாய் பிரதேச இணக்க சபையின் அமர்வு அடுத்த வாரம் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று பிரதேச இணக்க சபையின் தலைவர் இ.மயில்வாகனம் தெரிவித்தார்.

16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட இருந்த பிணக்குகள் யாவும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை எடுத்துக் கொள்ளப்படும் என்றும் பிணக்குகளுடன் சம்பந்தப்பட்ட அனைவரும் . அன்றைய தினம் சமுகமளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ம-8)

## மதுபோதையில் வாகனம் செலுத்தியதால் அபராதம்

### 25 ஆயிரம் செலுத்துமாறு உத்தரவு

மதுபோதையில் வாகனத்தைச் செலுத்திச் சென்ற சாரதிக்குப் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவில் போக்குவரத்துக் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த பொலிஸார் குறித்த வாகனத்தை வழிமறித்துச் சோதனை செய்த போது சாரதி மதுபோதையில் இருந்தமை தெரியவந்தது.

மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டு அந்தச் சாரதி பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.

இந்தச் சாரதி மீதான வழக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து 25 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு சாரதிக்கு நீதிபதி உத்தரவிட்டார். (ம-8)

## வாழ்வாதாரத் திட்டங்கள் சேந்தாங்குளம் மக்களிடம்

### கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது

*யாழ்ப்பாணம், டிசெ.11*

*வலி.வடக்கில் மக்கள் மீளக்குடியமர்ந்த சேந்தாங்குளம் பகுதியில், ஆஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடன் புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச அமைப்பான ஐ.ஓ.எம். நிறுவனத்தால் அமைக்கப்பட்ட வாழ்வாதாரத் திட்டங்கள், அந்தப் பகுதி மக்களிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டன.*



வலி.வடக்கில் மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு பல்வேறு அமைப்புக்களால் பல்வேறுபட்ட நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் ஆஸ்திரேலிய அரசின் நிதியுதவியில் ஐ.ஓம்.எம். நிறுவனத்தால் சேந்தாங்குளம் பகுதியில் பல்வேறுபட்ட வாழ்வதார உதவித் திட்டங்கள் மக்களுக்கு நேற்று வழங்கப்பட்டுள்ளன.

சேந்தாங்குளம், கடற்கரை முதலாம் வீதி புனரமைக்கப்பட்டு வலி.வடக்கு பிரதேச சபையின் தலைவர் சோ.சுகிர்தனிடம் கையளிக்கப்பட்டது. அத்துடன் மீனவர்களுக்காக கடல் வாய்க்கால் (வான்தோண்டல்) அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மீன் ஏல விற்பனை நிலையம், பொது நோக்கு மண்டபம், நூலகம், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கக் கட்டடம், எரிபொருள் நிரப்பு நிலையம், இயந்திரம் திருத்தும் நிலையம் என்பனவும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் வலி. வடக்குப் பிரதேச செயலாளர் க.ஸ்ரீமோகனன், பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன், ஐ.ஓ.எம்.பிரதான திட்டப் பணிப்பாளர் டன்ஸன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-5)

## சிக்கன கடன் வழங்கு சங்க 20 ஆவது ஆண்டு நிறைவு



சாவகச்சேரி ஸ்ரீ பழனி சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் சாவகச்சேரி ஐங்கரன் மணிமண்டபத்தில் இடம்பெற்றது.

சங்கத் தலைவர் ம.விவேகானந்தன் தலைமையில் நடைபெற்ற விழாவில் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் போ.மோகன் விருந்தினராகக் கலந்துகொண்டார்.

சங்கத்தின் இருபதாவது ஆண்டு மலரை முதன்மை விருந்தினர் வெளியிட்டு வைத்தார். தென்மராட்சி பிரதேசத்தில் சிறப்புப் பணியாற்றிய மருத்துவர் சு.சி.அருளானந்தம், மருத்துவர் ச.அம்பிகைபாகன், சாவகச்சேரி மத்தியஸ்தர் சபைத் தலைவர் ப.நடராசா, தென்மராட்சி இலக்கியக் குழுத் தலைவர் கவிஞர் த.நாகேஸ்வரன், சாவகச்சேரி மக்கள் வங்கி கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் ஆகியோர் 'சிறப்பு சமூக சேவையாளர்' பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

சங்கத்தின் 20 ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும் கடந்த உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள், நகரப் பகுதியில் வாழும் ஆதரவற்றோர் ஆகியோருக்கு உதவிகளும் வழங்கப்பட்டன.

தென்மராட்சி இலக்கியக் குழுவினரின் பட்டிமன்றமும், மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.(ம-9)

## நூல் சேகரிப்புப் பணி

வடமராட்சி, டிசெ.11

நாயன்மார்கட்டு பாரதி மன்ற சனசமூக நிலையத்தில் நூல் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. அதற்கான புத்தகங்கள் சேகரிக்கும் பணி எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 15 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது என்று நிலையத்தின் செயலாளர் நா.சிவசம்பு தெரிவித்தார்.

சனசமூக நிலைய எல்லைக்குள் வாழும் மக்களின் வாசிப்பு பழக்கத்தை அதிகரிக்கும் நோக்குடனேயே நூல் நிலையத்தை ஆரம்பித்து பல்வேறு புத்தகங்களைச் சேகரித்து வைக்கவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

சூழலில் வாழ்வோர் இயன்றவரை ஒரு புத்தகத்தையாவது நூல் சேகரிக்கும் தொண்டர்களிடம் வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-8)

## தொலைபேசி இணைப்பு வயரை அறுத்துவிட்டுத் தப்பிய லொறி



யாழ்ப்பாணம், டிசெ.11

யாழ். நகரில் மிக வேகமாகச் சென்ற லொறி ஒன்று தொலைபேசி இணைப்பு வயர்களை அறுத்துச் சேதமாக்கி விட்டுத் தப்பியது.

யாழ். வின்சர் தியேட்டர் சந்திக்கு அருகில் நேற்று நண்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இதனால் தொலைபேசி இணைப்பு வயர்கள், கம்பம் என்பன சேதமடைந்தன. யாழ். நகரில் பெரும்பாலான இடங்களில் இந்தத் தொலைபேசி இணைப்பு வயர்கள் வீதிகளுக்குக் குறுக்காகச் செல்வதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

உயரமான கனரக வாகனங்கள் இந்தத் தொலைபேசி வயர்களில் முட்டுவதால் அவை அடிக்கடி அறுந்து சேதமடைகின்றன. (த-17)

## அநாகரிகமாக நடந்தவர் இழந்தார் ரூ.6 ஆயிரம்

குடிபோதையில் அநாகரிகமாக நடந்து கொண்ட வயோதிபருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் 6 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவில் குடிபோதையில் அசிங்கமாக நடந்துகொண்டதாகக் குற்றம் சாட்டி வயோதிபர் ஒருவர் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.

இந்த வயோதிபர் மீதான வழக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதிநந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது வயோதிபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 6 ஆயிரம் ரூபா அபராதமாக செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார். (ம-8)

## நிகழ்வுகள் இன்று

**நடமாடும் சேவை**

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அச்சுவேலி பிரதேச சபையின் ஏற்பாட்டில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் வழங்குவதற்கான நடமாடும் சேவை இன்று இராஜமாணிக்கம் கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது., இந்த நடமாடும் சேவையில் அச்சுவேலி தெற்கு, வடக்கு, பத்தமேனி, கதிரிப்பாய், தம்பாளை, இடைக்காடு, வளலாய் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட மக்கள் கலந்து பயன்பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-14)

**முகாமைத்துவ கூட்டம்**

கைதடி முதியோர் இல்ல நலன்புரி சங்கத்தின் முகாமைத்துவக் குழுக் கூட்டம் முற்பகல் 10 மணிக்கு இல்ல பிரார்த்தனை மண்டபத்தில் மாகாண சேவைகள் திணைக்கள பணிப்பாளர் திருமதி ந.இன்பராஜ் தலைமையில் நடைபெறும். (ம-14)

**விழிப்புணர்வு நாடகம்**

யு.என்.டி.பி. அனுசரணையுடன் தென்மராட்சி பிரதேச செயலகம் நடத்தும் காவேரி கலைமன்றத்தின் விழிப்புணர்வு வீதி நாடகம் இன்று வரணி வடக்கு காளி கோயில் முன்றிலில் இடம் பெறவுள்ளது. (ம-122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அரசுக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
கவனத்துக்கு எடுத்துச் செல்லும் நோக்கிலும் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நீதித்துறையை நிறைவேற்றுத்துறை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கிறது, பிரதம நீதியரசருக்கு நியாயம் கிடைக்க வேண்டும், தெரிவுக்குழுவின் முடிவை ஏற்க முடியாது என்று தெரிவிக்கும் வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் காணப்பட்டனர்.

அரசமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளை மீறி அரசு பிரதம நீதியரசரைப் பதவி இறக்க முயற்சிக்கிறது என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட ஐ.தே.க. துணைத் தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ் சாட்டினார்.

நாட்டை இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவே நீதித்துறையின் சுதந்திரத்தை அரசு ஒடுக்க முனைகிறது என இலங்கைக் கத்தோலிக்க மன்றத்தைச் சேர்ந்த அருட்தந்தை சத்தியவேல் தெரிவித்தார். (சி)

## மாணவர் பிரதி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
ஆங்கில ஊடகம் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டிருந்தது.

"பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் 9 ஆவது பிரிவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை 3 மாதங்கள் வரை தடுத்து வைத்திருக்க முடியும். ஏனைய ஆறு மாணவர்களும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் 6-1 பிரிவின் கீழ் 72 மணித்தியால தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர்'' என்றும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்திருந்தார்.

தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏனைய 7 மாணவர்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர். வவுனியாவுக்கு அழைக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர், பல்கலைக்கழகத்தின் சில பீடாதிபதிகள், மூத்த மாணவர் ஆலோசகர், நலச் சேவைப் பதிவாளர் ஆகியோரிடம் இந்த 7 மாணவர்களும் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்றுப் பகல் யாழ்ப்பாணத்தை வந்தடைந்த மாணவர்கள் யாழ். பொலிஸ் நிலையத்துக்குச் சென்று தாங்கள் விடுவிக்கப்பட்ட விடயத்தைக் கூறிய பின்னர் பெற்றோர்களுடன் வீடுகளுக்குச் சென்றனர்.

மருத்துவ பீடத்தைச் சேர்ந்த க.சஞ்சீவன், ச.பிரசன்னா, சி.சசிகாந்த, செ.ஜனகன், ரி.அபராஜிதன் மற்றும் முகாமைத்துவபீடத்தைச் சேர்ந்த ப.சபேஸ்குமார், விஞ்ஞானபீடத்தைச் சேர்ந்த செ.ரேணுராஜ் ஆகியோரே விடுவிக்கப்பட்டுள்ளனர். (த-4)

## தேவாலயம்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
வந்த ஆயிரம் பேர் அடங்கிய கும்பல் ஒன்று தேவாலயத்துக்குள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த வாகனங்களுக்குத் தீவைத்தும் தேவாலயத்துக்குள் இருந்த கண்ணாடிகளையும் பிற பொருள்களையும் உடைத்தும் சேதப்படுத்தியும் அடாவடித்தனங்கள் புரிந்தார்கள் என்று பெயர் வெளியிட விரும்பாத தேவாலய பிரதிநிதி ஒருவர் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலில் சிலர் காயமடைந்துள்ளனர் என்று கூறப்படுகிறது. அவர்கள் தேவாலயத்தில் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தவர்கள். பலர் உளரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், ரூபாய் 6 லட்சம் பெறுமதியான பொருள் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

11 வருடங்களாக இந்தத் தேவாலயம் வீரகட்டிய பகுதியில் இருந்து வருகிறது என்றாலும் பௌத்த பிக்குகளின் அனுமதி பெற்றே அது செயலாற்ற முடியும் என்பதுபோன்ற அழுத்தங்களை அது சமீபகாலமாக எதிர்கொண்டு வருகிறது என்று அந்த தேவாலயத்தின் பிரதிநிதி ஒருவர் பி.பி.ஸி. உலக சேவையிடம் தெரிவித்திருக்கிறார். தாக்குதலைப் பொலிஸார் தடுத்து நிறுத்த முடியவில்லை என்றாலும் சேதங்கள் மேலும் அதிகமாகாமல் பொலிஸார் கட்டுப்படுத்தினர் என்று அவர் கூறினார்.

சம்பவ நேரத்தில் பொலிஸாரும், இராணுவத்தினரும் இருந்தனர் என்றபடியால் அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கையில் தேவாலய நிர்வாகம் தற்சமயம் இந்தத் தாக்குதல் சம்பந்தமாக எவ்வித சட்ட நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## கடத்தப்பட்டவ...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

நேற்றுமுன்தினம் குறித்த தம்பதியர் இருவரும் மாமனார் வீட்டுக்குச் சென்றுவிட்டு தமது வீட்டுக்கு இரவு 9 மணியளவில் திரும்பியுள்ளனர். மறுநாள் மாமனார் அவர்களுடைய வீட்டுக்குச் சென்றபோது இருவரையும் அங்கு காணவில்லை. சம்பவத்தை அயலவர்களுக்குத் தெரியப்படுத்தியபோது, குறித்த தம்பதியரின் வீட்டுக்கு இரவு வாகனம் ஒன்று வந்துசென்றதாக மட்டும் அயலவர்கள் கூறியுள்ளனர்.

இதனையடுத்து மாமனார் கிராமசேவகர் ஊடாக சுன்னாகம் பொலிஸில் தகவல் கொடுத்துள்ளார்.

விசாரணைகளை மேற்கொண்ட சுன்னாகம் பொலிஸார், குறித்த இருவரும் சந்தேகத்தின் பேரில் கோப்பாய்ப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தகவல் வழங்கியுள்ளனர்.

இவர்கள் ஏன் இவ்வாறு கைது செய்யப்பட்டார்கள் என்ற விவரம் பொலிஸாரால் தெரிவிக்கப்படவில்லை. (ஐ-86)

## எனது அப்பா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
கோரி மன்னாரில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

இதைத்தொடர்ந்து கச்சேரி முன்பு காணாமல்போனோரின் உறவுகள் ஒன்றுகூடி தமது உணர்வுகளையும் ஆதங்கங்களையும் பகிர்ந்து கொண்டனர். அப்போது காணாமல்போனோரின் உறவுகள் அங்கு கண்ணீர்விட்டு கதறியழுதனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற உறவுகள், 'எனது அப்பா எங்கே?', 'வெள்ளை வானும் அரசுதான் கடத்தியதும் அரசுதான்', காணாமல்போவதும் அரசாலே, கடத்திச் செல்வதும் அரசாலே', 'தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை பறிக்காதே! கொள்ளையிடாதே!' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு கோஷங்களை எழுப்பினர்.

காணாமல்போனவர்களை விடுவித்து உறவினர்களிடம் ஒப்படைக்கும்படியும் அவர்களில் குற்றம் இருந்தால் சட்டத்தின் முன் நிறுத்தும்படியும் கோரியுமே இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தப்பட்டது.

இவ்வூர்வலம் மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயம் முன்பாக ஆரம்பித்து கச்சேரியை வந்தடைந்து பின்னர் ஜனாதிபதிக்கு அரச அதிபர் மூலமாக மனு கையளிப்புடன் நிறைவடைந்தது.

இதற்கு முன்பாக காணாமல் போனோரின் உறவுகள் ஒன்றுகூடி காணாமல்போன உறவுகளைத் தேடும் குடும்பங்களின் அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு, தெரிவு செய்யப்பட்ட செயற்குழு உறுப்பினர்களின் தலைமையிலே இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்வுகளில் காணாமல்போனோரின் குடும்ப உறுப்பினர்களும் போர் அனர்த்தங்களில் பாதிக்கப்பட்ட பலரும் பல நூற்றுக்கணக்கில் உணர்வு பூர்வமாகப் பங்குபற்றினர். (த-12-5)

## நிஷாந்தனின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
டின் முன்புறத்தில் இருந்த மரத்தில் மோதி வெடித்ததால் உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டன.'' என்றார்.

இது குறித்து யாழ். பொலிஸ் நிலையத்தில் நிஷாந்தன் முறைப்பாடு செய்துள்ளார்.

அரச தரப்பு சார்பில் யாழ். மாநகர சபைக்கு உறுப்பினராக தெரிவான நிஷாந்தன், பின்னர் அரச தரப்பில் இருந்து விலகி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து தீவகப் பகுதியில் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறார். இந்த நிலையில் அண்மையில் அவரது உறவினர் ஒருவர் காணாமற்போயுள்ளார். இதன் பின்னர் தற்போது அவரது வீட்டின் மீதும் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## குறுகிய...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
வத்தையும் இல்லாது செய்துவிடும் என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

64 ஆவது சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு 'மக்கள் சுயாதிபத்தியம் மற்றும் மனித உரிமை' என்ற தொனிப் பொருளில் கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின்போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

17ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாது செய்யாமல் அல்லது அதை நீக்கி 18 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக பொதுமக்கள் வாக்கெடுப்பு நடத்தப்பட்டிருந்தால் 17ஆவது திருத்தச்சட்டம் நீக்கப்பட்டிருக்காது. அத்துடன் இவ்வாறு போராடவேண்டிய நிலையும் எமக்கு ஏற்பட்டிருக்காது.

குற்றப் பிரேரணை தொடர்பான தெரிவுக் குழுவின் நடவடிக்கைகள் முற்றிலும் தவறானவை. தெரிவுக்குழுவில் அங்கம் வகித்த எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் அக்குழுவிலிருந்து விலகிய பின்னர் ஆளுந்தரப்பு பிரதிநிதிகள் அன்றிரவே பல சாட்சிகளை விசாரணை செய்து நூற்றுக்கணக்கான ஆவணங்களை உள்ளடக்கிய அறிக்கை தயாரித்தனர். அடுத்த நாள் அதை சபாநாயகரிடமும் சமர்ப்பித்தனர்.

மிகக் குறுகிய காலத்தில் அறிக்கையொன்றைச் சமர்ப்பித்த தெரிவுக்குழு என்ற கின்னஸ் உலக சாதனையை இந்தத் தெரிவுக் குழு படைத்துள்ளது. இது குறித்து மஹிந்த ராஜபக்ஷ அரசு பெருமைகொள்ளமுடியும்.

'வெட்மா ஹவுஸ்'என்ற பிரகடனம் 2003 ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகளின் பிரகடனத்துக்கு அமைய, நீதியரசர் ஒருவரைப் பதவியிலிருந்து நீக்கவேண்டும் எனில் அதற்கு முன்னதாக அது தொடர்பில் சுயாதீன - பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்படவேண்டும். இலங்கையும் பொதுநலவாய அமைப்பில் அங்கத்துவமுடைய நாடு என்ற வகையில் அதன் விதிமுறைகளை நாம் பின்பற்றவேண்டும்.

அவ்வாறு செய்யமுடியாவிட்டால் பொதுநலவாய நாடுகள் அமைப்பிலுள்ள அங்கத்துவத்தை நாம் இழக்கவேண்டி ஏற்படும்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் விதிமுறைகளை மீறும் வகையில் இடம்பெற்று வருகின்ற தெரிவுக்குழு நடவடிக்கைகள் பிரதம நீதியரசரைப் பதவிநீக்கம் செய்வதுடன் நின்றுவிடாது. அது அதற்கும் அப்பாற் சென்று அந்த அமைப்பிலுள்ள இலங்கையின் அங்கத்துவத்தையும் இல்லாது செய்துவிடும்.

எனவே, இந்த நடைமுறைகளை உடனடியாக நிறுத்தவேண்டுமெனில் ஜனாதிபதி சட்டத்தரணி நாடாளுமன்ற உறுப்பினருமான விஜேதாஸ ராஜபக்ஷ தனிநபர் பிரேரணையாக சமர்ப்பித்துள்ள நீதியரசர்களைப் பதவிநீக்கம் செய்தல் தொடர்பான சட்டமூலத்திற்கமைய செயற்படவேண்டும்.

அந்தச் சட்டத்திற்கமைய மேற்படி தெரிவுக்குழு அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றில் வாக்கெடுப்பு நடத்துவதற்கு முன்னதாக சபாநாயகர் சுயாதீன- பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தவேண்டும்.

தற்போது உருவாகியுள்ள பிரச்சினை பிரதம நீதியரசரை அடிப்படையாகக் கொண்டுள்ளதால் மேற்படி சட்டமூலத்திற்கமைய நடைபெறும் சுயாதீன - பக்கச்சார்பற்ற விசாரணையானது பொதுநலவாய நாடுகள் அமைப்பிலுள்ள மூன்று நீதியரசர்கள் உள்ளிட்ட குழுவினூடாகவே இடம்பெற வேண்டும்.

அவசர சட்டமூலமாக இந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமானால் விவாதிக்கவும் அதனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றவும் நாம் தயார் - எனத் தெரிவித்துள்ளார் ரணில் விக்கிரமசிங்க. (சி)

## யாழ். சட்டத்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
இந்த நடவடிக்கைகளைக் கண்டித்து இன்று முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை நான்கு நாள்களுக்கு நீதிமன்ற நடவடிக்கைகளைப் பகிஷ்கரித்துப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப்போவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த சட்டத்தரணிகள் இவ்வாறு பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர் - என்றார். (த-4-9)

## மாணவர் விருத...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
மாறு வலியுறுத்தியும் கிளிநொச்சியில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

இதன்போது, அலைபோல் திரண்டு வந்த மக்கள் கூட்டம், 'பல்கலைக்கழக மாணவர்களை உடனடியாக விடுதலை செய்', 'இராணுவமே எங்கள் மண்ணிலிருந்து வெளியேறு', 'தமிழ் மாணவர்களுக்குச் சுதந்திரமாக இந்த நாட்டில் கல்வி கற்க முடியாதா?', என்றெல்லாம் ஆக்ரோஷத்துடன் கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்க் கட்சிகளும், இடதுசாரிகளும் இணைந்து ஆரம்பித்துள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்களை விடுதலை செய்வதற்கான கூட்டமைப்பு, கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு முன்னால் இந்த கவனவீர்ப்புப் போராட்டத்தை நேற்று ஏற்பாடு செய்திருந்தது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, புதிய மாக்சிஸ் லெனின் கட்சி, நவசமசமாஜக் கட்சி உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவாஜிலிங்கம் ஆகியோர் இதன்போது உரைநிகழ்த்தினர்.

கார்த்திகை விளக்கீடன்று யாழ். பல்கலைக்கழகத்துக்குள் அத்துமீறி புகுந்த இராணுவத்தினர் அங்கு சுடர் ஏற்றிய மாணவர்களைத் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தித் தாக்கியதுடன், பெண்கள் விடுதிக்குள் புகுந்தும் மாணவிகளை வயர்களால் தாக்கி அடாவடியில் ஈடுபட்டு, தளபாடங்களையும் அடித்து நொறுக்கினர்.

பதற்ற நிலைமையை அறிந்து அங்கு விரைந்த கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் உதயன் பத்திரிகை ஆசிரியர் ஆகியோர் மீதும் இராணுவத்தினர் அன்று வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டனர்.

பல்கலைக்கழகத்துக்குள் நுழைந்து இராணுவம் அடாவடியில் ஈடுபட்டதைக் கண்டித்து மறுநாள் காலை ( கடந்த 28 ஆம் திகதி) பல்கலைக்கழக வளாகத்துக்குள் மாணவர்கள் அமைதியான முறையில் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.இதன்போது பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து மாணவர்களை கடுமையாகத் தாக்கியதுடன், விரட்டி விரட்டி கொட்டன் தடிகளாலும் அடித்தனர்.

இதனால் யாழ்ப்பாணம் அன்றைய தினம் அல்லோலகல்லோலப்பட்டது. எனினும், மறுநாள் காலை ( 29 ஆம் திகதி) முதல் மாணவர்களை கைதுசெய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டனர். இவ்வாறு ஈடுபட்டு மாணவர்களையும் கைது செய்தனர்.

இதன் பின்னர் திடீரென யாழ். குடாநாட்டில் தேடுதல் வேட்டையில் இறங்கிய பயங்கரவாத தடுப்புப் பொலிஸார் தொடர்ச்சியாக பல பகுதிகளிலிருந்தும் மக்களை கைது செய்தனர். இன்னும் யாழில் தேடுதல் வேட்டை தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே,கைது செய்யப்பட்ட பொதுமக்களையும் , பல்கலைக்கழக மாணவர்களையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி கிளிநொச்சியில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

இந்தப் போராட்டத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். அரச தரப்பினரின் முழுமையான அனுசரணையுடனேயே இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எதிர்ப்பு போராட்டத்துக்கு என கிராமப் புறங்களில் இருந்து மக்கள் அழைத்து வரப்பட்டுள்ளனர். 'காணிப் பிரச்சினை சம்பந்தமான ஆர்ப்பாட்டத்தில், அதில் கலந்து கொண்டால் தான் உங்களுக்கு காணி வழங்க முடியும் என இராணுவத்தினர் தமக்கு கூறிய இந்த ஆர்ப்பாட்டத்துக்கு அழைத்துவரப்பட்டோம் என அந்த மக்கள் தெரிவித்தனர். (க-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# புதுவழிகாட்டிப் பொறியினுள் வீழ்த்தும் பிந்திய தந்திரம்...!

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக ஜனாதிபதியால் உருவாக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரி வுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இணைத்துக்கொள்ளும் முயற்சி இதுவரை வெற்றி அளிக்கவில்லை.

பேச்சை ஆரம்பிப்பதற்கு அடிப்படையாக கூட்டமைப் பால் இனம் காணப்பட்ட அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை நீக்கவேண்டும் என்று 'அரி ஓம் நம' வெனத் தொடக்கி வைத்தவர் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ. அதனை அடுத்து அமைச்சர்கள் பஸில் ராஜபக்ஷ, விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க என்று பலரும் கோஷ்டி சேர்ந்தனர். மல்வத்த, அஸ்கிரிய மகா நாயக்கர்களின் ஆதரவைத் தேடியும் அவர்கள் சென்றிருந்தனர்.

அதன் விளைவாக, பெறுபேறாக அரசு - கூட்டமைப்புப் பேச்சுவார்த்தைக்கான கதவுகள் இடைக்காலத்தில் மேலும் இறுக்கி மூடப்பட்டுள்ளன.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை விசாரணை செய்த தெரிவுக்குழுவின் செயற்பாடுகளால் கூட்டமைப்பு இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான தெரிவுக்குழுவில் முற்றாக நம்பிக்கை இழந்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எந்த முகத்துடன் ஜனாதிபதி பேச்சுக்கு அழைக்கப்போகிறார் என்ற கேள்வி எழுந்த நிலையில், அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்துக்கு அமைச்சர்களினதும் எம்.பிக்களினதும் ஆதரவைப் பெறும் முயற்சி முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதுவரை 31 எம்.பிக்களின் கையொப்பம் பெறப்பட்டுவிட்டது. அவர்களில் 15 பேர் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள். இதுவரை கையொப்பமிட்டோரில் அமைச்சர் மேர்வின் சில்வாவும் அடங்கி இருக்கிறார். அமைச்சர்களான டியூ குணசேகர, டக்ளஸ் தேவானந்தா, ஆறுமுகன் தொண்ட மான், திஸ்ஸவிதாரண, ரவூப் ஹக்கீம் ஆகியோரும் அடங்கி உள்ளனர் என்று தகவல்கள் வெளியாகி வருகின்றன.

அரசில் மிகவும் சக்திவாய்ந்தவர்களாகக் கருதப்படும் கோத்தபாய ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ ஆகியோர் அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை நீக்கி மாகாண சபைகள் முறைமையை ஒழிக்கவேண்டும் என்ற கருத்து வெளியிட்ட நிலையில், அமைச்சர்கள் பலர் 13 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தபோது பலருக்கும் ஆச்சரியம் அளித்திருக்கலாம்.

தமிழ் மக்களின், தமிழ் பேசும் மக்களின் அற்ப சொற்ப சலுகைகளையும் பறிக்க கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் அரசில், இத்தகையோருமா என்று பலரும் மூக்கில் கைவைத்தனர். ஆனால் 13க்கு ஆதரவான குழுவினர் தம்முடன் இணையுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு விடுத்துள்ள அழைப்பு இந்தக் குழுவின் குழிபறிக்கும் உண்மையான நோக்கத்தை வெளிக்கொண்டுவந்துவிட்டது!

13க்கு ஆதரவாகச் செயற்பட்டு முதலில் கூட்டமைப்பின் நம்பிக்கையைப் பெறுவது, அதன் பின்னர் தெரிவுக்குழுவுக்குள் கூட்டமைப்பைக் கொண்டுவருவதற்கான முயற்சியை ஆரம்பிப்பது, இதுவே அவர்களது திட்டம் என்பது வெள்ளிடைமலைபோலத் தென்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் இணைந்து கொள்வதற்கு ஒரேயொரு முன்னிபந்தனையை மட்டும் விதித்துள்ளது. அரசதரப்புக்கும் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுகளில் தம்மால் முன்வைக்கப்பட்ட, முன்னுரிமை கோரப்பட்ட விடயங்களே தெரிவுக்குழுவின் பரிசீலனைக்கு விடப்பட வேண்டும் என்பதே அதுவாகும். அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் ஒரு கோரிக்கையாக ஒருபோதும் இருக்கவில்லை என்பது வெட்டவெளிச்சமானது.

ஏற்கனவே அரசமைப்பில் உள்ள ஒரு விடயத்தை நீக்கப் போவதாகப் பூச்சாண்டி காட்டிவிட்டு, அதனைப் பாதுகாக்கப் போவதாகக் கையெழுத்து வேட்டை நடத்துவது தெரிவுக் குழுவுக்குள் கூட்டமைப்பைக் கொண்டுவரும் இறுதி முயற்சி அன்றி வேறல்ல. இது ஒருவகையில் கீச்சுமாச்சுத் தம்பளம் கீயா மாயாத் தம்பளம்தான்...!

அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை அடிப்படை யாக வைத்து அரசியல் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு கூட்டமைப்பு தயாராக இருக்கிறது. 13 ஆவது திருத்தம் இன்று அரசியலில் மிகவும் காத்திரமான, காட்டமான, உணர்வுபூர்வ மான ஒன்றாக மாறி விட்டது. அதற்கு ஆதரவு தெரிவித்து ஒப்பந்தம் பெற்று ஜனாதிபதியிடம் அனுப்புவதன் மூலம் அதன் இருப்புக்கு உத்தரவாதம் பெறமுடியாது. அரசில் உள்ள மூத்த அமைச் சர்கள் மனம் மாறவேண்டும். அதா வது அரசு முற்று முழுதாக மனம் மாறவேண்டும். அதற்கு ஆதரவாகப் பகிரங்கமாக அவர்கள் குரல்கொடுக்கவேண்டும்.

அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தைத் தக்க வைக்க முடியும் என்று இந்தியாவினால் கூட உத்தரவாதம் அளிக்க முடியாத நிலைமையே இன்று காணப்படுகிறது.

எனவே, அரசாங்கத்தின் புதிய புலுமாசில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எடுபடமாட்டார்கள் என்று நம்பு கிறோம். அதனை ஏறெடுத்தும் பார்க்கக் கூடாது என்று தமிழ் மக்கள் சார்பில் நாம் அழுத்திக் கூற விரும்புகிறோம். புது வழிகாட்டிப் பொறியினுள் வீழ்த்தும் அரசின் பிந்திய தந்திரத்தைப் பிசுபிசுக்கச் செய்யும் திறமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உண்டா எனும் பரீட்சையாகவும் கொள்ளலாம்.

# இலங்கையில் 35 வீதமான இறப்புகள் தொற்றா நோய்களால் ஏற்படுகின்றன

## யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.11

இலங்கையில் 35 வீதமான இறப்புகள் தொற்றா நோய்களால் ஏற்படுகின்றன. குறிப்பாக இருதய நோய், நீரிழிவு நோய் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இவற்றுக்கு தற்கால வாழ்க்கை முறை, சுகாதாரமான ஆரோக்கியமான உணவுப் பழக்க முறைகள் இல்லாமை என்பன சாதகமாக அமைந்துவிடுகின்றன.

இவ்வாறு கூறினார் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன்.

வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் நடத்திய தேசிய சுகாதார வாரத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது:-

சுகாதாரத் திணைக்களத்தால் கடந்த வருடங்களில் டெங்குக் கட்டுப்பாட்டு வாரம், நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் என மக்கள் மத்தியில் சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனுஷ்டிக்கப்பட்டன.

இலங்கையின் 65 வருடகால சுகாதார சேவைகள் வரலாற்றில் மூன்று முக்கிய செயற்பாடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது.

இவற்றில் தொற்றுநோய்களின் கட்டுப்பாடு (மலேரியா), தடுப்பூசிகள் மூலம் தடுக்கக்கூடிய நோய்கள், தாய் சேய் நல மேம்பாடு போன்றவற்றுக்கான செயற்திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அந்தக் காலப் பகுதிகளில் தாய், சேய் மரணம் மிக அதிகமாகக் காணப்பட்டதால் சுகாதார சேவைகள் நடவடிக்கைகள் மூலம் அவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்தது.

தெற்காசிய நாடுகளிலேயே மிகச் சிறந்த சுகாதார குறிகாட்டி நாடாக இலங்கையை எடுத்துக் கொள்ளலாம்.

தற்போது புதிய தொற்று நோய்கள், டெங்கு நோய் பரவலாக்கம் என்பவை சுகாதாரத் துறைக்கு ஒரு சவாலான விடயமாக உள்ளது.

இவற்றைவிட தொற்றா நோய்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. 2008 ஆம் ஆண்டு 65 வீதமான இறப்பு தொற்றாநோய்களால் ஏற்பட்டன. தற்போது 35 வீதமான இறப்புகள் நீரிழிவு நோய், இருதய நோய் போன்ற தொற்றா நோய்களால் ஏற்படுகின்றன.

அபிவிருத்தி அடைந்த நாடுகளின் நோய் பரம்பலுக்கு ஏற்ற நிலையை இலங்கையும் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

இரண்டு முதல் 4 மடங்கு அதிகரித்தும் வருகின்றன. இலங்கையில் வருடாந்தம் இருதய நோய், நீரிழிவு நோய் என்பவற்றால் 330 பேர் இறக்கின்றனர். இதில் மூன்றில் ஒரு பங்கினர் நோய் இருப்பதை அறியாதவர்களாக இருந்துள்ளனர்.

எனவே, தொற்றாநோய்கள் தற்போது பெரிய பிரச்சினையாக எழுந்துள்ளதால் ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்து நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாப்போம்.-என்றார். (ம-14)

நிர்வாக சேவை தரம் III இற்கு தெரிவானோர்

# தொடர்ந்தும் அதே பாடசாலையில் அதிபர்களாக நியமனம்

தென்மராட்சி, டிசெ.11

தென்மராட்சி கல்வி வலயத்தில் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு தெரிவு செய்யப்பட்ட இரு அதிபர்கள் தொடர்ந்தும் அதே பாடசாலையில் அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் கடந்த முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் உள்ளவர்களே அதிபர்களாகக் கடமையாற்ற ஆளணி வெற்றிடம் காணப்பட்டதால் இவர்கள் அந்த இடங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சி.சிவநாதன், மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.அதிபர் வ.கந்தசாமி ஆகியோரே நியமனம் பெற்றுள்ளவர்களாவர்.

தென்மராட்சி கல்வி வலயத்துக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் அ.அகிலதாஸ், நாவற்குழி ம.வி. அதிபர் திருமதி வ.மேகலிங்கம் ஆகியோர் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இல் தெரிவு செய்யப்பட்டு பிரதிக் கல்விப் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

# அபிவிருத்திப் பணிக்கு ரூ.46 லட்சத்து 64 ஆயிரம்

வடமராட்சி, டிசெ.11

பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவுகளில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள என்று யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத்திட்டத்தின் கீழ் 46 லட்சத்து 64 ஆயிரத்து 50 ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளனர்.

இந்த நிதியில் இருந்து இரு பிரதேச செயலர் பிரிவுகளில் 83 அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப் படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் 32 அபிவிருத்தித் திட்டங்கள் 19 லட்சத்து 73 ஆயிரத்து 950 ரூபா செலவிலும், கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் 51 அபிவிருத்தித் திட்டங்கள் 26 லட்சத்து 90 ஆயிரத்து 100 ரூபா செலவிலும் மேற்கொள்ளப்படவுள்ளன என்று அந்தப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம-8)

# 740 இந்துக் கோயில்களை புனரமைக்க 750 லட்சம் ரூபா

## நாடு முழுவதுக்குமான ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், டிசெ.11

இந்த வருடம் நாடு முழுவதிலும் உள்ள 740 இந்துக் கோயில்களைப் புனரமைப்பதற்கு 750 லட்சம் ரூபா நிதி புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சால் ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 73 கோயில்கள் புனரமைப்பதற்கு 82 லட்சம் ரூபாவும், கிளிநொச்சியில் 53 கோயில்கள் புனரமைப்பதற்கு 53 லட்சம் ரூபாவும், முல்லைத்தீவில் 78 கோயில்கள் புனரமைப்பதற்கு 78 லட்சம் ரூபாவும், மன்னாரில் 56 கோயில்கள் புனரமைப்பதற்கு 56 லட்சம் ரூபாவும், வவுனியாவில் 8 கோயில்கள் புனரமைப்பதற்கு 8 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

திருகோணமலையில் 33 கோயில்கள் புனரமைப்பதற்கு 33 லட்சம் ரூபாவும், மட்டக்களப்பில் 114 கோயில்கள் புனரமைப்பதற்கு 114 லட்சம் ரூபாவும், அம்பாறையில் 101 கோயில்கள் புனரமைப்பதற்கு 101 லட்சம் ரூபாவும், அநுராதபுரத்தில் 7 கோயில்கள் புனரமைப்பதற்கு 11 லட்சம் ரூபாவும், பதுளையில் 37 கோயில்கள் புனரமைப்பதற்கு 37 லட்சம் ரூபாவும், கொழும்பில் 4 கோயில்கள் புனரமைப்பதற்கு 4 லட்சம் ரூபாவும், களுத்துறையில் 6 கோயில்கள் புனரமைப்பதற்கு 6 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கண்டியில் 47 கோயில்கள் புனரமைப்பதற்கு 47 லட்சம் ரூபாவும், கேகாலையில் 25 கோயில்கள் புனரமைப்பதற்கு 25 லட்சம் ரூபாவும், குருநாகலில் ஓர் ஆலயத்துக்கு ஒரு லட்சம் ரூபாவும், மாத்தளையில் 8 கோயில்கள் புனரமைப்பதற்கு 8 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மாத்தறையில் 6 கோயில்கள் புனரமைப்பதற்கு 6 லட்சம் ரூபாவும், மொனராகலையில் ஓர் ஆலயம் புனரமைப்பதற்கு ஒரு லட்சம் ரூபாவும், நுவரெலியாவில் 52 கோயில்கள் புனரமைப்பதற்கு 52 லட்சம் ரூபாவும், பொலன்னறுவையில் ஓர் ஆலயம் புனரமைப்பதற்கு ஒரு லட்சம் ரூபாவும், புத்தளத்தில் 4 கோயில்கள் புனரமைப்பதற்கு 4 லட்சம் ரூபாவும், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இதனைவிட 10 மில்லியன் ரூபா செலவில், கதிர்காமத்திலுள்ள யாத்திரிகர் விடுதி புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் புதிய 2 மாடி யாத்திரிகர் விடுதி அமைப்பதற்கும் அடிக்கல் நடப்பட்டுள்ளது. (ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் சிங்களப் பாடசாலைகளுக்கு ஆளுநரின் உத்தரவில் ரூ.400 மில்லியன்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. குற்றச்சாட்டு

கடந்த காலப் போரினால் வடமாகாணத்தில் இன்னமும் நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலைகள் இயங்காதுள்ள நிலையில் வடமாகாண ஆளுநரின் உத்தரவின் பேரில் 400 மில்லியன் ரூபா வன்னி மாவட்டத்தில் வலிந்து குடியேற்றப்பட்டுள்ள சிங்களப் பகுதி உள்ளிட்ட சிங்களப் பாடசாலைகளுக்கும் மற்றும் முஸ்லிம் பாடசாலைகளின் நிர்மாண மற்றும் புனரமைப்புக்கும் வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினூடாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இவ்வருட நவம்பர் மாத பிற்பகுதியில் வடமாகாண ஆளுநரால் வடமாகாண கல்வி அமைச்சில் அதிகாரிகள் முன்னிலையில் நடத்தப்பட்டுள்ள விசேட கூட்டத்திலேயே மேற்கண்டவாறு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இங்கு இவ்வருட இறுதிக்குள் நடைமுறைக்கு வரும் வகையில் வவுனியா தெற்குக் கல்வி வலயத்தில் 22 சிங்களப் பாடசாலைகளும் மற்றும் முல்லைத்தீவு கல்வி வலயத்தில் 7 பாடசாலைகளுமாக மொத்தம் 29 சிங்களப்பாடசாலைகளும், மன்னார் கல்வி வலயத்தில் 10 முஸ்லிம் பாடசாலைகளும் முல்லைத்தீவு வலயத்தில் ஒரு பாடசாலையும் யாழ்ப்பாணத்தில் ஒரு பாடசாலையுமாக மொத்தம் 12 முஸ்லிம் பாடசாலைகள் திருத்துவதற்கும் மற்றும் புதிய நிர்மாண வேலைகள் தொடங்கப்படுவதற்கும் தெரிவு செய்யப்பட்டு அதற்கென ரூபா.400 மில்லியன் உடனடியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியில் முல்லைத்தீவில் ஒரு தமிழ்ப் பாடசாலையும் மன்னார் முள்ளிக்குளம் காயாக்குழி றோ.க.த.க. பாடசாலையும் நிர்மாண வேலைகளுக்காகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன.

அதன்படி 29 சிங்களப் பாடசாலைகளுக்கு ரூபா 193 மில்லியனும் 12 முஸ்லிம் பாடசாலைகளுக்கு ரூபா 115 மில்லியனும், தமிழ் பாடசாலைக்கு ரூபா 11 மில்லியனும், றோ.க.த.க. பாடசாலைக்கு ரூபா 5 மில்லியனும் வேலைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இவற்றுள் மூன்று மாணவர்கள் மட்டுமே கல்வி பயிலும் சிங்களப் பாடசாலை ஒன்றுக்கு ரூபா 45 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனை விட கொக்கச்சான்குளம் தமிழ் கிராமம் பின்னர் கலாபோகஸ்வெவ எனப் பெயர் மாற்றப்பட்டுச் சிங்களவர்களைக் குடியேற்றி அங்குள்ள பாடசாலைக்கு 2 வகுப்பறைக் கட்டடம், 2 வீதிகள், மலசலகூடம், விளையாட்டு மைதானம் ஆகிய புதிய நிர்மாண வேலைகளுக்கும் தளபாடங்கள் கொள்முதலுக்காகவும் ரூபா. 98 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரியகுண்டான்சோலை என்னும் பூர்வீகத் தமிழ் கிராமம், 'அதவட்டுவெவ' என சிங்களக் குடியேற்றமாக்கப்பட்டு அங்குள்ள சிங்களப் பாடசாலைக்கு பிரார்த்தனை மண்டபம், வகுப்பறைகள், அலுவலகம், கேற்வேலி முதலானவை நிர்மாணிப்பதற்கும் விடுதிகள் திருத்த வேலைகளுக்குமாக ரூபா. 111 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதனை விட, புதிதாக முல்லைத்தீவு வலயத்துடன் இணைக்கப்பட்ட வெலிஓயா கோட்டக் கல்வி அலுவலக திருத்த வேலைக்கும் அதன் கீழ்வரும் முல்லைத்தீவு கல்யாணிபுர வித்தியாலயத்துக்கான கேற்வேலி நிர்மாணிப்பதற்கும் ரூபா 65 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப் பாடசாலையானது ஜனவரி 2013 இலிருந்து வெலிஓயா கல்விக் கோட்டத்துடன் இணைக்கப்படும்.

மேலும் வெலிஓயா கோட்டத்தில் இதுவரை சம்பத்நுவர மகா வித்தியாலயம், அகதுகஸ்வெவ வித்தியாலயம், அதாவட்டுநுவெவ வித்தியாலயம், கிரிஎப்பன்வெவ வித்தியாலயம், ஜனகபுரம் வித்தியாலயம் ஆகிய ஐந்து சிங்களப் பாடசாலைகளே நிர்வாக ரீதியாக இணைக்கப்பட்டிருந்தன. ஆனால், புதிதாக இக் கோட்டத்தில் கல்யாணிபுர வித்தியாலயமும் கஜபாபுர வித்தியாலயமும் பரணகம வித்தியாலயமும் இணைக்கப்படவுள்ளன. விலைக் கேள்வி கோரலில் முல்லைத்தீவு பரணகம வித்தியாலயத்துக்கு வகுப்பறைக் கட்டடம் இரண்டும் விடுதி நான்கு கொண்ட தொகுதி இரண்டும், மலசலகூடம், கிணறு, சிறுநீர் கழிப்பகம், நீர்த்தாங்கி, சுற்றுமதில், கேற் மற்றும் வேலி ஆகியன புதிதாக நிர்மாணிப்பதற்கு ரூபா 3 கோடியே ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

வெலிஓயா கோட்டத்துக்கு மொத்தம் ரூபா 81 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இங்குள்ள பாடசாலைகள் எவை எவை இந்தக் கோட்டத்துக்குள் அடங்குகின்றன என்று யாருக்கும் தெரியாமல் பார்த்துக்கொள்ளப்படுகின்றது. இந்தக் கோட்டத்தில் புதிய பாடசாலை இணைப்புக்கள் இத்தகைய விலைக் கேள்விக்கான கோருதல் மூலமே வெளி உலகுக்கு தெரியவருகின்றன.

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் இறுதியாக மீள்குடியேற்றப்பட்ட இடங்களில் ஆனந்தபுரம் அ.த.க. பாடசாலை முழுமையாகச் சேதமடைந்து பாடசாலைக் கட்டடம் இல்லாதுள்ளது. மேலும் அரசரட்ணம் தமிழ் வித்தியாலயம், வேணாவில் முருகானந்தா, புதுக்குடியிருப்பு றோ.க.த.க. வித்தியாலயம், அம்பலவன் பொக்கணை மகா வித்தியாலயம் மாத்தளன் அ.த.க. வலைஞர்மடம் அ.த.க. மற்றும் சிவநகர் தமிழ் வித்தியாலயம் ஆகிய ஒன்பது பாடசாலைகள் கூரைகளில்லாமலும் கட்டடங்கள் உடைந்தும் மலசல கூடங்கள் இல்லாமலும் உள்ளன. இங்கு புதிய நிர்மாண, திருத்த வேலைகள் அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டும்

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் மட்டுமன்றி வடமாகாணத்தில் கல்வி அபிவிருத்திக்கு இன்னமும் பெரிய வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதோடு நிதியும் ஒதுக்கீடு செய்யப்படவும் வேண்டியுள்ள இந்த நேரத்தில், இங்குள்ள கல்வி நிர்வாகத்தைச் சுதந்திரமாக இயங்கவிடாமலும் அவசரம் அவசரமாகப் பெருந்தொகைப் பணத்தைச் சிங்கள மற்றும் முஸ்லிம் பாடசாலைகளுக்கு வாரியிறைக்கும் அரச நிர்வாகத்தின் இந்தச் செயற்பாடானது எமது மக்களின் கல்வி வளர்ச்சிக்கும் வடக்கின் அபிவிருத்திக்கும் எத்தகைய முக்கியத்துவமும் வழங்கவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.- என்றார். (த)

## குண்டும் குழியுமாக மாறியுள்ள புதுக்குடியிருப்பு – மாத்தளன் வீதி

முல்லைத்தீவு, டிசெ.11

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு - மாத்தளன் வீதி மீளவும் குன்றும் குழியுமாக மாறியுள்ள நிலையில் இந்த வீதியூடாக பயணிக்கும் பலரும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு சந்தியில் இருந்து மாத்தளன் வரைச் செல்லும் பிரதான வீதி கடந்த பல ஆண்டுகளாகப் புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாக காணப்பட்டதுடன் இதனூடாகப் பயணிப்போர் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வந்த நிலையில் கடந்த மாதம் குறித்த வீதி தற்காலிகமாகப் புனரமைக்கப்பட்ட நிலையில் தற்போது பெய்த பருவமழையால் குறித்த வீதி மீளவும் சேதமடைந்து பயணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால் இவ்வீதியைத் தினமும் பயன்படுத்தும் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பல தரப்பட்டவர்களும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (த-6)

## உரிமைகளை வென்றெடுக்க தொடர்ந்து குரல் கொடுங்கள்

### சட்ட உதவி ஆணைக்குழுப் பணிப்பாளர் கூறுகிறார்

கிளிநொச்சி, டிசெ.11

சிறிய சிறிய உரிமைகளுக்குக் கூட குரல் கொடுக்காத எந்தச் சமூகமும் தமது பெரிய உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முன்வராது. இந்த நிலையை நாம் ஒன்றிணைந்து எமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் எனச் சட்ட உதவி ஆணைக்குழுவின் கிளிநொச்சி மாவட்ட பணிப்பாளர் எஸ்.விஜயராணி தெரிவித்துள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் நாள் கிளிநொச்சி மனித உரிமைகளுக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் கரைச்சிப் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய சட்ட உதவி ஆணைக்குழுவின் கிளிநொச்சி மாவட்டப் பணிப்பாளர் திருமதி விஜயராணி சதீஸ்குமார் மேலும் தெரிவித்ததாவது:-

மனித உரிமைகள் என்பது எங்களைப் பொறுத்த வரையில் ஒரு கூட்டமாக அல்லது நிகழ்வாக அமைந்து விடுகின்றது. மனித உரிமை மீறல்கள், சர்வதேசத்துக்கு கொண்டு செல்லப்பட வேண்டுமானால் எங்களிடையே இருக்கின்ற பயம் என்ற தடையைத்தாண்ட வேண்டும். எதை எடுத்துக் கொண்டாலும் பயந்து வாழும் சமூகமாக எமது சமூகம் தள்ளப்பட்டுள்ளது.

சாதாரண மனித உரிமைகளைப் பேணுவதற்குத் தயாராக இல்லாத நிலையில் முழு உரிமைகளையும் பெற்றெடுப்பது என்பது சாத்தியமற்றதாகவே இருக்கும்.

குறிப்பாகப் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளைச் செய்யும்போது தமிழ் மொழியை பேசுபவர்கள் தமிழில் முறைப்பாடுகளைச் செய்ய வேண்டும். ஆனால் சிங்கள மொழியில் எழுதப்படுகின்ற முறைப்பாட்டுக்குக் கையொப்பமிடப்பட வேண்டிய நிலையே அதிகம் காணப்படுகின்றது. இந்த நிலையால் தமிழ் மொழியைப் பேசுபவர்கள் தமிழில் முறைப்பாடுகளை எழுதுவதில்லை. ஏன் என்று கேட்கின்ற அந்தச் சிறிய உரிமையைக் கூட கேட்டுப் பெற முடியாதவர்களாக நாங்கள் இருக்கின்றோம்.

குறிப்பாக வடக்கு- கிழக்கில் இந்த நிலைமை மிக மோசமாக இருக்கின்றது- என்றார். (த-6)

## கோரக்கன் கட்டுக் கிராமம் அபிவிருத்தியில் புறக்கணிப்பு

கிளிநொச்சி, டிசெ.11

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கோரக்கன் கட்டு கிராமம் அபிவிருத்திப் பணிகள் எவையுமின்றிப் புறக்கணிக்கப்பட்டு வருவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கோரக்கன் கட்டு கிராமத்தில் கடந்த 2010 ஆம் ஆண்டு மக்கள் மீளக்குடியமர்ந்ததன் பின்னர் ஏனைய பகுதிகளில் நடைபெறுகின்ற அடிப்படைக் கட்டுமானப் பணிகள் கூட இந்தக் கிராமத்தில் மேற்கொள்ளப்படவில்லை. இந்தக் கிராமத்தின் புலேந்திரன் குடியிருப்பில் 250 இக்கும் மேற்பட்ட குடும்பங்களும் வை.எம்.சி.ஏ.வீதிக்குடியிருப்பில் 52 குடும்பங்களும் வாழ்ந்து வருகின்றன.

இந்த நிலையில் வை.எம்.சி.ஏ. குடியிருப்புக்குச் செல்லும் பிரதான வீதியும், கரைக்கட்டு புலேந்திரன் குடியிருப்புக்கு செல்லும் பிரதான வீதியும் மிகமோசமாகச் தேசமடைந்த நிலையில் இரு வீதிகளிலும் இரண்டு மூன்று இடங்களில் மழை நீர் தேங்கிக் காணப்படுகின்றன.

இதனால் இப்பகுதிகளில் வாழும் குடும்பங்கள் போக்குவரத்துச் செய்வதில் தினமும் சிரமங்களையே எதிர்கொண்டு வருகின்றன.

இந்தக் குடியிருப்புக்களில் உள்ள பாடசாலை மாணவர்கள் தினமும் பாடசாலைக்குச் செல்லும் போது பாதணிகளையும் சீருடைகளையும் கழற்றி பிரதான வீதிக்கு வந்தே அவற்றை அணிந்து செல்கின்ற நிலைமை காணப்படுகிறது.

குறித்த பகுதிகளின் பிரதான வீதியோ அல்லது ஏனைய குடியிருப்பு வீதிகளோ புனரமைக்கப்படவில்லை. இதைவிட வேறு எந்த அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்படவில்லை. நிரந்தரமான கிராம அலுவலர் கூடக் கடந்த இரண்டு வருடங்களாக நியமிக்கப்படாமல் பரந்தன் கிராம அலுவலரே பதில் கடமை புரிந்து வருகின்றார்.

இவ்வாறு பல வழிகளிலும் தமது கிராமம் புறக்கணிக்கப்பட்டு வருவதாக இந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (த-6)

## மனித உரிமைகள் தின நிகழ்வு கிளிநொச்சியில்

கிளிநொச்சி, டிசெ.11

சர்வதேச மனித உரிமைகள் நாள் நிகழ்வுகள் மனித உரிமைகளுக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் நடைபெற்றுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபை மண்டபத்தில் நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு உலகத் தமிழர் பண்பாட்டு மையத்தின் கிளிநொச்சி மாவட்ட தலைவர் அ.சத்தியானந்தம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மனித உரிமைகள் அமைப்பின் பணிப்பாளராக இருந்து கொல்லப்பட்ட அருட் தந்தை எம்.எக்ஸ். கருணாரட்ணம் அடிகளாரின் திருவுருவப்படத்துக்கான சுடர் ஏற்றி வைக்கப்பட்டு மலர் வணக்கம் நடைபெற்றது. தொடர்ந்து மெழுகுவர்த்திப் பிரார்த்தனை நடை பெற்றதையடுத்து மனித உரிமைகள் தொடர்பான கருத்துரைகளை இலங்கைச் சட்ட உதவி ஆணைக்குழுவின் கிளிநொச்சி மாவட்டப் பணிப்பாளர் திருமதி எஸ்.விஜயராணி, கிளிநொச்சி பங்குத் தந்தை வண. பிதா எஸ். அன்ரன் ஜோர்ச், கரைச்சிப் பிரதேச சபையின் தலைவர் நாவை.குகராசா ஆகியோர் வழங்கினர்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், காணாமற்போன உறவுகளின் பெற்றோர்கள், உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (த-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்



### சங்கரப்பிள்ளை நடராசா

மணற்பிட்டி காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை நடராசா நேற்று (10.12.2012) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை -கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், முருகேசு-பார்வதி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற மீனாட்சியின் அன்புக் கணவரும், புவனேஸ்வரி, நித்தியானந்தன், காலஞ்சென்றவர்களான புனிதவதி, கனகசுந்தரம் மற்றும் புஸ்பராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், குழந்தைவேலு, குணம், சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2012) செவ்வாய்க் கிழமை காலை 8 மணியளவில் தற்காலிக வசிப்பிடமான அறுகம்புலம் காரைநகர் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அறுகம்புலம்,
காரைநகர்.

தகவல்:
நித்தியானந்தன்
(மகன்)

### திருமதி சோமு சிவப்பி



ஆவரங்கால் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதிசோமு சிவப்பி நேற்று (10.12.2012) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமுவின் பாசமிகு மனைவியும், இராசலிங்கம், வில்வராணி, கமலேஸ்வரி, தர்மராச, அனுஷா, கரன் ஆகியோரின் பாசமிகு தாயும், தவராணி, தேவராசா, பாலேந்திரன், சுதர்ஷினி, சிவேஸ்வரன், சுரேக்கா ஆகியோரின் அன்பு மாமியும், குகந்தன், றம்யா, இந்துஷா, சஜிந்தன், கரீஸ், மாசித்தியா, ஜீவிகன், ருக்சான், யூட்சன், நித்தியா, தனுஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆவரங்கால் கிழக்கு புத்தூரில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (11.12.2012) செவ்வாய்க்கிழமை நடைபெற்று பிற்பகல் ஒரு மணிக்கு ஆவரங்கால் கிழக்கு கவுடுதூது இந்துமயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆவரங்கால் கிழக்கு,
புத்தூர்.

(C/2143)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.

## மோசமான நிலையில் சிதம்பரபுரம் வீதிகள்

நெளுக்குளம்,டிசெ.11

வவுனியா சிதம்பரபுரம் கிராமத்தில் அமைந்துள்ள வீதிகள் புனரமைக்கப்படாது மோசமான நிலையிலுள்ளமையால் இங்குள்ள பலதரப்பட்ட மக்களும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாக இந்த வீதிகளுக்குப் பொறுப்பான பிரதேச சபைக்கு கடிதமூலம் தெரிவிக்கப்பட்டபோதிலும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லையென அவ்வூரைச் சேர்ந்த கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (க-402)




சோஷலிச முன்னிலைக் கட்சியைச் சேர்ந்த லலித், குகன் ஆகிய இருவரும் யாழ்ப்பாணத்தில் காணாமல் போய் ஒரு வருட நிறைவுநாளை முன்னிட்டு குறித்த கட்சியினர் கொழும்பு புறக்கோட்டை ரயில்நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கு பல்வேறு வேலைத்திட்டங்கள் ஆரம்பம்

கிளிநொச்சி, டிசெ.11

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் சிறுவர் துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளதுடன், இவற்றுடன் தொடர்புள்ளவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுள்ளனர். மேலும் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், சிறுவர் இல்லங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இங்குள்ள பின்தங்கிய பகுதிகளிலுள்ள குடும்பங்களில் ஏற்பட்ட முறையற்ற திருமணங்கள், பிரிவுகள் என்பன காரணமாகவும் சிறுவர்களின் உறவினர்களாலும் அதிகளவான துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதாகத் தெரியவந்துள்ளது.


**சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கும், சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அவ்வப் பகுதிகளில் உள்ள அல்லது கிராம ரீதியாக தெரிவுசெய்யப்பட்ட பொது அமைப்புக்கள், பெற்றோர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் இத்தகைய துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்த முடியும்.**

இந்த நிலையில் சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பது தொடர்பான பல்வேறு வேலைத்திட்டங்களை கிளிநொச்சி மாவட்டத்தின் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களில் சேவையாற்றுகின்ற சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர்.

அந்த வகையில் கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தின் காஞ்சிபுரம், கோரக்கன்கட்டு, பரந்தன், ஊரியான், பிரமந்தனாறு, கல்மடு நகர் உள்ளிட்ட இடங்களில் சிறுவரைக் காப்பாற்றும் செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கும், சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அவ்வப் பகுதிகளில் உள்ள அல்லது கிராம ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பொது அமைப்புக்கள், விழிப்புடன் செயற்படுவதுடன் பெற்றோர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் இத்தகைய துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்த முடியும் என சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (க-6)

### (Man) நடராசா சந்திரசேகரா
**(Retired Surveyor Department - Draughts Man)**



கொக்குவில் கிழக்கு நந்தாவிலைப் பிறப்பிடமாகவும், சம்பியன் வீதியை வசிப்பிடமாகவும்கொண்ட (man) நடராசா சந்திரசேகரா 6.12.2012 வியாழக் கிழமை கொக்குவிலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற (man) நடராசா சரஸ்வதி மற்றும் ஜெயரூபி தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான அருளானந்தம்-தையல்நாயகி தம்பதியரின் மூத்த மருமகனும், அருள்நாயகியின் அன்புக் கணவரும், கல்ப்பனா, கல்ப்பராஜ், பிரவீன்ராஜ் (பொப்பின்), கேதீஸ்ராஜ் (சிங்கிலி), துவாரகா ஆகியோரின் அன்புத் தந்தையும், குணேந்திரன், தேவகி, தயாறூபி, சேயோன் ஆகியோரின் அன்பு மாமனும், தர்ஜன், கீர்த்தனா, வானதி, திவ்யன், ஷமிரா, சாறானா, அஷானா, றியானா ஆகியோரின் அன்புப் பேரனும், பரராஜசேகரம், ஜெயராஜசேகரம், புவிராஜ சேகரம், காலஞ்சென்ற ஸ்ரீ சோமசேகரம் மற்றும் லலிதா, லீலா, ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திரலேகா, செல்வவதி, கலைவதனி, சறோஜினி, கனகசுந்தரம், காலஞ்சென்ற செல்வராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும், அருட்பிரகாசம், ஞானப்பிரகாசம், ஜெயப்பிரகாசம், ஜீவநாயகி காலஞ்சென்ற செல்வநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சகுந்தலா, மதனகலா, தபோதினி ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், மகேசானந்தத்தின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.12. 2012) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் கொக்குவில் இந்துமயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
0212052704 (சி/2139)(3.14) மனைவி, பிள்ளைகள்

## வெளியூர் வியாபாரிகள் கட்டணம் செலுத்தி அனுமதிப் பத்திரம் பெறுமாறு அறிவுறுத்து

### மன்னாரில் 15 ஆம் திகதி இடம் ஒதுக்கீடு

மன்னார், டிசெ.11

பண்டிகைக் காலத்தில் வியாபார நடவடிக்கைகளுக்காக வரும் வெளியூர் வியா பாரிகள் அதற்கான கட்ட ணத்தைச் செலுத்தி அனு மதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு, மன்னார் நகர சபையின் சார்பில் அதன் உறுப்பினரான ரட்ணசிங்கம் குமரேஸனால் தெரிவிக் கப்பட்டுள்ளது.

ஒவ்வொருவரும் தமக்கென ஒதுக்கீடு செய்யப்படும் 15 அடி நீளமும் 15 அடி அகலமும் கொண்ட நிலப்பகுதிக்கு 12 ஆயிரம் ரூபாவைக் கட்டணமாகச் செலுத்த வேண்டுமெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுவருடம் மற்றும் நத்தார் பண்டிகையை முன்னிட்டு வர்த்தக நடவடிக்கைகளுக்காக வரும் வெளியூர் வியாபாரிகளுக்கு மன்னார் பொது விளையாட்டு அரங்கில் எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் இடமொதுக்கப்படவுள்ளது.

கடந்த ஆண்டு பண்டிகைக் கால வியாபார நடவடிக்கைகள் மன்னார் நகர சபையின் பின்புற வீதியான எஸ்பிளேனட் வீதியில் மேற்கொள்ளப்பட்டது. எனினும் இவ்வருட விற்பனை நடவடிக்கை எதுவும் குறித்த எஸ்பிளேனட் வீதியில் இடம் பெறுவதற்கு எக்காரணம் கொண்டும் நகர சபையினால் அனுமதி வழங்கப்படமாட்டாதெனவும் நகர சபை உறுப்பினர் ரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் பண்டிகைக் காலவியாபாரத்தை முன்னிட்டு ஏராளமான வெளியூர் வியாபாரிகள் மன்னார் நகருக்கு வருகை தருவாரகளென எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-12)

## காணவில்லை

### இராசதுரை கஜேந்தினி



சித்தன்கேணி மற்றும் சண்டிலிப்பாய் வடக்கு ஆகிய இடங்களில் வசித்து வந்த **இராசதுரை கஜேந்தினி** (வயது-27) என்பவரை கடந்த 06.12.2012 ஆம் திகதி முதல் தெல்லிப்பழையில் இருந்து காணவில்லை. இவர் மனநோயால் பாதிக்கப்பட்டவர். காணமற்போன அன்று மண்நிறம் (பிறவுண்) உடை அணிந்தவர், இவரை கண்டவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)

தொடர்பு:
0777553111,
0773163581

(26679)(9.14)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவகாமிப்பிள்ளை விசுவநாதன்

இடைக்குறிச்சி வறணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விசுவநாதன் சிவகாமிப்பிள்ளை நேற்று (10.12.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் விசுவநாதனின் அன்பு மனைவியும், மதிவதனி (லண்டன்), திலகேஸ்வரன், இளம்பிறைநாதன் ஆகியோரின் அன்புத் தாயும், சிறிவிஸ்வநாதன் (லண்டன்), கமலலோசனி (ஆசிரியை, கொடிகாமம் அ.த.க.பா) ஆகியோரின் அன்பு மாமியும், சர்மிலன் (லண்டன்), சரண்ஜன் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2012) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இடைக்குறிச்சி வடக்கு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.122, இடைக்குறிச்சி,
வறணி.

தகவல்:
வி.இளம்பிறைநாதன் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## சி.யோகம்மா

காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும், உயரப்புலம் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் தற்போது சுவிஸில் வசித்தவருமான சின்னத்துரை யோகம்மா (08.12.2012) சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரவேலு -அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா சின்னத்துரையின் அன்பு மனைவியும் மற்றும் நவரத்தினம், குணரத்தினம் காலஞ்சென்ற இராசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவராசா, சிவகௌரி ஆகியோரின் பாசமிகு தாயும், பாலசுப்பிரமணியம், சித்திரா ஆகியோரின் அன்பு மாமியும், சில்விஜா, யூலிஜா, சிவசொரூபன், சிந்துஜா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அபிவின்ஜா, ராகவின்ஜா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (13.12.2012) வியாழக்கிழமை சுவிஸ் நாட்டிலுள்ள Friedental Friedhof Friedentalstrasse 606004 Luzern Swiss Hall இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில் வராகி**
**அம்மன் கோயிலடி.**
**சிவசொரூபன்** -0773275235 (26678)(9.14)

**தகவல்: குடும்பத்தினர்.**
0041412405206 (Swiss
**-சிவகௌரி)**

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.
## 2013ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தை, கருவாட்டுக் கடைகள் மீன் வெட்டுமிடம் என்பவற்றை 01.01.2013 தொடக்கம் 31.12.2013 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல | விவரம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற் வரி தவிர) | மாத வாடகை (வற் வரி தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | சுன்னாகம் மத்திய மரக்கறிச் சந்தை (வாகனத் தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 5670000.00 | |
| 2 | சுன்னாகம் சந்தை மீன் வெட்டுமிடம் | 750.00 | 7500.00 | 89100.00 | |
| 3 | சுன்னாகம் மீன் சந்தை | 1000.00 | 10000.00 | 810000.00 | |
| 4 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை இல 1 | 1000.00 | 10000.00 | 1513000.00 | 250.00 |
| 5 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக்கடை இல 2 | 1000.00 | 10000.00 | 226000.00 | 250.00 |
| 6 | சுன்னாகம் கருவாட்டுக்கடை இல 3 | 750.00 | 7500.00 | 36000.00 | 250.00 |
| 7 | கோழி உரித்தல் | 750.00 | 7500.00 | 81500.00 | 250.00 |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை (வாகன தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 11794500.00 | |
| 2 | இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை (கொத்தியாலடி கொல்களத்தில் ஆடுகள் வெட்டப்படுதல் வேண்டும்) | 500.00 | 5000.00 | 67500.00 | 250.00 |
| 3 | மல்வம் சந்தை | 500.00 | 5000.00 | 39600.00 | |
| 4 | மல்வம் மாட்டிறைச்சிக்கடை (கொத்தியாலடி கொல்களத்தில் மாடுகள் வெட்டப்படுதல் வேண்டும்) | 1000.00 | 10000.00 | 225000.00 | |
| 5 | மருதனார்மடம் சந்தை பொது மலசல கூடம் | 750.00 | 7500.00 | 40000.00 | |

1. கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் - 11.12.2012 - 19.12.2012 பி.ப 2.00 மணி வரை
2. கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித்திகதி - 20.12.2012 நண்பகல் 12.00 மணி வரை
3. கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி - 20.12.2012 பி.ப 2.00 மணிக்கு
4. கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை 13.11.2012 ஆம் திகதிய உதயன், தினக்குரல், வலம்புரி பத்திரிகையிலும், எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**தி.பிரகாஷ்,**
**தவிசாளர்,**
**வலி.தெற்கு பிரதேச சபை,**
**சுன்னாகம்.**
(C/2136)(2.6.7)

## மின்தடை

உயரழுத்த மின் மார்க்கக் கட்டமைப்புகளில் திருத்த வேலைகள் இடம் பெறவுள்ளதால் நாளை காலை 8 மணிதொடக்கம் மாலை 6 மணி வரை வல்லைச் சந்தியில் இருந்து உடுப்பிட்டி வீரபத்திரர் கோயிலடி வரையான பகுதியில் மின்சாரம் தடைபட்டிருக்கும் என மின்சார மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.(ஐ)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

### தேவை

யாழ். அக்கூரியம் கலர் மீன்கள் விற்பனை நிலையத்துக்கு வேலையாள்கள் தேவை.
941, K.K.S. வீதி, தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம்.
(26677)(3.14)

## கோழிக் குஞ்சு விநியோகம்



BAIRAHA No.1 புறொயிலர் குஞ்சுகள் 14.12.2012 விநியோகிக்கப்படும், பதிவுகளை மேற்கொள்ளவும்.

✱ றாஜீவ் நவாலி வீதி, ஆனைக்கோட்டை
T.P NO - 0776090926

✱ கதிர் வேளாண் கிளிநொச்சி,
T.P NO - 0772046803

✱ ஜென்சி பாம், 1ஆம் கட்டை , பருத்தித்துறை.
T.P NO - 0773541771

(26624)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் **சீனிவாசகம் பொன்னுத்துரை**



தோற்றம் 10.11.1935
மறைவு 02.11.2012

தோற்றமும் மறைவும்
இயற்கை வகுத்த நியதியென்றாலும்
இன்பமும் துன்பமும்
வாழ்வின் மேடையில்
அரங்கேறும் நாடகமானாலும்
பார்த்து பழகிய கண்களும்
பேசிப் பழகிய வாயும்
கேட்டு மகிழ்ந்த காதுகளும்
நினைவுகள் பதித்த உறுதியான
நெஞ்சம் கொண்ட அன்புத் தெய்வமே

*********

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (26672)(9.14)

தாவடி வடக்கு.
கொக்குவில்
(பாகுதேவன் புலம்)

**என்றும் உங்கள் நினைவுகளுடன் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் **பொன்னையா இராசாத்தி**



தோற்றம் 05.08.1939
மறைவு 11.11.2012

விட்ட கண்ணீர் காயவில்லை - இனி
விழிகளிலே நீரும் இல்லை உத்தமியே உன் நினைவு
உள்ளம் விட்டு அகலவில்லை என்னதான் செய்திடினும்
எம் சோகம் மாறவில்லை கொற்றவன் வந்து உன்னை
கொண்டுதான் சென்றது ஏனோ

கடந்த 11.11.2012 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (11.12.2012) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பாரதி வீதி கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (26675)(3.14) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## கிருஸ்ணபிள்ளை தயாளகிருஸ்ணன் (Accountant)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலியாவை (Canberra) தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை தயாளகிருஸ்ணன் கடந்த 08.12.2012 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை (ஆசிரியர் - தையிட்டி)- அன்னலட்சுமி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சின்னையா மற்றும் பூமணி தம்பதியரின் (சண்டிலிப்பாய்) மருமகனும், நாகசிரோன்மணியின் (கௌரி) அன்புக் கணவரும், பவன், லவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தகிருஸ்ணன் (மானிப்பாய்), சுகுணகிருஸ்ணன் (France) ஆகியோரது அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.12.2012) புதன்கிழமை Australia (Canberra) விலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக Australian Capital Territory மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

9, Folts Place,
Farrer, ACT 2607,
Australia. 0061262865213 (26627)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.
ஆஸ்பத்திரி ஒழுங்கை,
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய வீட்டுத்திட்ட பயனாளிகள் விவரம் மக்கள் பார்வைக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.11

இந்திய வீட்டுத்திட்டத்தில் புள்ளியடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளின் விவரம் பிரதேச செயலர் பிரிவுகளில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் 10 பிரதேச செயலாளர் பிரிவுகளில் முதற்கட்டமாக இந்த விவரங்கள்காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

முதற்கட்டத்தில் 500 வீடுகள் மாதிரி தெரிவு முறையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டத்தில் 8 ஆயிரத்து 117 வீடுகள் 10 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளன.

மார்ச் இரண்டாம் திகதிக்குள் உட்கட்டுமானப் பணிகளை நிறைவு செய்து பயனாளிகளுக்கு வீடுகள் கிடைக்க வேண்டும் என்பது இந்திய அரசின் முடிவு.

யாழ்.மாவட்டத்தில் 50 ஆயிரம் வீடுகளுக்கான கருத்திட்டம் முன்வைக்கப்பட்டு 44 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்கு இந்திய அரசு சம்மதம் தெரிவித்துள்ளது.

முதற்கட்டமாக 8 ஆயிரத்து 117 வீடுகளை அமைக்க உரிய காலத்தில் நிதி மக்களுக்கு சென்றடையாது விட்டால் நிதி திரும்பி விடும் நிலைமை ஏற்படும் என்று கூறப்பட்டது.

எனவே புள்ளி அடிப்படையில் காட்சிப்படுத்தப்பட்ட விடயங்களில் ஏதாவது தவறுகள், சேர்க்கப்பட்ட வேண்டியவை, நீக்கம் செய்யப்பட வேண்டியவை இருந்தால் உடன் செயலக குழு பரிந்துரை செய்து நடவடிக்கைகளைத் துரிதப் படுத்த வேண்டும் என யாழ். செயலகம் கேட்டுள்ளது.

இதேவேளை, புள்ளி அடிப்படையில் காட்சிப் படுத்தப்பட்ட பெயர், விவரம் தொடர்பான விடயங்களில் முறைகேடுகள் இடம் பெற்றால் உடன் பிரதேச செயலருக்கு எழுத்து மூலம் அறிவிக்குமாறும் யாழ்.செயலகம் கேட்டுள்ளது. (ம-50)

## வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்துக்கு கணினிகள்

வலி.தென்மேற்கு,டிசெ.11


வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்துக்குத் தேவையான கணினிகள் உட்பட தளபாடங்கள் கொள்முதல் செய்யப்படவுள்ளன.

தலைவர் அ.ஜெபநேசன் தலைமையில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மானிப்பாய் நகர சபை மண்டபத்தின் சிறிய கட்டடத்தில் இடநெருக்கடி மத்தியிலும் வசதியீனங்கள் மத்தியிலும் ஆரம்ப காலத்திலிருந்து இயங்கி வந்த வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகம் பொதுமக்கள் இணைந்து வாங்கிக் கொடுத்த காணியில் 400 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள மாடிக் கட்டடத்தில் தற்பொழுது இயங்கி வருகின்றது.

தலைமை அலுவலகத்தில் தளபாடங்கள், கணினிகள் போன்றவற்றுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறை குறித்து பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

தற்போதைய நிதி நிலையைக் கருத்தில் கொண்டு அவசர தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தேவையான தளபாடங்களையும், கணினிகளையும் கொள்வனவு செய்வதற்கு சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-115)



யாழ்.நகர்மைய றோட்டறக் கழக அங்கத்தவர்கள் அண்மையில் சைவபரிபாலன சபை மண்டபத்தில் இரத்ததானம் செய்த வேளையில்... (ம)

# நெடுந்தீவில் கட்டுமானப் பணிகளுக்கு வெளியிடங்களில் இருந்து பொருள்கள்

## துறைமுகத்தில் ஏற்றி இறக்குவதில் நெருக்கடி

யாழ்ப்பாணம்,டிசெ.11

நெடுந்தீவுப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் கட்டுமானப் பணிகளுக்கான கல், மண், சீமெந்து உட்பட அனைத்துப் பொருள்களும் வெளி இடங்களில் இருந்து படகுகள் மூலமே கொண்டு வரப்படுகின்றன என்று கூறப்பட்டது.

உள்ளூரில் கல், மண் போன்ற பொருள்களைக் கூட பெற்றுக் கொள்ள முடியாமையே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

படகுகள் மூலம் எடுத்து வரப்படும் இந்தப் பொருள்களைத் தற்போது அமைக்கப்பட்டுள்ள துறைமுகப் பாலத்தில் இறக்கி ஏற்றுவது சிரமமாக உள்ளது.

பழைய துறைமுகப் பாலத்தில் இவற்றை இறக்கக் கூடியதாக உள்ள நிலையில், உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் ஏற்றுவதற்கும் வர்த்தகர்கள் தமது வியாபார நடவடிக்கைகளுக்காக எடுத்து வரும் பொருள்களையும் பழைய துறைமுகத்தில் இறக்கக் கூடியதாக நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் முன்வர வேண்டும் என படகு ஊழியர்கள் கேட்கின்றனர். அதிக அளவிலான பொருள்களை எடுத்துவருவோர் உட்பட கட்டட ஒப்பந்ததாரர்களும் இந்த விடயம் குறித்து உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்கின்றனர். (ம-7)



உலக உணவுத்திட்டத்தின் கீழ் இலகு வேலைத்திட்டம் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் தெரிவு செய்யப்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் உள்ள பயனாளிகள் தமது பகுதிகளில் உள்ள பொது இடங்கள், வீதியோரங்கள், நுளம்பு பெருகும் சூழல்கள் என்பவற்றை துப்புரவு செய்து வருகின்றனர். ஒக்டோபர் மாதம் முதல் நடைபெற்று வரும் இந்த இலகு வேலைத்திட்ட பயனாளிகளுக்கான உலர் உணவுப் பொருள்கள் தற்போது பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் வழங்கப்பட்டு வருகின்றன. (ம-135)

## ஆட்டம் காணும் நெடுந்தீவு புதிய பாலம்

யாழ்ப்பாணம்,டிசெ.11

நெடுந்தீவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட துறைமுகப் பாலம் ஆட்டம் காண்பதாக அங்குள்ள மக்கள் முறைப்படுகின்றனர்.

துறைமுகப் பகுதியை ஆழமாக்கவும், பாலம் அமைப்பதற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட 66 லட்சம் ரூபா நிதியில் அமைக்கப்பட்ட இந்தப் பாலம் சுமார் 45 அடி நீளமும் 8 அடி அகலமும் கொண்டது.

இது ஒடுக்கமானதாக உள்ளதால் இப்பாலத்தில் பொருள்களை இறக்கி ஏற்றுவது சிரமம் என்று கூறப்படுகிறது.

பயணிகளுடன் பொருள்களும் நிறைந்து காணப்படுவதால் பயணிகள் பெரும் சிரமம் அடைகின்றனர்.

இந்தப் பாலம் உறுதியானதாக இல்லை. இதனாலேயே ஆட்டம் காண்கிறது என்று பொதுமக்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

**இந்தப் பாலம் ஒடுக்கமானதாக உள்ளதால் இப்பாலத்தில் பொருள்களை இறக்கி ஏற்றுவது சிரமம் என்று கூறப்படுகிறது.**

பாலம் ஆடுவதாக நெடுந்தீவு பிரதேச சபைத்தலைவர் தானியல் றெக்ஷியனும் அண்மையில் நல்லூர் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## தனியார் காணிகளில் அடாத்தாக விறகுவெட்டல்

வரணி,டிசெ.10

வரணிப் பிரதேசத்தில் தனியார் காணிகளில் அடாத்தாக விறகு வெட்டும் செயற்பாடு அதிகாரித்துக் காணப்படுகிறது என்ற பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

காணிகளில் உள்ள பசுமையான மரங்களும் இவ்வாறு அடாத்தாக வெட்டப்படுகின்றன என்றும் பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

காணிச் சொந்தக்காரர் இந்த விடயம் குறித்து பேச முற்படும் போது அச்சுறுத்தப்படுகின்றனர் என்றும் கத்தி, கோடரிகளைக் காட்டி விரட்டியடிக்கின்றனர் என்றும் மக்கள் கூறுகின்றனர்.

ஆள்கள் இல்லாத தனியார் காணிகளில் உள்ள தென்னைகளில் தேங்காய்கள் பறித்துச் செல்லப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம-122)

## வலி.மேற்கு பிரதேசசபை தலைவரின் வேதனம் முன்பள்ளி மாணவருக்கு

வலி.தென்மேற்கு,டிசெ.11

சுழிபுரம், பறளாய் நாவலர் சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் தனது கடந்த மாத வேதனத்தை வழங்கியுள்ளார்.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் இருந்து பிரதேச சபைத் தலைவர் பதவியை வகித்து வரும் இவர் அன்றிலிருந்து இன்று வரை போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்துக்கும், ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் பொது அமைப்புக்களுக்கும் தனது மாதாந்த வேதனத்தைத் தொடர்ந்து வழங்கி வருகின்றார்.

இதேவேளை, வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ஒருவரும் பிரதேசத்தின் அபிவிருத்திக்காக அன்றிலிருந்து இன்றுவரை தனது மாதாந்த வேதனத்தைக் தொடர்ந்து வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-115)

## இந்திய வீட்டுத்திட்டத்தில் தெரிவாகாதோர் முறையிடலாம்

யாழ்ப்பாணம்,டிசெ.11

நெடுந்தீவில் இந்திய வீடமைப்புத் திட்டத்தில் புள்ளியிடலால் பாதிக்கப்பட்ட மக்கள் இது தொடர்பாக நடைபெறவுள்ள கூட்டத்தில் கலந்து கொண்டு தமது குறைபாடுகளைத் தெரிவிக்கலாம்.

கூட்டம் நடைபெறும் திகதி அறிக்கப்படும் எனவும் நெடுந்தீவு பிரதேச செயலர் ஆ.சிறி தெரிவித்தார்.

நெடுந்தீவுக்கான இந்திய வீடமைப்புத் திட்டத்தில் குறைபாடுகள் இடம் பெறுவதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதனை அடுத்து பிரதேச செயலரிடம் அது குறித்துக் கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம-7)

## உரிமைகோரப்படாத பொருள்கள் ஏலத்தில்

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றால் பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான பொருள்கள் எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனைசெய்யப்பட உள்ளன

உரிமை கோரப்படாத பொருள்களை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு முன்னர் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளுமாறு நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (ம-9)

## வலி.மேற்கு பிரதேச சபைக்கான வரவு-செலவு திட்டம் நிறைவேறியது

வலி.தென்மேற்கு,டிசெ.11

வலி. மேற்கு பிரதேச சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளது.

தலைவர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆளும் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் பொது அமைப்புக்களின் ஆலோசனையுடன் தயாரிக்கப்பட்ட வரவு, செலவுத் திட்டத்தை ஆதரித்து உரையாற்றினர்.

பிரதேச சபையின் கட்டளைச் சட்டத்துக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத்திட்டம் தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலகங்களில் இந்த மாதம் 10 ஆம் திகதியில் இருந்து 17 ஆம் திகதி வரை மக்களின் பார்வைக்காக வைக்கப் பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது. (ம-115)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## துரை தயாநிதி உட்பட 10 பேருக்கு முன் பிணை

கிரானைட் முறைகேடு வழக்குடன் தொடர்புடைய துரை தயாநிதி உட்பட 10 பேருக்கு முன் பிணை வழங்கியுள்ளது மதுரை கிளை நீதி மன்றம்.

கிரானைட் முறைகேட்டு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் மு.க. அழகிரியின் மகன் துரை தயாநிதி உட்பட 10 பேர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட முன் பிணை மனுவை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளை நீதிமன்றம் துரைதயாநிதி உட்பட 10 பேருக்கும் முன் பிணை அளித்து உத்தர விட்டுள்ளது. (வ)



உத்தரகாண்ட் மாநிலம் டேராடூனுக்குச் சென்ற ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை அந்த மாநில முதலமைச்சர் விஜய் பகுகுணா வரவேற்றார்.

## அணுமின் நிலையத்தை கடல்வழியே முற்றுகையிடும் போராட்டம் ஆரம்பம்

### கூடங்குளத்தில் மீண்டும் பதற்றம்

இடிந்தகரை, டிசெ.11

கூடங்குளம் அணுமின் நிலையத்தை கடல்வழியாக முற்றுகையிடுவதற்காக போராட்டக் குழுவினர் படகுகளுடன் இடிந்த கரையில் இருந்து புறப் பட்டுச் சென்றனர். இதனால் அங்கு பதற்றமான சூழல் நிலவி வருகிறது. அணுமின் நிலையத்தை போராட்டக் குழுவினர் நெருங்காதபடி அங்கு பலத்த பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது..

அணு உலையை மூட வலியுறுத்தி நேற்றுக் கடல் வழியாக மீண்டும் அணு உலையை முற்றுகையிடப் போவதாக கடந்த சனிக் கிழமை அறிவிக்கப்பட்டது.

கூடங்குளத்தில் முற்றுகைப் போராட்டம் நடைபெறும் அதேநேரத்தில், தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் கிழக்குக் கடற்கரை சாலைப் பகுதிகளில் சாலை மறியலில் ஈடுபடப் போவதாக அணுசக்திக்கு எதிரான அமைப்பினர் அறி வித்துள்ளனர். பல்வேறு அமைப்புகளும், சமூக ஆர்வ லர்களும் இந்தப் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இந்தப்போராட்ட அறிவிப்பையடுத்து கூடங்குளம் பகுதியில் 2000 பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். பிற தென் மாவட்டங் களிலிருந்தும் பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டிருக்கின்றனர். இது தவிர, அணு மின்நிலையத்தை சுற்றி, மத்திய தொழில் பாதுகாப்புப் படையினரும் பாதுகாப்புக்காகக் குவிக்கப் பட்டுள்ளனர். போராட்டக்காரர்கள் அணு உலைக்குள் சென்று விடாதவாறு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன.

இந்த நிலையில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இடிந்தகரை கிராமத்தில் இருந்து நூற்றுக்கணக்கான படகுகளுடன் கடல் வழியே அணு மின்நிலையத்தை முற்றுகையிடப் போராட்டக் குழுவினர் புறப்பட்டுச் சென்றனர். (வ)

# இஸ்ரேல், ஓமானுடன் விரைவில் குற்றப்புலனாய்வு குறித்து ஒப்பந்தம்

### இந்திய உள்துறை அமைச்சகம் தெரிவிப்பு

டில்லி, டிசெ.11

இஸ்ரேல், ஓமான் உள்ளிட்ட நாடுகளுடன் குற்றப் புலனாய்வு விசாரணையில் ஒத்துழைப்பு பெறுவதற்கான உடன்படிக்கையை இந்தியா விரைவில் மேற்கொள்ள உள்ளது என்று மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:-

குற்றப்புலனாய்வு தொடர்பான இருதரப்பு சட்ட உதவி உடன்படிக்கையை இஸ்ரேல், ஓமான், அஸஜர்பை ஜான், நேபாளம் ஆகிய நாடு களுடன் இந்தியா விரைவில் மேற்கொள்ளவிருக்கிறது.

இதன்மூலம் குற்றச் செயல்களைத் தடுத்தல், வழக்குத் தொடுத்தல் புலனாய்வு போன்றவற்றில் பரஸ்பர உதவி, அழைப்பாணை பிறப்பித்தல் மற்றும் நீதித்துறை ஆவணங்களை வழங்குதல், இழப்பீடு மற் றும் பறிமுதல் சார்ந்த நட வடிக்கைகள் உட்பட்டவற்றை மேற்கொள்ள முடியும்.

தற்போது, ஈரான், குவைத், மொரீஷியஸ், சுவிற்ஸர்லாந்து, மெக்ஸிகோ, தாய்லாந்து, வியட்நாம், கஸகஸ்தான் உட்பட 32 நாடுகளுடன் இத்தகைய ஒப்பந்தம் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளது.

இதுதவிர, ஆஸ்திரேலியா, பஹ்ரைன், பங்களாதேஷ், பெலாரஸ், பொஸ்னியா, ஹெர்ஸிகோவ்னியா, பல்கேரியா, சிங்கப்பூர், தென் ஆபிரிக்கா, கனடா, எகிப்து, பிரான்ஸ், மங்கோலியா, மியன்மார், ரஷ்யா, சிங் கப்பூர், தென் கொரியா, ஸ்பெயின், இலங்கை, துருக்கி, உக்ரைன், ஐக்கிய அரபு அமீரகம், பிரிட்டன், அமெரிக்கா, உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் பரஸ்பர சட்ட உதவி உடன் படிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது- என்றது. (வ)

## 'கர்நாடக ஜனதா கட்சி' என்னும் புதிய கட்சி ஆரம்பித்தார் எடியூரப்பா



கர்நாடகாவின் முன்னாள் முதலமைச்சர் பி.எஸ். எடியூரப்பா, பாரதீய ஜனதா கட்சியிலிருந்து விலகிய பின்னர் 'கர்நாடக ஜனதா கட்சி' எனும் புதிய கட்சியை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்தார்.

மாநிலத்தின் மத்திய பகுதியிலுள்ள ஷிமோகா மாவட்டத்தின் ஹாவேரி நகரில் புதிய கட்சியின் ஆரம்பத்தை எடியூரப்பா அறிவித்தார்.

தென்னிந்தியாவில் பாரதீய ஜனதாக் கட்சி அமைத்த முதல் ஆட்சிக்கு தலைமையேற்றிருந்த எடியூரப்பா, ஊழல் குற்றச்சாட்டுகள் காரணமாக பதவி விலக நேரிட்டது. பின்னர் சில வழக்குகளிலிருந்து அவரை நீதிமன்றம் விடுவித்தாலும், பா.ஜ.க. அவரை மீண்டும் முதலமைச்சராக நியமிக்க முன்வரவில்லை.

இதையடுத்து அந்தக் கட்சியிலிருந்து விலகி, தனிக் கட்சி ஆரம்பிக்கும் எண்ணத்தை அவர் வெளியிட்டார்.

## கர்ப்பிணிகளுக்கு எச்.ஐ.வி. பரிசோதனைகள் அவசியம்

### நடிகை ஐஸ்வர்யா கருத்து



கர்ப்பிணிகள் தயக்கமின்றி எச்.ஐ.வி. பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்று நடிகை ஐஸ்வர்யா ராய் தெரிவித்தார். ஐ.நா. எயிட்ஸ் சர்வதேச நல்லெண்ணத் தூதராக பதவி வகிக்கும் அவர் குஜராத் வதோத்ராவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நடிப்பைத் தாண்டி பல பணிகளிலும் "இனிமேல் ஈடுபடப்போகிறேன். எச்.ஐ.வி. வைரஸ் மற்றும் எய்ட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வைப் பெண்களிடம் ஏற்படுத்துவதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சுற்றுப்பயணம் செய்யப் போகிறேன். கர்ப்பிணிகள் தயக்கத்தை விட்டு விட்டு எச்.ஐ.வி. பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். அப் போது தான் அவர்களது குழந்தைகளை இந்த வைரஸ் பாதிப்புக்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்ள முடியும்-என்றார்.

## 2 ஆம் உலகப் போரில் பங்கேற்ற இந்திய ஜவான் காலமானார்

இரண்டாம் உலகப் போரில் பங்கேற்ற இந்திய ஜவான் ஒருவர் தமது 109 ஆவது வயதில் நேற்று காலமானார்.

முன்னாள் இராணுவ ஜவானான நராடா சிங், அவருடைய சொந்தக் கிராமமான செஹெரி கிராமத்தில் நேற்று உயிரிழந்தார்.

1903 ஆம் ஆண்டு நராடா சிங், ரோபர் மாவட் டம் மொரிண்டா கிராமத்தில் பிறந்தார். 1929 ஆம் ஆண்டு அம்பாலா இராணுவத்தில் சேர்ந்தார். அதன் பின்னர் இரண்டாம் உலகப் போரில் மிகவும் தீவிரமாகப் பணியாற்றினார்.

1939- 1945 காலகட்டத்தில் நராடா சிங் இரண்டாம் உலகப் போரில் பங்கெடுத்துள்ளார். (வ)

## 5 வயது சிறுமியை கொதிக்கும் எண்ணெய்க்குள் வீசிய கொடூரம்

*உத்தர பிரதேசத்தில், ஐந்து வயதுச் சிறுமியை குண்டர்கள் கொதிக்கும் எண்ணெய் பாத்திரத்தில் வீசியுள்ள கொடூரம் இடம் பெற்றுள்ளது.*

*கான்பூர் அருகே உள்ள சிவராஜ்பூர் என்ற இடத்தில் சிறியளவில் விடுதி நடத்தி வருபவர் அவினாஷ். அவரின் விடுதிக்கு கடந்த சனிக் கிழமை இரவு சென்ற உள்ளூர் குண்டர்கள் இருவரும் சாப்பிட்டதற்கு பணம் கொடுக்க மறுத்துள்ளனர். மேலும் தினமும் இதுபோல வந்து சாப்பிடுவோம் எங்களுக்கு பணமும் கொடுத்து அனுப்ப வேண்டும் என்று அவினாஷை மிரட்டியுள்ளனர். அதற்கு அவர் எதிர்ப்புத் தெரிவிக்கவே குண்டர்கள் இருவரும் அவினாஷை தாக்கி உள்ளனர். சத்தம் கேட்டு அவினாஷின் மனைவி, தனது ஐந்து வயது மகள் சவும்யாவுடன் வந்து, குண்டர்களைத் தடுத்துள்ளார். அந்தப் பெண்ணை சர மாரியாகத் தாக்கிய குண் டர்கள் அவர் அருகில் நின்றிருந்த குழந்தையைத் தூக்கி கொதிக்கும் எண்ணெய் சட்டியில் போட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர். துடிதுடித்த சிறுமியை அந்தப்பகுதி மக்கள் அருகில் உள்ள மருத் துவமனையில் சேர்த்துள்ளனர்.*

### 8 கோடி ரூபாவைச் செலவு செய்து புதுப்பிக்கப்பட்ட

# எம்.ஜி.ஆர். நினைவிடத்தை மெரீனாவில் திறந்து வைத்தார் முதல்வர் ஜெயலலிதா



சென்னை, டிசெ.11

சென்னை மெரீனா கடற்கரையில் 8 கோடி ரூபா செலவில் புதுப்பிக்கப்பட் டுள்ள எம்.ஜி.ஆர் நினைவிடத்தை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முதல்வர் ஜெயலலிதா திறந்து வைத்தார்

அ.தி.மு.க. நிறுவுநரும் முன்னாள் முதல்வருமான எம்.ஜி.ஆரின் நினைவிடம் மெரீனா கடற்கரையில் 8.25 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இதன் நுழைவு வாயில் முகப்பையும், முன் பக்கச் சுற்றுச்சுவரை புதுப்பிக்கவும் 8 கோடியே 90 லட்சம் ரூபா கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதனையடுத்து எம்.ஜி.ஆர். நினைவிடத்தின் முகப்பு வாயில் புதுப்பொலிவுடன் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

60 அடி உயரத்தில் பிரமாண்டமான 4 தூண்கள் எழுப்பப்பட்டு அவற்றுக்கு நடுவில் பளிங்குக்கல் மேடையில் இரட்டை இலை சின்னம் அமைக்கப் பட்டுள்ளது. மேலும் இரண்டு கால்களை தூக்கியபடி கம்பீரமாக நிற்கும் வெண்கலத்தாலான பறக்கும் குதிரைச் சிலையும் அமைக்கப்பட்டு இருக் கிறது.

சமாதியை சுற்றிலும், கிதார் வடிவில் புதிய நடை பாதை அமைக்கப்பட் டுள்ளது. மேலும் 18 மீற்றர் விட்டம் கொண்ட இரண்டு பர்கோலாஸ் இருக்கை வசதிகள் செய்யப்பட்டு உள்ளன. மாற்றுத்திறனாளி களின் வசதிக்காக இரண்டு சாய்வு நடைபாதைகள் அமைக்கப் பட்டுள்ளன.

இதுதவிர, நினைவிடத்தின் இரண்டு பக்கங்களின் ஓரங்களிலுள்ள நடை பாதைகள் கொங்கீறீட் ஓடுகளாலும், பேவர் பிளாக்குகளாலும் அமைக்கப்பட்டு இருக்கின்றன. மத்தியில் அமைந்துள்ள புல்வெளியின் நடுவில் செயற்கை நீரூற்று ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிலிப்பைன்ஸில் நிலநடுக்கம்



பிலிப்பைன்ஸின் தென் பகுதியான மின்டோனவோ தீவில் நேற்று இலேசான நிலநடுக்கம் ஏற்பட்டது.

நேற்று அதிகாலை ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 5.6 ஆகப் பதிவானதாக அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# நபிகளை இழிவுபடுத்தும் கேலிச்சித்திரம் 780,000 யூரோ இழப்பீடு கேட்டு வழக்கு

## பிரான்ஸ் பத்திரிகைக்கு எதிராக முஸ்லிம் அமைப்புகள் சீற்றம்

நபிகள் நாயகத்தை தரக்குறைவாகச் சித்திரித்து கேலிச்சித்திரம் வெளியிட்ட பத்திரிகைக்கு எதிராக 780,000 யூரோ இழப்பீடு கோரி வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரான்ஸில் இருந்து வெளிவரும் சார்லி ஹெப்டோ என்ற பத்திரிகை நபிகளின் படத்தை நிர்வாணக் கேலிச்சித்திரமாக வெளியிட்டது.

இதனையடுத்து இரண்டு முஸ்லிம் அமைப்புகள் வழக்குத் தொடர்ந்துள்ளன.

அமைதி மற்றும் மேம்பாட்டுக்கான அல்ஜீரிய ஜனநாயக ஒன்றியமும், அரேபிய ஒன்றிய அமைப்பும் இணைந்து இழப்பீடு கோரி சார்லி ஹெப்டோவின் இயக்குநர் மற்றும் கேலிச்சித்திரம் வரைந்த ஓவியர்கள் இருவர் மீது வழக்குத் தொடுத்துள்ளன.


இந்தப் படங்கள் முஸ்லிம்களைக் கேவலப்படுத்துவதாகவும், வெறுப்பைத் தூண்டுவதாகவும் அமைந்துள்ளன என்று அவை குற்றம் சாட்டுகின்றன.

இதுகுறித்து பத்திரிகை நிர்வாகம் கருத்துத் தெரிவிக்கையில், "மதங்களை நகைச்சுவைப் பண்புடன் விமர்சிக்கும் பிரெஞ்சு மரபை உடைக்கப் பார்க்கிறார்கள்'' என்று தெரிவித்துள்ளது.

அண்மையில் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட இஸ்லாமுக்கு எதிரான 'முஸ்லிம்களின் அப்பாவித்தனம்' என்ற திரைப்படத்தின் முன்னோட்டம் வெளியான போது உலகெங்கும் முஸ்லிம்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நடுவானில் மோதிய இரு விமானங்கள்

### 7 பேர் சாவு



ஜேர்மனில் நடுவானில் இரண்டு விமானங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின. இதில் 7 பேர் உயிரிழந்தனர்.

ஜேர்மனியின் பிராங்பர்ட் நகருக்கு வடக்கே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இரண்டு சிறிய ரக விமானங்கள் ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதின.

விபத்திற்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## இத்தாலி தேர்தல் களத்தில் மீண்டும் பெர்லுஸ்கோனி



இத்தாலியின் முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனி மீண்டும் பிரதமர் பதவிக்கு போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு இத்தாலியின் புதிய பிரதமருக்கான தேர்தல் நடைபெறும் என ஊகங்கள் எழுந்துள்ள நிலையில், தேர்தலில் போட்டியிடப் போவதாக பெர்லுஸ்கோனி அறிவித்துள்ளார்.

பெர்லுஸ்கோனி கடந்தாண்டு நவம்பர் மாதம் பதவி விலகினார். கடும் பொருளாதார நெருக்கடியில் இத்தாலி சிக்கியிருந்த காரணத்தினாலும், வரி ஏய்ப்பு போன்ற குற்றச்சாட்டுகள் உட்பட 18 வயதுக்குட்பட்ட பெண்களிடம் தவறான முறையில் நடந்து கொண்டார் என்பது போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டதனாலும் பதவி விலகிய பெர்லுஸ்கோனிக்கு உள்ளூர் நீதிமன்றம் ஐந்தாண்டு சிறைத் தண்டனை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வேண்டாம் அதிகாரங்கள்

## இறங்கி வருகிறார் எகிப்து ஜனாதிபதி முர்சி



**நீதித்துறை கூடத் தன்னைக் கேள்வி கேட்க முடியாத அதீத அதிகாரங்களை முர்சி கையகப்படுத்திக் கொண்டதால் எகிப்தில் மக்கள் போராட்டங்கள் வெடித்தன.**

தன்னிடமுள்ள அதியுச்ச அதிகாரங்களைக் கைவிடுவதாக எகிப்திய ஜனாதிபதி முகமட் முர்சி அறிவித்துள்ளார்.


எகிப்தில் தொடர்ச்சியாக நடந்துவரும் போராட்டங்கள், அந்த நாட்டின் ஜனாதிபதியும், முஸ்லிம் சகோதரத்துவக் கட்சியின் தலைவருமான முகமட் முர்சியைச் சற்று இறங்கிவரச் செய்திருக்கிறன.


அண்மையில் மிகுந்த சர்ச்சைக்குரிய வகையில் தான் கையகப்படுத்திக் கொண்ட அதியுச்ச அதிகாரங்களைக் கைவிடுவதாக அவர் அறிவித்திருக்கிறார்.

ஆனால், அவருக்கு எதிராக போராட்டங்களை நடத்திவரும் எதிர்க்கட்சிகள், "இது ஏற்றுக்கொள்ளக் கூடியதானதல்ல. கருத்தறியும் வாக்கெடுப்பை நிறுத்தாமல், முர்சியின் இந்தப் புதிய அறிவிப்பு வந்திருப்பது எமக்கு அதிர்ச்சியைத் தருகின்றது. சர்ச்சைக்குரிய வகையில் முர்சியால் கொண்டுவரப்பட்ட அரசமைப்பு நகல் குறித்து மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பை நிறுத்தவேண்டும்'' என்று தெரிவித்துள்ளன.

"மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு டிசெம்பர் 25 ஆம் திகதி நடத்தப்படும். அறிவிக்கப்பட்ட கருத்தறியும் வாக்கெடுப்பை நிறுத்துவதற்கு சட்டத்தில் இடமில்லை'' என்று எகிப்தின் துணை ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

முர்சியின் இந்த நகர்வு அவர் சமரசம் செய்து கொள்ள முயல்வதன் முதல் சமிக்ஞை என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.





தலிபான் தீவிரவாதிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி லண்டனில் சிகிச்சை பெற்று வரும் சிறுமி மலாலாவை சந்தித்துப் பேசினார் பாகிஸ்தான் பிரதமர் சர்தாரி.

## ஹமாஸ் தலைவரைக் கொல்லுங்கள்

### இஸ்ரேல் எதிர்க்கட்சித் தலைவர் ஆவேசம்

காஸாவுக்கு வந்துள்ள ஹமாஸ் இயக்கத்தின் தலைவரை உடனே சுட்டுக் கொல்லுங்கள் என்று இஸ்ரேலின் எதிர்க்கட்சித் தலைவர் செளல் மொபாஷ் தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் இயக்கத்தின் தலைவர் கலீத், 45 ஆண்டுகளுக்குப் பின்னர் காஸாவுக்குத் திரும்பி உள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கலீத்தை சுட்டுக்கொல்ல வேண்டும் என்று இஸ்ரேல் அரசை



எதிர்க்கட்சியான கதீம் வலியுறுத்தி வருகிறது.

இதற்கு முன்பு ஜோர்டானில், இஸ்ரேலின் உளவுப் பிரிவான மொசாட், கலீத்தின் உடலில் விஷம் நிறைந்த ஊசியைப் போட்டுக் கொல்ல முயற்சித்தது. இதில் கோமா நிலைக்குப் போய் உயிர் தப்பினார் கலீத்.

இந்த நிலையில் தற்போது அந்த நாட்டு அரசியல் கட்சித் தலைவர் ஒருவர் பகிரங்கமாகவே கலீத்தைப் படுகொலை செய்யத் தூண்டிவிடுவது பலஸ்தீனியர்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

## 300 நாய்களுக்குப் பல்துலக்கி ஹொங்கொங்கில் சாதனை



300 நாய்களுக்கு ஒரே நேரத்தில் பல்துலக்கி கின்னஸ் சாதனை பதியப்பட்டுள்ளது. இந்த விசித்திர சாதனை ஹொங்கொங்கில் நிகழ்த்தப்பட்டுள்ளது.

பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 312 பேர், தங்கள் நாய்களை அழைத்து வந்து பிரத்தியேக பிரஷ் மற்றும் பற்பசை கொண்டு பல்துலக்கிச் சாதனை படைத்தனர்.

"நாய்களின் காப்பகத்துக்கு நிதி திரட்டவும், சுகாதாரத்தை மேம்படுத்தவும் செல்லப் பிராணிகளுக்கு பல்துலக்கும் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. செல்லப் பிராணிகளுக்கு வாரத்திற்கு ஒரு முறையாவது, பல் துலக்க வேண்டும். அப்போதுதான் அவற்றின் சுகாதாரம் மேம்படும்'' என்று தெரிவித்தார் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த ஏற்பாட்டாளர்.

## நைஜீரிய நிதியமைச்சரின் தாயார் கடத்தப்பட்டார்

நைஜீரியாவின் நிதியமைச்சர் கோசி ஒகோஞ்சோ லுவியலாவின் தாயார் மர்ம நபர்களால் கடத்தப்பட்டுள்ளார்.

நைஜீரியாவில் பணயத் தொகை கேட்டு ஆள்களைக் கடத்துவது சர்வசாதாரணமாக நடைபெற்று வருகிறது. தற்போது நிதியமைச்சர் லுவியலாவின் தாயாரும் மர்ம நபர்களால் கடத்தப்பட்டுள்ளார்.

சமீப காலமாக இவருக்கு தொடர்ந்து மிரட்டல்கள் வந்ததாகவும், இந்தக் கடத்தலில் ஈடுபட்டவர்கள், அரசியல் நோக்கத்திற்காக இவரை கடத்தியுள்ளனரா? அல்லது பணயத்தொகை கேட்டு மிரட்டுவதற்காக கடத்தியுள்ளனரா? என்று தெரியவில்லை என அரசு வட்டாரங்கள் கூறியுள்ளன.

## சூடானுக்கு விரைந்துள்ள ஈரானிய போர்க்கப்பல்கள்



சூடான் நாட்டின் போர்ட் சூடான் துறைமுகத்திற்கு ஈரானின் இரு ஏவுகணை மற்றும் விமானம் தாங்கி கப்பல்கள் சென்றுள்ளன.

கடந்த இரண்டு மாதங்களில் சூடானுக்கு ஈரானிய போர்க்கப்பல்கள் சென்றுள்ளமை இது இரண்டாவது முறையாகும்.

இதுகுறித்து ஈரான் அரசு தெரிவிக்கையில்,

"நேச நாடுகளுடனான கடற்பயிற்சிகளை மேற்கொள்ளும் நடவடிக்கையாக இந்த நடவடிக்கை அமைந்துள்ளது.

பிராந்திய மற்றும் கடல் எல்லைகள் தொடர்பான அரசியல் மற்றும் தூதரக நடவடிக்கைகள் குறித்து இந்த சந்திப்பில் பேசப்படும்'' என்று தெரிவித்துள்ளது.

"4 நாள்கள் தங்கும் ஈரானிய போர்க்கப்பல்கள் எமது நாட்டு கடற்படையினருடன் பயிற்சியில் ஈடுபடுவார்கள்'' என்று சூடான் அரசு கூறியுள்ளது.

இதேவேளை, சூடானின் வெடிமருந்து தொழிற்சாலையின் மீது சமீபத்தில் ஈரானின் எதிரி நாடான இஸ்ரேல் தாக்குதல் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பதவி விலகுகிறார் இத்தாலிப் பிரதமர்



இத்தாலியின் பிரதமர் மரியோ மோண்டி தமது பதவியை ராஜினாமா செய்ய முடிவு செய்துள்ளார். அது குறித்த அறிவிப்பை கடந்த சனிக் கிழமை அவர் வெளியிட்டுள்ளார்.

இத்தாலி அரசுக்கு, முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனியின் கட்சி ஆதரவளித்து வந்தது. தற்போது பெர்லுஸ்கோனியின் கட்சி ஆதரவை விலக்கிக் கொண்டுள்ளது.

இதையடுத்தே இத்தாலியப் பிரதமர் மரியோ மோன்டி பதவி விலகும் முடிவை எடுத்துள்ளார் என்று தெரிவிக்கப் படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்க்கட்சிகளின் போராட்டம் பெரும் கலவரமாக மாறியது



பங்களாதேஷில் எதிர்க்கட்சிகள் மேற்கொண்ட வீதி மறியல் போராட்டத்தில் கலவரம் வெடித்தது. கலவரத்தில் பலர் காயமடைந்தனர்.

பங்களாதேஷில் தேர்தல் காலத்தில் இடைக்கால அரசு ஆட்சியில் இருக்கும் நடைமுறையை ஆளும் அவாமி தேசிய லீக் கட்சி இரத்து செய்துள்ளது. இதற்கு எதிர்க்கட்சிகள்கடும் எதிர்ப்புத் தெரிவித்தன.

அதைத் தொடர்ந்து வீதி மறியல் போராட்டத்துக்கு முக்கிய எதிர்க்கட்சியான பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி அழைப்பு விடுத்திருந்தது.

இந்தப் போராட்டத்தின் போது கலவரம் வெடித்தது. கலவரக்காரர்கள் வீதிகளில் நின்ற வாகனங்களுக்குத் தீ வைத்தனர். கலவரத்தில் பலருக்கு காயம் ஏற்பட்டுள்ளது.

கலவரக்காரர்களைக் கட்டுப்படுத்த கூடுதலாக 12 ஆயிரம் இராணுவத்தினர் அழைக்கப்பட்டுள்ளனர்.




## புயலால் தவிக்கும் பிலிப்பைன்ஸ்

# நிர்க்கதியான மக்கள் பிச்சை எடுக்கும் அவலம்

மணிலா,டிசெ.11

'போபோ' புயல் வலுவிழந்ததால் கடும் மழையுடன் மட்டும் தப்பிக் கொண்டது பிலிப்பைன்ஸின் வடக்குப் பகுதி.

பிலிப்பைன்ஸ் நாட்டின் தெற்கு பகுதியை கடந்த வாரம் தாக்கிய போபோ புயல் நேற்று வடக்கு பகுதி நோக்கித் திரும்பியது. ஆனால் புயல் வலுவிழந்ததால் பலத்த மழையுடன் வடக்கு பகுதி தப்பியது.

புயல் மற்றும் வெள்ளத்தால் பிலிப்பைன்ஸ் மக்கள் அடிப்படை வசதிகள் எதுவும் இன்றிப் பரிதவிக்கிறார்கள்.

நியூபட்டானில் உள்ள மலை நகரமான மைண்ட்னோ தான் புயலால் கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதியாகும். வீடுகளை இழந்துள்ள அங்குள்ள மக்கள் உணவு மற்றும் அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் பரிதவிக்கின்றனர். குழந்தைகளும், பெண்களும் உணவுக்காக பிறரிடம் கையேந்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

'எங்கள் மீது கருணை காட்டுங்கள்', 'தயவு செய்து தானம் அளியுங்கள்', 'எங்களுக்கு தேவை உணவு' போன்ற வாசகங்கள் அடங்கிய அட்டைகளை வைத்துப் பிச்சை எடுக்கிறார்கள். வாகனங்களில் செல்வோர் தங்கள் கையில் இருப்பதை கொடுத்து விட்டுச் செல்கிறார்கள்.

கடந்த செவ்வாய்க்கிழமை பிலிப்பைன்சில் ஏற்பட்ட புயலால் 548 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மெக்ஸிக்கோவில் இரகசிய சுரங்கப் பாதை கண்டுபிடிப்பு

மெக்ஸிக்கோவிலிருந்து முறைகேடாகப் பொருள்களை அமெரிக்காவுக்கு கொண்டு செல்லப் பயன்படுத்தப் பட்ட ரகசியச் சுரங்கப் பாதை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க-மெக்ஸிக்கோ எல்லைப் பகுதியில் உள்ள டெக்டே என்னும் இடத்தில் மெக்ஸிக்கோ நாட்டு ராணுவ அதிகாரிகள் இந்தச் சுரங்கப் பாதையைக் கண்டு பிடித்துள்ளனர்.

சுரங்கப் பாதையின் நுழைவுப் பகுதி, தண்ணீரை சுத்திகரிக்கும் ஆலை ஒன்றில் அமைக்கப்பட்டுள்ளது.

சுரங்கத்தின் உள்ளே காற்றோட்ட சாதனங்கள், மின் பொருள்கள் போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த ரகசிய சுரங்கப் பாதை தொடர்பாக 7 பேரை ராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

## தலிபான்கள் கடத்திய மருத்துவர் மீட்பு

### 7 தீவிரவாதிகளும் உயிரிழப்பு

தொண்டு நிறுவன மருத்துவர் ஒருவரைக் கடத்திய தலிபான் தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானின் சரோபி என்னுமிடத்தில் பணியாற்றி வந்த தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த மருத்துவர் ஒருவரையே தலிபான் தீவிரவாதிகள் கடத்தினர். அவர் மறைத்து வைக்கப்பட்ட இடம் பற்றிய புலனாய்வு தகவல் அறிந்த அமெரிக்க மற்றும் ஆப்கன் படைகள் கடத்தியவர்களைச் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தின. இதில் 7 தலிபான் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

கடத்திச்செல்லப்பட்ட மருத்துவர் பத்திரமாக மீட்கப்பட்டார். அவருடன் கடத்தப்பட்ட வேறு இருவரை முன்பே தலிபான்கள் விடுதலை செய்திருந்தனர்.

## அமெரிக்கா திரும்ப வேண்டும் –மெக்பீ

தாம் அமெரிக்கா திரும்ப வேண்டுமெனகணினி வைரஸ் எதிர்ப்பு மென்பொருள் உருவாக்குநர் ஜோன் மெக்பீ தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக நாட்டுக்குள் பிரவேசித்த குற்றச்சாட்டில் குவத்தமலாவில் கைது செய்யப்பட்டுள்ள மெக்பீ, கொலைச் குற்றச்சாட்டு விசாரணைகளுக்காக பெலிஸ்ஸூக்கு நாடு கடத்துவதை தவிர்க்கப் போராடி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.


சேவை நலன் பாராட்டு

திரு.சதாசிவம் சுந்தரமூர்த்தி (S.L.P.S.I)



வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் 13 வருடங்கள் ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி 12.12.2012 இல் தனது 60 வயதைப் பூர்த்தி செய்து ஓய்வு பெறும் திரு.சதாசிவம் சுந்தரமூர்த்தி அவர்களின் சேவையைப் பாராட்டுவதோடு அவர் ஓய்வு காலத்தில் மேலும் பல சீரும் சிறப்பும் பெற்று நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(25543)

கல்வி அபிவிருத்தி பிரிவு, வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி



31 ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில் 29.09.1927 அமரர் விண்ணில் 11.11.2012

சீனிவாசகம் தர்மலிங்கம்

(ஓய்வு பெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்)

அன்பான கணவராய், பாசமிகு தகப்பனாய்
அன்புள்ள மாமனாய், நேயமுள்ள பேரனாய் – இருந்த
தங்கள் நினைவலைகள் நாள்கள் பல கடந்தாலும் – எம்
நெஞ்சில் எப்போதும் நீங்காது உங்கள் நினைவு
காலத்தின் அகோரத்தால் எமக்குண்டான கோலத்தை எண்ணி
வெம்புகிறது எங்கள் மனம் காலம் எம்மை ஆற்ற
உங்கள் ஆத்மா இறையடி நாடி அமைதி கொள்ள
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நந்தாவில் அம்மன் கோயிலடி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.



**UNIVERSITY OF JAFFNA**

**INVITATION FOR BIDS**

**Construction of Arts Block – Stage VI (Examination Hall)**

**University of Jaffna, Thirunelvely, Jaffna.**

1. **The Chairman, Department Procurement Committee University of Jaffna,** now invites sealed bids from eligible and qualified bidders for **"Construction of Arts Block – Stage VI (Examination Hall)"at an estimated to cost of Rupees Twenty Two Million (Rs22,000,000.00).** This shall be a **measure and pay** contract and the construction period is **One Hundred and Eighty (180) Calendar Days.**
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for grade **C6** or above with the Institute for Construction Training and Development (ICTAD).
4. Interested bidders may obtain further information from the **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, Thirunelvely, Jaffna.** and view the Bidding Documents at the same address on any working day from **9:00hrs to 16:00 hrs.** Contact numbers are: Phone.**021 2219201**, Fax: **021 2219201**.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, Thirunelvely, Jaffna.** from the **11th of December, 2012** until **28th of December, 2012** from **9:00 hrs to 15:00 hrs and** upon payment of a non-refundable fee of **Rupees Five thousand (Rs.5,000.00).**
6. Sealed Bids shall be delivered or sent by registered post to **The Chairman, Department Procurement Committee, University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna** to reach **on or before 14.00 hrs on the 09th of January, 2013.** Bids will be opened soon after closing, at **14.15 hrs on the 09th of January, 2013** at the same venue in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid at least for a period of **91 Days** from the date fixed for receiving of Bids or any extended date.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Section 09 in the Bidding document.
   - In favour of ***"Vice Chancellor, Chairman, Procurement Committee, University of Jaffna."***
   - For a amount of **Rs. 250,000.00**
   - Issued by one of the agencies indicated in the clause 16.0 of the Schedule.
9. Pre bid meeting will be held at University of Jaffna, Thirunelvely, Jaffna, at 10.30 hrs on 21st December, 2012.

**Vice Chancellor**
**Chairman,**
**Department Procurement Committee,**
**University of Jaffna,**
**Thirunelvely, Jaffna.**

(c/3081)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(48)



பொருள் உற்பத்தியில் சிக்கனத்தைக் கையாள வேண்டும், வேகமாக ஒரு பொருளை உற்பத்தி செய்வதென்றால், மனிதனை விட இயந்திரங்கள் தான் வேகமாக வேலை செய்யும். ஆக, தன்னால் இயங்கும் இயந்திரங்களை வாங்கிப் போட வேண்டும். ஒரு மனிதன் நாள் முழுவதும் செய்யும் வேலையை, ஓர் இயந்திரம் ஒரு மணி நேரத்தில் செய்து முடிக்கும். இயந்திரங்களைப் பயன்படுத்தினால், சம்பளமும் கூலியும் ஏகப்பட்ட அளவுக்கு மிச்சம் ஆகும். ஆயிரம் ரூபாய் மிச்சமானால், அதைச் சேமிக்க முடியும். சேமித்த பணத்தை மீண்டும் பயன்படுத்தி மேலும் பணம் சம்பாதிக்கலாம்.

பணக்காரர்கள் மேலும் மேலும் பணம் சம்பாதிப்பதற்குக் காரணம் இதுதான். அவர்கள் தம்மிடம் இருக்கும் பணத்தை மீண்டும் மீண்டும் பயன்படுத்தி, பணத்தைக் குட்டி போடச் செய்கிறார்கள். பணக்காரர்கள் யாரும் ஒரே தொழிலுடன் நிற்பதில்லை. நமது சொந்தக் கம்பனியோ, தொழிற்சாலையோ, வியாபாரமோ, எதுவாக இருந்தாலும் அதைப் பெரிதாக்கிக் கொண்டே போக வேண்டும். இலாபம் வளரும் அளவுக்குப் பெரிதாக்க வேண்டும்.

நாம் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு உத்தரவாதம் கொடுக்க வேண்டும். உற்பத்தியாளர்கள் உத்தரவாதம் கொடுக்கும் போது, பொருள்களை வாங்குபவர்களுக்கு ஒரு நம்பிக்கை பிறக்கிறது. ஒரு பொருளை வாங்கும் போது பணம் வீணாவதில்லை என்ற எண்ணம் பிறக்கிறது. விற்பனையை அதிகரிக்க இது ஓர் சிறந்த வழி.

வியாபாரத்தில் பெரிதாகப் பணம் பெற வேண்டும் என்று எண்ணுபவர்கள் நஷ்டத்தையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கவேண்டும். எந்தத் தொழிலும், எந்த வியாபாரத்திலும் நஷ்டம் ஏற்படும் வாய்ப்பு இருக்கிறது. பொருளாதார நெருக்கடி ஏற்படலாம். விற்பனை குறையலாம். விலையைக் குறைத்து. அல்லது பெரிதாக விளம்பரம் செய்து விற்பனையை அதிகரிக்க முயலும் போது ஏகப்பட்ட நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை. விற்பனை அதிகரிக்கத் தொடங்கியதும். பெரிய அளவில் இலாபம் கிடைக்கும். மன உறுதியும் பொறுமையும் விடாப்பிடியும் மிக மிகத் தேவை. புதிதாக ஏதாவது செய்யும்போது, வியாபாரம் திடீரென்று பெருகிவிடும். எப்போதும் புதிய ஐடியாக்களை செயற்படுத்த வேண்டும்.

எப்போதும் இரண்டு வகைத் தொழில்கள் ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டும். ஒன்றில் நஷ்டம் ஏற்பட்டாலும், மற்றொன்றில் இலாபம் கிடைக்கும். ஒரு தொழிலில் ஏகப்பட்ட இலாபம் கிடைக்கும் போது, கணிசமான இலாபத்தை அதே தொழிலிலே போட்டால், மேலும் மேலும் பணம் பெருகும்.

பணத்தையும் திட்டங்களையும் பயன்படுத்தித்தான் பெருமளவு பணம் சம்பாதிக்க முடியும். இருபத்தோராம் நூற்றாண்டில் பயணம் செய்து கொண்டிருக்கும் இன்றைய உலகில், ஏகப்பட்ட வாய்ப்புக்கள் இருக்கின்றன. வேகமானகாலம் இது. மக்கள் தொகை பெருகிவரும் உலகம். எல்லாப் பொருள்களுக்கும் கிராக்கி அதிகமாக வரும் காலம். ஏகப்பட்ட புதிய பொருள்கள் தேவைப்படுகின்றன. பொது மக்களுக்குத் தேவையான புதிய பொருள்களைக் கண்டுபிடித்து உற்பத்தி செய்வதால் பெரிய அளவில் பணம் சம்பாதிக்கலாம்.

மனிதனுக்கு மிகவும் தேவையான பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும். மனித சக்தி மிக அதிகமாக உள்ள நாடு நம்முடையது. ஆனாலும் வேலைக்கு ஆள் கிடைப்பதில்லை. குறிப்பாக வீட்டு வேலைக்கு ஆள் கிடைப்பது கஷ்டமாகி வரும் காலம் இது. சலவை இயந்திரங்களை உற்பத்தி செய்வதால், ஏகப்பட்ட அளவில் விற்கும். வேலைக்காரர்கள் இல்லாமலே துணிகளைத் துவைக்க விரும்பும் பெண்கள் சலவை இயந்திரங்களைக் கண்டுபிடிக்கலாம். எதுவானாலும் விளம்பரம் செய்ய வேண்டும். விளம்பரம் செய்தால் கண்டிப்பாக விற்க முடியும்.

எதையும் பெரிதாக கற்பனை செய்ய வேண்டும். பணம் சம்பாதிக்க வேண்டும் என்று எண்ணும்போது, ஆயிரக் கணக்கில் பணம் சம்பாதிக்க வேண்டும் என்று எண்ண வேண்டும். இலட்சங்கள் வந்ததும், கோடிக் கணக்கில் சம்பாதிக்க வேண்டும் என்று எண்ண வேண்டும்.

பணம் சேமிப்பது எளிய செயல் அல்ல, ஏகப்பட்ட தொல்லைகளைச் சந்திக்க வேண்டியிருக்கும். பணம் சேமிக்க நினைப்பவர் மனம் புண்படும்படி மற்றவர்கள் நடந்து கொள்ளலாம். அல்லது பேசலாம். அல்லது மற்றவர்கள் மனம் புண்படும்படி நடந்து கொள்ள நேரிடலாம். இதனால் இக்கட்டான நிலை ஏற்படும். பணம் பண்ணுவது ஒருவரால் தனியாக முடியாது. அவரைப் பலர் ஆதரிக்க வேண்டும்.

-தமிழ்வாணன்-

(தொடரும்)

# சமூக சேவையில் ஈடுபடுபவர்களை கௌரவிப்பது குறைந்து வருகிறது

## சாவகச்சேரி நகர சபைச் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.11

சமூகத்துக்கு தமது சேவைகளை வழங்கி வருபவர்களைக் கௌரவிப்பது இப்போது குறைந்து வருகின்றது.

மனிதன் வாழும் போது பல்வேறு வடிவங்களில் தனது சேவைகளை முன் வந்து ஆற்றுகின்றான் என்று சாவகச்சேரி நகர சபை செயலாளர் சு.புத்திசிகாமணி தெரிவித்தார்.

சாவகச்சேரி நகர சபையில் தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வுகள் நகரபிதா இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் அண்மையில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே புத்திசிகாமணி இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இன்று யாழ். மாவட்டத்தில் 55 பொது நூலகங்கள் உள்ளன. 1160 சனசமூக நிலையங்கள் உள்ளன. ஆனால் வாசிப்புப் பழக்கம் மாணவர்களிடையே அருகி வருகின்றது.

மாணவர்களின் வாசிப்பைத் தூண்டுவதற்கு ஆசிரியர்கள், பெற்றோர்களுக்கு மட்டுமன்றி உள்ளூராட்சி சபைக்கும் பெரிய பங்கு உண்டு. இந்தப் பணியை ஆற்றுவதன் ஊடாக எதிர்காலத்தில் பல மிக்க கல்விச் சமுதாய சிற்பிகளை நாம் உருவாக்க முடியும்.

இன்று எமது தேசத்தின் வளர்ச்சிக்காக பல சேவையாளர்கள் பல்வேறு வடிவங்களில் தமது சேவையை ஆற்றிவருகின்றனர்.

இதில் ஊடகவியலாளராக, சமூக சேவையாளராக, கலைஞனாக, கவிஞனாக, எழுத்தாளனாக பல கோணங்களில் சேவையாற்றி வருகின்றனர்.

இதனைவிட வடமாகாணத்தில் உள்ளூராட்சி சேவையில் சிறந்த சமூகப் பணிகளை முன்னெடுத்து வரும் வேலணைப் பிரதேசசபை செயலாளர் செ.ரமேஷின் கடந்த 10 ஆண்டு பணிகளுக்கு சிறந்த சமூக சிந்தனையாளர் எனும் உயர் பட்டமும் விருதும் வழங்கிக் கௌரவிக்கின்றோம்.

கடந்த மாதம் ஊடகவியலாளரைக் கௌரவித்தோம்.

இவ்வாறான மனிதர் வாழும் போதே வாழ்த்த வேண்டும். இதனை நாமும் செய்வதோடு ஏனைய சமூக ஆர்வலரும் முயற்சி செய்து சமுதாயத்துக்கு புத்துயிர் கொடுக்க முன்வரவேண்டும் - என்றார். (எ-50)



யாழ்.பிறவுண் வீதியில் அமைந்துள்ள ஐ.டி.எம்.சிறுவர் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற வாணி விழாவின்போது இடம்பெற்ற கல்வியா, செல்வமா, வீரமா என்னும் நாடகத்தில் பங்கு பற்றிய சிறார்கள்.

# ஆக்கத்திறன், கலைத்திறன் போட்டிகளில் வெற்றிபெற்றோர்

கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் அரச அலுவலர்களுக்கிடையில் நடத்தப்பட்ட ஆக்கத்திறன், கலைத்திறன் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரம் மாவட்டச் செயலக பண்பாட்டுக் கிளையால் வெளியிடப்பட்டுள்ளன.

**கட்டுரை**

1 ஆம் இடம்- திருமதி இ.மீனலோஜினி (அதிபர் உருத்திரபும் ம.வி.), 2 ஆம் இடம்- திருமதி சு.நிலாகினி (முகாமைத்துவ உதவியாளர் மாவட்டச் செயலகம், கிளிநொச்சி), 3 ஆம் இடம் - யோ. அனுசியா (முகாமைத்தவ உதவியாளர் பிரதேச சபை, கரைச்சி)

**கவிதை**

1 ஆம் இடம்- திருமதி சு .நிலாகினி (முகாமைத்துவ உதவியாளர் மாவட்டச் செயலகம், கிளிநொச்சி), 2 ஆம் இடம்- க.லிங்கராசா (முகாமைத்துவ உதவியாளர் மாவட்டச் செயலகம், கிளிநொச்சி), 3 ஆம் இடம்- யோ. அனுசியா (முகாமைத்தவ உதவியாளர் பிரதேச சபை, கரைச்சி).

**சிறுகதை**

1 ஆம் இடம்- திருமதி அ.இரஞ்சிதமலர் (ஆசிரியர் உருத்திரபுரம் ம.வி), 2 ஆம் இடம் - பா.ஜெயதாசன் (பண்பாட்டு அதிகாரி பிரதேச செயலகம், பளை), 3 ஆம் இடம் - உமாநிதி கணேசானந்தன் (சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை கிளிநொச்சி)

**கையெழுத்துச் சஞ்சிகை**

(1 ஆம் இடம் - 'கிளிஅமுதம்'- திருமதி சு .நிலாகினி (முகாமைத்துவ உதவியாளர் மாவட்டச் செயலகம், கிளிநொச்சி, 2 ஆம் இடம்- 'சுவடுகள்' -ம.றீற்றா ஜென்சி (முகாமைத்துவ உதவியாளர் பிரதேச செயலகம், பளை), 3 ஆம் இடம்- பா.ஜெயதாசன் (பண்பாட்டு அதிகாரி பிரதேச செயலகம், பளை).

**ஓவியம்**

1 ஆம் இடம்- ஆ. தீபன் திலீபன் (ஆசிரியர் பூநகரி ம.வி.), 2 ஆம் இடம்- மு.கஜோதரன் (புனர்வாழ்வு உதவியாளர் மாவட்ட செயலகம் கிளிநொச்சி), 3 ஆம் இடம்- த.பேரின்பசிவம் (வீதி அபிவிருத்தி அதிகார சபை, கிளிநொச்சி)

**தனிநடிப்பு**

1 ஆம் இடம்- வி.சந்திரமோகன் (ஆசிரியர், முழங்காவில் ம.வி), 2 ஆம் இடம் - இ. சுதர்சன் (அபிவிருத்தி உதவியாளர் பிரதேச செயலகம், கரைச்சி)

**தனிநடனம்**

1 ஆம் இடம்- வி.சந்திரமோகன் (ஆசிரியர் , முழங்காவில் ம.வி.)

**பேச்சு**

1 ஆம் இடம்-அ.கேதீஸ்வரன் (உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மாவட்ட செயலகம், கிளிநொச்சி), 2 ஆம் இடம்- மு.கஜோதரன் (புனர்வாழ்வு உதவியாளர் மாவட்டச் செயலகம், கிளிநொச்சி), இருவர் 3 ஆம் இடம்- த.ஜெயக்குமார் (ஆசிரியர், புனித திரேசாள் கல்லூரி), இ.சுதர்சன் (அபிவிருத்தி உதவியாளர் பிரதேச சபை, கரைச்சி)

**தனிப்பாடல்**

1 ஆம் இடம் - ஜெனில் சங்கரநாதன் (ஆசிரியர், பூநகர் ம.வி.), 2 ஆம் இடம்- யோ. அனுசியா (முகாமைத்துவ உதவியாளர் பிரதேச சபை, கரைச்சி), 3 ஆம் இடம்- திருமதி கி. குணாளினி (மாவட்டச் செயலகம் - கிளிநொச்சி)

**கவியரங்கம்**

1 ஆம் இடம் - (மாவட்டச் செயலக அணியினர் கிளிநொச்சி), 2 ஆம் இடம் (பிரதேச சபை அணியினர் கரைச்சி), 3 ஆம் இடம்- (புனித திரேசா பெண்கள் கல்லூரி அணியினர்)

**பட்டிமன்றம்**

1 ஆம் இடம் -புனித திரேசா பெண்கள் கல்லூரி அணியினர், 2 ஆம் இடம் - மாவட்டச் செயலக அணியினர் கிளிநொச்சி, 3 ஆம் இடம் - முழங்காவில் ம.வி. அணியினர். (எ)

# சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம்



பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் சமுர்த்தி உத்தியோகத்தராக பணியாற்றிவரும் பாக்கியநாதன் மணிக்குமார் சமாதான நீதிவானாக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். (எ-8)

# புலமைப் பரிசில் பெற்று ஆஸி. பயணமானார்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் சிரேஷ்ட உப அதிபர்வண. ஜி.நடராஜா மேற்படிப்புக்காக புலமைப் பரிசில் பெற்று ஆஸ்திரேலியா பயணமானார்.



யாழ்ப்பாணக் கல்லூரியில் 25 வருட சேவையைப் பூர்த்தி செய்த வண.ஜி.நடராஜா யாழ்ப்பாணக் கல்லூரி மிஷன் பற்றிய புகழ்பூத்த நூலை உருவாக்கி தேசிய ரீதியில் பரிசு பெற்றவர்.

பொருளியலிலும் அபிவிருத்தியிலும் இரு முதுமாணிப் பட்டங்களையும், இந்தியாவில் வணிகம்- ஆன்மிகம் தொடர்பிலான பட்டங்களையும் பெற்று பன்முக புலமையாளனான இவர், லூதர் செல்வராஜா ரெனிஸ் கழகத் தலைவராகவும், இறை போதகராகவும் சிறப்புப் பணியாற்றியவர். (ம-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' – மாலுசந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## இல்லாத இடம்தேடி...

தெனாலி இராமன் வீட்டுக்குள் திருடுவதற்காக மூவர் பதுங்கிக் கிடந்தார்கள். அவர்களின் ஆளரவத்தை வைத்து 'வீட்டில் உள்ள பொருள்களைக் கொண்டு செல்லவே அவர்கள் வந்திருக்கிறார்கள்'' என்பதை தெனாலி இராமன் உணர்ந்துகொண்டான். தூங்கிக்கொண்டிருந்த மனைவியை உரத்த சத்தம் போட்டு எழுப்பினான்.

''அடியே! எங்கள் வீட்டில் திருடர்கள் வருவதாக கனவு ஒன்று கண்டேன். நான் கண்ட கனவு பலிப்பது வழமை. ஆகவே வீட்டில் உள்ள பெறுமதியான பொருள்களை எல்லாம். இந்த இரும்புப் பெட்டிக்குள் போட்டு தோட்டக் கிணற்றுக்குள் எறிந்துவிடுவோம். திருடர்கள் வந்து சென்றதும், பெட்டியை மீண்டும் எடுத்து வரலாம்'' என்று திருடர்களின் காதில் விழும்படியாகக் கூறினான். பின்னர் பழைய இரும்புப் பெட்டியை தேவையற்ற பொருள்களால் நிரப்பினான்.

பெரிய சத்தம் எழும்படி கிணற்றுக்குள் போடப்பட்டது அந்தப் பெட்டி. தென்னாலி இராமனின் தந்திரத்தை உண்மை என்று நம்பிய திருடர்கள் இரவிரவாக கிணற்று நீரை இறைக்கத் தொடங்கினார்கள். வாய்க்காலில் வரும் நீரை தோட்டத்துக்கு பாய்ச்சினான் தெனாலி இராமன். விடியும் வரை திருடர்கள் தண்ணீரை வெளியேற்றியும் பெட்டி கிடைக்கவே இல்லை. அப்போது வெளிப்பட்ட தெனாலி இராமன் ''இன்றைக்கு இறைத்தது போதும் நண்பர்களே! அடுத்த இறைப்புக்கு நான்கு நாள் கழித்து வாருங்கள். நான் காத்திருக்கிறேன்'' என்று சொல்ல, அவமானத்தோடு வெளியேறினார்கள் திருடர்கள்.

இப்போதும் தெனாலி இராமர்களுக்கும், ஏமாந்து திரும்பும் திருடர்களுக்கும் குறைவேயில்லை. தெனாலி இராமன் கதையிலே கிணற்றை இறைத்து ஏமாந்த திருடர்கள் போல இப்போது பூநகரி கௌதாரிமுனையிலே கடற்கரையைத் தோண்டி ஏமாந்துகொண்டிருக்கிறது ஒரு கூட்டம். 1994 ஆம் ஆண்டு பயணிகளோடு பறந்த 'லயன்எயர்' விமானம் வான் பரப்பில் காணாமற்போயிருந்தது. விபத்துக்குள்ளாகி வீழ்ந்திருக்கலாம் என்றும், புலிகளே அதை சுட்டு வீழ்த்தினர் என்றும் இருவேறு கதைகள் அப்போது கிளம்பியிருந்தன. காலக் கதியில் மக்கள் 'லயன்எயர்' பயணிகள் விமானம் காணாமற் போனதையே மறந்தும் விட்டனர்.

இந்த நிலையில் குறித்த விமானத்தை புலிகளே சுட்டு வீழ்த்தினர் எனவும் அதில் உயிரிழந்த விமானிகளினதும் பயணிகளினதும் சடலங்கள் பூநகரி கடலோரமாக புதைக்கப்பட்டன என்றும் ஒரு முன்னாள் போராளி விசாரணையின் போது படையினரிடம் சொல்லியிருக்கிறார். அதையே வேத வாக்காகக்கொண்டு கிளம்பின படைகள். சிதைந்த விமானத்தின் பாகங்களை கடலுக்கடியில் மீட்பதற்கு ஒரு குழுவும், கடலோரத்தில் புதைக்கப்பட்ட சடலங்களைக் கண்டுபிடிக்க இன்னொரு குழுவும் புறப்பட்டன. இதில் முந்திக்கொண்டது சடலம் தேடும் குழுதான். தடயவியல்துறை நிபுணர்கள், சட்ட வைத்திய அதிகாரிகள் சகிதம் பூநகரி கௌதாரிமுனையை இந்தக் குழு அசுரவேகத்தில் தோண்டத் தொடங்கியது. 'தோண்டினார்கள்; தோண்டினார்கள்: பூமியின் மறுமுனைக்குச் செல்லுமளவுக்குத் தோண்டினார்கள்.' மணலைத் தவிர வேறெதுவும் கிடைக்கவில்லை. ஒருவேளை புலிகள் தான் 'லயன்எயர்' விமானத்தை சுட்டுவீழ்த்தியிருந்தாலும்கூட, அதில் உயிரிழந்தோரின் சடலங்களை அவர்கள் எரியூட்டியிருப்பார்கள். ஏனெனில் வழமையாகவே தாம் கைப்பற்றும் சடலங்களை புலிகள் புதைப்பது கிடையாது. அவற்றை உரிய தரப்பிடம் அதாவது செஞ்சிலுவைக் குழு ஊடாக ஒப்படைப்பதையோ அல்லது எரியூட்டுவதையோ தான் வழக்கமாகக் கொண்டிருந்தனர். போராளிகளின் சடலங்கள் மட்டும் தான் புதைக்கப்படுவதுண்டு.

'புலிகளும் மக்களை கொலை செய்தார்கள்' என்பதை உலகத்துக்கு காட்டுவதற்கே இவ்வாறு பதின்நான்கு வருடங்களுக்கு முன்னர் மரணித்துப் போனவர்களின் சடலங்களை முழுமூச்சில் தேடுகிறது அரசு. ஆனால் இதுவரை அந்த முயற்சிக்கு பயன்கிட்டவில்லை. செம்மணி, சூரியகந்த பகுதிகளில் வெட்டவெட்ட மனித எச்சங்கள் புறப்பட்ட போதும் அந்தப் புதை குழிகளைத் தோண்டுவதில் அரசு இவ்வளவு அக்கறை காட்டியிருக்கவில்லை. அவ்வளவு ஏன்? முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்று ஆதாரங்களோடு சர்வதேசமும், ஊடகங்களும் வெளிப்படுத்தி உள்ளன. ஆனால் அந்த இடங்களை அரசு பொத்தியே வைத்துள்ளது. அங்கு தடயவியல் நிபுணர்களை அனுப்பவோ சடலங்களை தேடவோ அரசு அக்கறை காட்டவே இல்லை. [அங்கு தோண்டினால் அங்குலத்துக்கு அங்குலம் சடலங்களை கண்டுபிடிக்கலாம் என்பது எல்லோருக்குமே தெரியும்.] ஆனால் இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம்தேடி எங்கெங்கோ– தெனாலி இராமன் கதையின் திருடர்கள் போல – அலையும் படலம் இன்னமும் தொடர்கிறதே ஞானப்பெண்ணே!

# அன்றைய முசாரப்பும் இன்றைய மஹிந்தவும்

உபுல் ஜோசப் பெர்னாண்டோ
மூலம்:- மவ்பிம
தமிழில்: வி.எஸ்.ரி.



கடந்த 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எட்டாம் திகதியன்று அவ்வேளைய பாகிஸ்தான் ஜனாதிபதி முசாரப், அந்த நாட்டின் பிரதம நீதியரசர் சௌத்திரியைத் தமது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார். பிரதம நீதியரசர் சௌத்திரி அங்கு சென்றவேளை, பாகிஸ்தான் இராணுவ ஜெனரல்கள் ஐந்துபேர் முசாரப்புடன் உடனிருந்தனர். சௌத்திரியைக் கண்டதும் நேரடியாக விடயத்துக்கு வந்த ஜனாதிபதி முசாரப், நீங்கள் உடனடியாக உங்களது பிரதம நீதியரசர் பதவியைத் துறக்கவேண்டுமென சௌத்திரியிடம் தெரிவித்தார். தாமும் ஜனாதிபதியின் அந்த உத்தரவை அனுமதிப்பதாக அங்கிருந்த இராணுவ ஜெனரல்களும் தலையசைத்துச் சைகை வெளிப்படுத்தினர். ஆயினும் தாம் அவ்விதம் தமது பிரதம நீதியரசர் பதவியைத் துறக்கத் தயாராயில்லையென சௌத்திரி கூறியதைக் கேட்டு ஜனாதிபதி முசாரப்பும் அவருடனிருந்த இராணுவ ஜெனரல்களும் கடும் கோபமுற்றனர்.

அந்த வேளையில் முசாரப் பாகிஸ்தானின் இராட்சகராகக் கருதப்பட்டார். இராணுவப் புரட்சியொன்றின் மூலம் நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட முசாரப் முதலில் மேற்கொண்ட வேலை, பிரதமர் பதவியை வகித்து வந்த நவாஸ் ஷெரிப் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தி அவரைக் கைது செய்து வீட்டுக் காவலில் வைத்ததன் மூலம் அவரைக் கட்டுப்படுத்தியமையாகும். சுல்பிகார் அலி பூட்டோ போன்று அவர் மீதும் இராஜ துரோகம் குற்றம் சுமத்திய மரணதண்டனை வழங்க முசாரப் முயற்சித்தபோதும் அமெரிக்காவின் தலையீட்டினால் அது தவிர்க்கப்பட்டது. உயிர்ப் பிச்சை பெறும் பொருட்டு தாம் அரசியலில் இனிமேல் ஈடுபடப் போவதில்லை என நவாஸ் ஷெரீப் உறுதியளித்ததை யடுத்து அவரால் உயிர் தப்பிப் பிழைக்க முடிந்தது. அதனையடுத்துத் தமக்குச் சவாலாயமைந்த மற்றொரு அரசியல் தலைவியான பெனாசிர் பூட்டோ மீது ஊழல் குற்றச்சாட்டுச் சுமத்தி அவரை நாடு கடத்த நடவடிக்கை மேற்கொண்டது டன் பாகிஸ்தானுக்குத் திரும்பி வந்தால் அவரைக் கைது செய்வதற்கான உத்தரவையும் முசாரப் பிறப்பித்தார்.

இவ்விதம் முசாரப் பாகிஸ்தானில் தமக்கெதிரான எதிரணியினரையும் அமைப்புக்களையும் நீதிமன்றத்தைப் பயன்படுத்தியே செயலிழக்க வைத்தார். ஆயினும் நீதித்துறைக்குத் தலைமை தாங்கவெனத் தம்மால் நியமிக்கப்பட்ட பிரதம நீதியரசர் சௌத்திரியை, பதவி விலகுமாறு தாம் பிறப்பித்த கட்டளைக்குத்தலைவணங்க மறுத்தவேளை ஜனாதிபதி முசாரப் பொங்கியெழுந்ததொன்றும் ஆச்சரியமல்லவே.

பாகிஸ்தானின் இரும்புத் தொழிற்சாலைகளை தனியார் மயப்படுத்த முசாரப் அரசு மேற்கொண்ட தீர்மானத்துக்கு எதிராகப் பிரதம நீதியரசர் சௌத்திரி வழங்கிய நீதிமன்றத் தீர்ப்பையடுத்தே சௌத்திரி மீது முசாரப்பின் சந்தேகம் விழுந்தது. இரும்புத் தொழிற்சாலைகளைத் தனியார் மயப்படுத்தும் திட்டத்துக்கு எதிராக தொழிற்சங்கங்கள் தொடுத்த வழக்கின் தீர்ப்பில் அதனால் ஏற்பட்டத் தக்க ஊழல்களைச் சுட்டிக்காட்டியே பிரதம நீதியரசர் அரசின் அந்தத் திட்டத்துக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கியிருந்தார்

வீடமைப்புத் திட்டமொன்று தொடர்பாக, அரசின் அந்தத் திட்டத்தால் சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுவதாக சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் இவ்வி[...] எதிர்ப்பை அரசு நிராகரித்தது. அந்தத் திட்டத்தில் அமைச்சர்கள் மற்றும் இராணுவ ஜெனரல்கள் நிதி முதலீடு செய்திருந்தமையே அரசின் அந்த முடிவுக்குக் காரணம். ஆயினும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் அதற்கெதிராக நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கில் அந்தத் திட்டத்தைக் கைவிடுமாறு பிரதம நீதியரசர் சௌத்திரி தீர்ப்பளித்திருந்தார்.

இவ்விரு வழக்குத் தீர்ப்புக்கள் அரசுக்கு எதிராக அமைந்ததன் காரணமாகவே ஜனாதிபதி முசாரப் பிரதம நீதியரசரைப் பதவி விலகுமாறு உத்தரவிட நேர்ந்தது. தமது உத்தரவுக்கமைய சௌத்திரி தமது பிரதம நீதியரசர் பதவியிலிருந்து விலகிக் கொள்வார் என்றே முசாரப் நம்பினார். ஏனெனில் ஜனாதிபதி முசாரப்பை அந்த வேளையில் பகைத்துக் கொள்ளும் பலம் பிரதம நீதியரசருக்கு இருக்கவில்லை. அந்த வேளையில் பாகிஸ்தான் அரசில் எதிர்க்கட்சி என்று கூட எதுவும் இருக்கவில்லை. இருந்தவொரு எதிரணித் தலைவரும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். மற்றொரு எதிரணித் தலைவி அரசியல் தஞ்சம் பெற்று வெளிநாடொன்றில் தங்கியிருந்தார். பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து ஜனாதிபதி முசாரப் அந்தவேளையில் நாட்டு மக்கள் மத்தியில் பிரபல்யம் ஈட்டியிருந்தார். இராணுவப் புரட்சியொன்றின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தாலும் தாமொரு ஜனநாயக விரும்பி என உலகுக்குக் காட்ட பாகிஸ்தானில் பொதுத் தேர்தலொன்றை நடத்தி அதன் மூலம் தமது வெற்றியை உறுதிப்படுத்திக் கொண்டுமிருந்தார். அதேபோன்று உலக பயங்கரவாதத்துக்கெதிரான அமெரிக்காவின் செயற்பாடுகளுக்கு ஆதரவளித்ததன் மூலம் அமெரிக்காவின் செல்லப்பிள்ளையாகவும் ஆகியிருந்தார்.

ஆயினும் ஜனாதிபதி முசாரப்புடன் முரண்பட்டுக் கொள்ள வேண்டாமெனத் தமது நண்பர்கள் வழங்கிய ஆலோசனையைப் புறக்கணித்து, பிரதம நீதியரசர் சௌத்திரி தமது பதவியை விட்டு விலக இயலாதெனத் தெரிவித்தார். தாம் முன்னெடுக்கும் போராட்டத்துக்கு ஆதரவாக தம்முடன் இணைந்து கொள்ளுமாறு தமது நண்பர்களைக் கேட்டுக் கொண்டார்.

அதேவேளை தமக்குக் கிடைத்த பிரதம நீதியரசருக்கு எதிரான ஊழல் முறைப்பாடுகளின் அடிப்படையில் பிரதம நீதியரசரைப் பதவிலியிருந்து நீக்குவதாக ஜனாதிபதி முசாரப் பிரகடனப்படுத்தினார். அத்துடன் பிரதம நீதியரசர் சௌத்திரிக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய 'சுப்ரீம் யூடிஷல் கவுன்சில்' ஒன்றையும் நியமித்தார். அந்தக் கவுன்சிலில் அங்கம் வகித்த தமது ஆதரவாளர்களான நீதியரசர்களூடாக விசாரணைகள் தமக்குச் சாதகமாக அமையுமாறு முசாரப் ஏற்பாடுகளை மேற்கொண்டார். ஆயினும் பிரதம நீதியரசர் சௌத்திரி, பாகிஸ்தானின் வரலாற்றில் முதல் தடவையாக அந்தச் சுப்ரீம் யூடிஷல் கவுன்சிலின் விசாரணைக்கு சவால் விடுத்து, முசாரப்பின் குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தை நாடினார். உயர் நீதிமன்றில் சௌத்திரியின் தரப்பில் பாகிஸ்தானின் பிரபல ஐந்து வழக்கறிஞர்கள் ஆஜராகினர். 'றீம் ரீம்' எனச் சௌத்திரியால் அழைக்கப்பட்ட அந்த ஐந்து வழக்கறிஞர்களும் உயர் நீதிமன்றிலும் வெளியிலும் சௌத்திரி தரப்பு நியாயத்தை முன்வைத்து வாதாடினர். சௌத்திரிக்கு ஆதரவாக 25 மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கலாகின. உயர் நீதிமன்றத்தில் சௌத்திரியின் வழக்கு 13 நீதியரசர்களை உள்ளடக்கிய ஆயத்தால் விசாரிக்கப்பட்டது. உயர் நீதிமன்றத்தில் வழக்கு ஒரு புறம் விசாரணை செய்யப்பட்டு வந்த நிலையில் சௌத்திரிக்காக ஆஜரான வழக்கறிஞர்களால் நாடு முழுவதும் சௌத்திரிக்கு ஆதரவாக கூட்டங்களும் ஊர்வலங்களும் ஒழுங்கு செய்து நடத்தப்பட்டன. ஜனாதிபதி முசாரப்பைப் பகைத்துச் செயற்படும் அந்தப் பலவான் யாரென அறிந்து கொள்ள பொதுமக்கள் திரண்டனர்.

கடைசியில் 2007 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் திகதியன்று பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் பிரதம நீதியரசர் சௌத்திரியை ஜனாதிபதி முசாரப் பதவியிலிருந்து விலக்கியமை சட்டபூர்வமற்றதெனத் தனது தீர்ப்பை வெளியிட்டது. அது ஜனாதிபதி முசாரப்பின் அதிகாரமமதைக்கு விடுக்கப்பட்ட முதலாவது தாக்குதலாகும். அதன் பின்னர் காலப்போக்கில் முசாரப்பின் அதிகாரம் மெதுமெதுவாக நலிவுகண்டது.

பிரதம நீதியரசர் சௌத்திரியைப் பதவி விலகுமாறு அன்று முசாரப் கட்டளையிட்டபோது, இன்று தென் ஆசிய வட்டகையிலேயே சக்திமிக்க ஜனாதிபதியாகத் திகழும் மஹிந்த ராஜபக்ஷ போன்று பாகிஸ்தானின் சக்திமிக்க ஜனாதிபதியாக முசாரப் திகழ்ந்தார்.

அன்று பாகிஸ்தானின் அதிசக்தி வாய்ந்த ஜனாதிபதி முசாரப்புடன் பலம் குறைந்த பிரதம நீதியரசர் சௌத்திரி முரண்பட்டுக் கொண்ட வேளை, சௌத்திரியின் பின்னால் இருந்தோர் நீதியரசர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் குடிசார் அமைப்புக்கள் மட்டுமே. எதிர்க்கட்சித் தலைவர்கள் எவரும் சௌத்திரிக்கு ஆதரவாகச் செயற்படாத போதிலும் எதிர்க்கட்சி ஆதரவாளர்களான பொதுமக்கள் சௌத்திரிக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தனர்.

இன்று இந்த நாட்டின் ஜனாதிபதியுடன் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா முரண்பட்டிருக்கும் நிலையிலும் பிரதம நீதியரசருக்கு ஆதரவாக அத்தகைய தரப்பினரே செயற்பட்டு வருகின்றனர்.

திவிநெகும சட்ட மூலத்துக்கு எதிராகத் தாம் தீர்ப்பு வழங்கியதன் பின்னர், பிரதம நீதியரசர் பதவியைத் துறக்குமாறு கோரப்பட்டமைக்கு ஷிராணி பண்டாரநாயக்கா மதிப்பளிக்க மறுத்தவேளை அவர் பின்னால் அவருக்கு ஆதரவாக எவரும் இருக்கவில்லை. ஆயினும் தமதுபோராட்டத்துக்கு ஆதரவளிக்குமாறு அவர் நீதியரசர்களையும் வழக்கறிஞர்களையும் கோரியிருக்கக் கூடும். தற்போது அத்தகைய 'றீம் ரீம்' ஒன்று அவர் பின்னால் அணி திரண்டுள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணையைத் தோற்கடிக்கும் முயற்சியில் இறங்கியுள்ள இந்த றீம் ரீம் தனது முயற்சியில் வெற்றியடையுமா? அல்லது தோல்வியைத் தழுவுமா? என்பதற்கான விடையைத் தெரிந்து கொள்வதற்கான காலம் இன்னமும் கனியவில்லை. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சியில் இறுதியாக ஐ.நா அதிகாரியாகப் பணியாற்றிய பென்ஜமின் டிக்ஸ், 'இலங்கைக் குடும்பம் ஒன்றின் மீதான போர்த் தாக்கங்களின் அதிர்வுகள் தொடர்பான பிரதிபலிப்புகள்' என்ற பெயரில், இலங்கைப் போரின் தாக்கங்களை வெளிப்படுத்தும் ஓவிய நாவல் ஒன்றை வெளியிட்டுள்ளார். அதுபற்றிய அவரது குறிப்பு.






# ஓவிய நாவலாகும் வன்னிப் போர் அவலம்

## ஒரு ஐ.நா. அதிகாரியின் அனுபவம்

2008 செப்ரெம்பர் 12 ஆம் நாள், விடுதலைப் புலிகளின் நிர்வாகத் தலைமையகமான கிளிநொச்சியில் இருந்து வெளியேற வேண்டும் என்று நான் கேட்கப்பட்டிருந்தேன்.

இலங்கை இராணுவம் தெற்கே சில கி.மீ தொலைவில் இருந்து, ஏற்கனவே நகரின் மீது எறிகணைகளை வீசிய போது, ஐ.நா வளாகமும் தாக்கப்பட்டது.

எனது ஐ.நா பணியகத்தில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தொலைவில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலின் போது, குண்டுச் சிதறல்கள் எமது முற்றத்தில் மழையாகக் கொட்டின.

நாம் வெளியேறப் போகிறோம் என்ற செய்தி வெளியானதை அடுத்து, நூற்றுக்கணக்கான தமிழ்ப் பொதுமக்கள், எமது பணியகத்துக்கு வெளியே எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தி, எம்மை வெளியேற வேண்டாம் என்று கோரினர்.

20 ஆண்டு மோதல்களுக்குப் பின்னர், அனைத்துலக முகவர் அமைப்புகள், அதிகாரிகளின் பிரசன்னம் அந்தப் பிரதேசத்தில் இல்லாமல், இலங்கை இராணுவம் கடும் பலத்துடன் முன்னேறும் என்பதை அவர்கள் புரிந்து கொண்டிருந்தார்கள்.

ஆனால், அது எந்தளவுக்குக் கடுமையானதாக இருக்கும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

தமது பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்காக அனைத்துலக செஞ்சிலுவைக் குழு வன்னிக்குள் வடக்கே மேலும் நகர்ந்தது. நாம் (ஐ.நா) வெளியேறத் தயாரானோம்.

வன்னியில்கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகள் நான் பணியாற்றியிருந்தேன்.

எமது பணியாளர்கள், மற்றும் சமூகத்தில் நான் பல நண்பர்களைப் பெற்றிருந்தேன்.

ஐ.நா பணியாளர்களில் தங்கியிருப்போர் உள்ளிட்ட வன்னிப் பகுதி மக்கள் அங்கிருந்து வெளியேறுவதற்கு, விடுதலைப் புலிகள் மிகவும் இறுக்கமான அனுமதி வழங்கும் நடைமுறையை வைத்திருந்தனர்.

நாம் அவர்களை விட்டுவிட்டு வெளியேறப் போவதால், மிகுந்த துன்பத்துடன், உணர்ச்சிமயமான சூழலில், அவர்களிடம் விடைபெறத் தொடங்கினோம்.

நான் அடிக்கடி சென்ற ஒரு குடும்பம் அது. அவர்களை எனக்கு மூன்று ஆண்டுகளாகத் தெரியும்.

அவர்களின் திருமணத்தில் பங்கேற்று, அவர்களின் மகள் பிறந்தபோது, அவர்களின் வீட்டுத் தோட்டத்தில் உள்ள மாமரத்தின் கீழ் இருந்து சுவையான உணவைச் சாப்பிட்டு, இப்படி அவர்கள் எனது நெருக்கமான நண்பர்களாக இருந்தனர்.

அவர்கள் என்னைத் தம்பி என்றே அழைத்தனர். குடும்ப உறுப்பினராகவே பழகினர்.

வெளியேறுவதற்கு முதல் நாள் இரவு 9 மணியளவில் நான் அவர்களின் வீட்டுக்குச் சென்றேன்.

தவளைகளின் இரவுநேர இரைச்சல்களை மிஞ்சியபடி, அருகிலேயே எறிகணைகள் விழும் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன.

அந்தக் குடும்பம் முற்றாக நம்பிக்கையிழந்து போயிருந்ததைக் கண்டேன்.

முந்தைய நாள் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலை அடுத்து, கணவன் பதற்றத்துடன் அவசியமான பொருள்களைத் தனது உழவு இயந்திரத்தில் ஏற்றிக் கொண்டிருந்தார். அவர்களின் இரண்டு வயதுக் குழந்தையுடன் மனைவி பதுங்கு குழியில் மனமின்றிப் பதுங்கியிருந்தார்.

எமது வெளியேற்றத்துடன் எல்லோரும் அந்த இடத்தை விட்டு வெளியேறினார்கள்.

எனது நண்பர் என்னைப் பார்த்துக் கேட்டார், உண்மையிலேயே நீங்கள் வெளியேறுகிறீர்களா? எமக்கு என்ன நடக்கப் போகிறது?

அந்தச் சூழலில் குழப்பத்தில் இருந்த நான் அவருக்கு சில பதில்களைக் கூறினேன்.

ஐ.நாவின் அதிகாரபூர்வமான வரியில் சொல்வதானால், நாம் இடமாற்றம் செய்யப்பட்டோம்.

விரைவில் திரும்புவோம் என்று கூறுவது அபத்தமானது.

நாம் வெளியேறிய பின்னர், இலங்கை அரசு எம்மை மீளத் திரும்ப அனுமதிக்காது.

உழவு இயந்திரத்தில் பொருள்களை ஏற்ற அவர்களுக்கு நான் உதவினேன். அங்கே சொல்வதற்கு எதுவுமேயில்லாததால், அமைதியாக இருந்தோம்.

எனக்கு ஒரு கோப்பை தேநீர் வழங்கப்பட்டது. அமைதியாக அதைக் குடித்தேன். நல்ல அதிர்ஷ்டம், பாதுகாப்பாக இருங்கள், விரைவில் உங்களைப் பார்ப்பேன் என்பதை விட அவர்களுக்குச் சொல்ல என்னிடம் வார்த்தைகள் இருக்கவில்லை. அது எனக்கு மோசமானதாகத் தெரிந்தது. அழகான கொழுப்பு நிறைந்த கன்னங்களை கொண்ட சிறிய பெண் குழந்தையை இறுகக் கட்டியணைத்து, [illegible]

[illegible] நான் எனது காரை நிறுத்தி விட்டு வீதியின் பக்கம் வெறித்துப் பார்த்தேன். மறுநாள் காலை நாம் எமது வாகனங்களை அணியாக நிறுத்தியிருந்தோம்.

நாம் வெளியேறுவதைப் பல பொதுமக்கள் எமது வளாகத்துக்கு வெளியே நின்று பார்த்துக் கொண்டிருந்தனர்.

எமது வெளியேற்றம் காலை 11 மணியளவில் இடம்பெறுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. காலை 10.45 மணியளவில், இலங்கை விமானப்படை எம்மில் இருந்து 2 கி.மீ தொலைவில் வீதியில் குண்டுகளை வீசியது.

இப்போது விலகலாம் என்ற என்ற செய்தியை அது கூறியது.

தலைக்கவசம், உடற்கவசம், உள்ளிட்ட எல்லா பாதுகாப்பு விதிமுறைகளும் வாகனத்தில் இருந்தன.

சேலை அணிந்த, சாரம் அணிந்த குடும்பங்களைத் தாண்டி வாகனத்தைச் செலுத்தினேன்.

அவர்களைக் கைவிட்டுச் செல்வதான குற்றஉணர்வினால் நான் பாதிக்கப்பட்டேன்.

பொதுமக்களைப் பாதுகாக்கின்ற கொள்கை இல்லாத ஐ.நாவில் இருந்து என்ன செய்யப் போகிறேன்? என்று எனது உள்ளுணர்வு கேள்வி எழுப்பியது. மறுநாள் ஐ.நாவில் இருந்து நான் பதவி விலகிக் கொண்டேன். தொடர் நிகழ்வுகளால் வெறுப்படைந்து இலங்கையை விட்டு வெளியேறும் சூழலை ஏற்படுத்தியது.

அடுத்த இரண்டு ஆண்டுகள், வரையறுக்கப்பட்ட ஊடக செய்திகள் மூலம் இலங்கையை மிகவும் உன்னிப்பாக கவனித்தேன். நண்பர்கள் இறந்துபோன செய்திகள் கிடைத்தன.

2011 மே மாதம், கிளிநொச்சியில் இருந்த நண்பரின் கணவரின் முகநூலில் இருந்து நட்புக்கான அழைப்பு கிடைத்தது.

அவர்கள் எல்லோரும் உயிர்தப்பி, இந்தியா சென்றார்கள்.

அதேவேளை, அவர்களைப் பார்க்கச் சென்றபோது, கணவர் ஏற்கனவே ஐரோப்பா புறப்பட்டு விட்டார்.

புலம்பெயர் தமிழர்கள் மூலம் சேகரித்த 20 ஆயிரம் டொலரை முகவருக்கு கொடுத்து, மனைவி மற்றும் மகளை விட்டு விட்டு புகலிடம் தேடிச்சென்றார்.

சென்னையில் சேரிப்பகுதியில் உள்ள ஒரு சிறிய கொங்றீட் அறையில் நான், எனது பழைய, அன்பு நண்பருடன் அமர்ந்திருந்தேன்.

வெளியில் உள்ள நீர்த் தேக்கத் தொட்டியில் இருந்து துர்நாற்றம் வந்து கொண்டிருந்தது. இப்போது 5 வயதாகும் அந்தக் குழந்தை என் மடியில் அமர்ந்து மாமா என்று அழைத்தது.

இந்தக் கதையைச் சொல்ல வேண்டும் என்று நான் புரிந்து கொண்டேன்.

சிறிய கடற்கரைப் பகுதிக்குள் கடுமையான குண்டு வீச்சுகளில் இருந்து இந்தக் குடும்பம் உயிர் பிழைத்தது.

இறுதிவாரங்களில் அவர்கள் எதுவும் செய்ய முடியாத போது தற்கொலை செய்து கொள்வது பற்றி சிந்தித்தார்கள்.

ஐ.நாவினால் அமைக்கப்பட்ட, இலங்கை அரசினால் நடத்தப்படும் பாதுகாப்பு நரகமான முகாம்களில் அவர்கள் ஏழு மாதங்கள் வாழ்ந்தார்கள்.

அதன்பின்னர், இந்தியாவுக்குத் தப்பிச் சென்றனர்.

அவர் இப்போது சென்னையில் தனியாக, பாதிக்கப்படக் கூடிய சூழலில் வாழ்கிறார். அவள் தனது கணவரிடம் இருந்து பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளார்.

போரின் நீண்டகால விளைவாக இதைக் காண்கிறேன்.

இந்தக் குடும்பமும், இது போன்ற ஏனையவர்களும் தமது வீடுகளைப்பார்க்கப்போவதில்லை.

அவர்கள் வெளிநாடுகளில் நிரந்தரமாக குடியேறப் போகிறார்கள். இதுபோன்ற கதைகளை உயிர்தப்பி அகதிகளாக ஐரோப்பாவிலும், இந்தியாவிலும் அடைக்கலம் தேடியுள்ளோரிடம் சேகரித்துள்ளேன். கணவர் அன்ரனி இப்போது லண்டனில் இருந்து கொண்டு, இலங்கையில் தனது கடந்தகால வாழ்க்கையை, புகலிட சட்டவாளரிடமும், சென்னையில் உள்ள தனது மனைவியுடன் ஸ்கைப் வழியாகவும் பகிர்ந்து கொள்கிறார்.

திரைப்பட இயக்குனர் லன்ட்சே பொலொக்கும் நானும், 2011 இல் இந்தக் கதை ஓவியங்களை வரையத் தொடங்கி இப்போது நூல் வடிவைப் பெற்று வருகிறது.

நவீன போர்முறையின் கொடூரத்தன்மையை மக்கள் இன்னமும் புரிந்து கொள்ளவில்லை என்று நான் நம்புகிறேன்.

ஆனால், மோதலின் விளைவுகள் ஒரு குடும்பத்தில் பல தலைமுறைகளுக்கும் தொடரும். ★

(நன்றி : புதினப்பலகை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்றற்றிரு

உலக வாழ்க்கை என்பது நிலையானதன்று.

மனிதன் வாழ்வது சில காலம் மட்டுமே.

அந்தச் சொற்ப காலத்திலும், தூக்கத்தில் பாதியை இழந்து விடுகின்றான்.

எஞ்சி இருப்பது மிகச் சில நாள்களே.

இந்த நாள்களில் சுகபோகங்களில் மனதைச் செலுத்தி, இறைவனை மறந்து வாழ்ந்திட வேண்டாம்.

அதற்குரிய முயற்சியைச் செய்.

மனிதனைப் பிறவித் தளைக்குள் கட்டுப்பட வைப்பது உலகின் மீது அவன் கொண்ட பற்று ஆகும்.

இந்த உடலின் மீது பற்று வைப்பதே பரமனை அடையத் தடையாக இருக்கிறது.

கப்பல் கடல் மீது மிதந்தால் நினைத்த இடத்துக்குச் செல்ல முடியும்.

கடல் நீர் கப்பலுக்குள் நுழைந்து விட்டால் கப்பல் கடலுக்குள்ளேயே மூழ்கி விடுகிறது.

அதுபோல் மனிதன் உலகில் வாழலாம். உலக ஆசைகள் அவன் மனதில் நுழையாத வரை அவன் இறைவனை நெருங்குகிறான்.

உலக ஆசைகள் மனதிற்குள் நுழைந்து விட்டால் பிறவிப் பெருங்கடலில் அவன் மூழ்கிவிடுகிறான்.

இராமகிருஷ்ண பரமஹம்ஸர் கூறிய அமுத மொழி இது.

நீ உடலின் மீது பற்று வைக்கிறாய்.

உடலைப் பேணி வளர்ப்பதிலேயே நாள்களை விரயம் செய்கிறாய்.

உடலைப் பேணி வளர்ப்பதில் தவறில்லை.

நிலையான மோட்சத்தை அடைய நிலையற்ற இந்த உடல் அவசியமாகிறது.

உடல் ஒரு கருவி. அதன் துணை கொண்டு நீ இறைவனை அடைய இயலும்.

ஆனால் அதற்காகவே நீ அதிக நேரத்தைச் செலவிடாதே!

என்றேனும் ஒரு நாள் இவ்வுடல் அழியப்போகிறது.

நீ எப்படித்தான் பேணிக்காத்தாலும் இந்த உடம்பிற்கு முதுமை வரத்தான் போகின்றது.

பின் எதற்காக இந்த உடலின் மீது பற்று?

அடுத்து நீ பொருள் மீது பற்று வைக்கிறாய்.

நீ பாடுபட்டு கோடி கோடியாய் பணம் சம்பாதித்தும், மேலும் மேலும் பணம் சம்பாதிப்பதையே குறிக்கோளாய்க் கொண்டிருக்கின்றாய்.

அந்தப் பணம் உனக்கு நிம்மதியைத் தருவதில்லை.

மன அமைதியைத் தருவதில்லை.

ஏன்? இறையருளைப் பெற்றுத் தருமா அந்தப் பணம்?

பின் எதற்காகப் பணத்தின் மீது பற்றுக் கொண்டு அதன் பின்னே ஓடுகிறாய்?

பாடுபட்டுச் சேர்த்து பணத்தை மறைத்துவைக்கும்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்-கூடுவிட்டு
ஆவிபோன பின்னரே யாரோ அனுபவிப்பார்
**பாவிகாள் அந்தப் பணம்.**

என்றார் பட்டினத்தார்.

ஆகவே, இறைவனின் திருவடிப் பற்றைத் தவிர, வேறெந்தப் பொருளிலும் பற்று வைக்காதே.

உயிர்களிடத்தும் பற்று வைக்காதே.

உறவிடத்தும் பற்று வைக்காதே.

ஆனால் அன்பு செலுத்து.

இறைவனின் திருவடி உனது பற்றறுக்கும்.

**''பற்றுக பற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு''**

என்பார் வள்ளுவர்.

தாமரை இலை நீர் போல் இரு என்பர் பெரியோர்.

எது வந்தாலும் ஏற்றுக் கொள்ளும் பக்குவம் பற்றற்ற மனதுக்குத்தான் உண்டு.

பற்றறுத்துப் பரமனை நாடு.

உலகில் உனக்குச் சொந்தமானது என்று எதுவுமில்லை என்று உணர்ந்து கொள்.

உனக்குச் சொந்தம் என்று நினைக்கும் போது தான் பற்று வளர்கிறது.

ஒரு ரூபாயைத் தொலைத்துவிட்டு, அதற்காக ஒரு மாதகாலம் மனம் வருந்துவோருண்டு.

ஒன்றின் மீது பற்று இருந்தால்தான் அதை இழக்கும் போது கவலை தோன்றும்.

உன்னிடம் எது இருக்க வேண்டும் என்ற விதி இருக்கிறதோ அதுதான் இருக்கும்.

உன்னை விட்டு, எது போக வேண்டும் என்று இருக்கிறதோ அது போயே தீரும்.

அது ஒரு ரூபாயாக இருந்தாலென்ன? ஒரு கோடியாக இருந்தால் என்ன?



இழக்க வேண்டும் என்று இறைவன் உனக்கு விதித்திருந்தால் அதைத் தடுக்க யாரால் முடியும்?

இழப்பை நினைத்து வருந்துவதால் பயனொன்றும் இல்லை.

உலகில் எதுவுமே நிரந்தரமல்ல.

இறைவன் மட்டுமே நிரந்தரமானவன்.

**பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்**



# சங்கிலியன் சந்திப்பை வெளிப்படுத்தும் திருநெல்வேலியில் சவேரியார் ஆலயம்




**எஸ்.யேசுதாஸ்**

மக்களின் ஆன்மிக உந்துதலின் வெளிப்பாடாக உருவாக்கப்பட்டு வழிபடப்படுவதே ஆலயங்களாகும். மக்களை நல்வழிப்படுத்தி அன்பு, கருணை, பண்பு , மனிதநேயம், இறைபற்றில் வளர்த்துச் செல்ல பல்வேறு மதங்கள் நன்னெறிகளைப் போதித்து பணி புரிந்து வருகின்றன. மனிதன் தன் சிந்தையில் சமய விழுமியங்களைச் சீர்தூக்கிப் பார்த்து தன்னைக் கவர்ந்த மதத்தைப் பின்பற்றி, அதன் கோட்பாடுகளில் வாழ்ந்து நற்கதி அடைய முயல்கின்றான். அதற்கு வழிகாட்டும் பக்தி அமைப்பாக ஆலயங்கள் திகழ்கின்றன.

போர்த்துக்கீசர் வருகையுடன் கத்தோலிக்க சமயம் வடபகுதியின் கரையோரக் கிராமங்களில் காலூன்றி வளர்ச்சி அடைந்ததாக வரலாறுகள் தெரிவிக்கின்றன. காலப்போக்கில் கத்தோலிக்க மறையை நிர்வகித்த ஆலயங்கள் சுதேச மறைபோதகக் குருக்களின் அயராத இறைபணி வாஞ்சை மிகு செயற்பாடுகளால் உள்ளக நகரங்களிலும், கத்தோலிக்க மறை ஆலயங்கள் தாபிக்கப்பட்டன.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட ஆலயங்களில் ஒன்றாக நூறாண்டு கடந்து மக்களை இறைவழி யில் நடத்திச் செல்கிறது திருநெல்வேலி புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம். யாழ்.நல்லூர், ஆடியபாதம் வீதியில் கல்வியங்காடு சந்தைக்கு மேற்குப் பக்கமாக அமைந்துள்ளது இந்த ஆலயம்.

இந்தப் பகுதி முற்றிலும் இந்து சமய சகோதரர்கள் வாழும் இடமாக இருந்த போதிலும், இயேசுவின் திருமறையை அனைவரும் அறிந்து அதிலே இணைய வேண்டும் என்ற நோக்கில் ஆலயம் அமைக்கப்பட்டது. யாழ்.கத்தோலிக்கத் திருச்சபையின் வளர்ச்சிக்கும், பல்வேறு இடங்களிலும் பல ஆலயங்கள் அமைவதற்கும் பெரும்பங்காற்றிய சுதேச மறைபரப்பாளரான நல்லூர் சுவாமி ஞானபிரகாசரின் அயராத முயற்சியால் 1906 ஆம் ஆண்டின் முற்பகுதியில் கல்வியங்காடு சந்திக்கு கிழக்குப் பக்கமாகவுள்ள வேறொரு காணியில் ஓலைக் கோயிலாக முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஆலயத்தில் 'இசபெல்' என்ற பெண்ணொருவர் முதலில் திருமுழுக்குப் பெற்று கத்தோலிக்க மறையைத் தழுவிக் கொண்டார்.

சுவாமி ஞானப்பிரகாசர் இக்காலப்பகுதியில் நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் தங்கியிருந்து பணிபுரிந்து வந்தார். ஆரம்ப ஆலயம் 18 மாதங்களாக இயங்கி வந்த நிலையில் சொந்தக் காணியில் நிரந்தர ஆலயம் அமைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்படி தற்போதைய ஆலயம் அமைந்துள்ள காணி 1907 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இறப்பியேல் பிள்ளை உபதேசியார் மூலமாக வாங்கப்பட்டது. பனை வடலிகள் நிறைந்து காணப்பட்ட அவ்விடம் சுத்தம் செய்யப்பட்டு சிறிய ஆலயம் அமைக்கப்பட்டது.

இவ்வேளையில் பிறமத சகோதரர்களிடமிருந்து பல எதிர்ப்புக்கள் தோன்றிய போதிலும் கரையோரப் பகுதிகளில் இருந்து கத்தோலிக்க மறையை உள்ளக கிராமங்களுக்கு பரப்புவதில் முன்னின்று உழைத்த வடபகுதியின் மறை பரப்புனர் என்று அழைக்கப்படும் அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த சுவாமி ஞானப்பிரகாசரின் விசுவாசமிக்க வேண்டுதலும், அன்பும் அரவணைப்பும், மதிநுட்பமும் தடைகளைத் தகர்த்து ஆலயம் வளர்ச்சி பெற உதவியது.

இந்த ஆலயத்தில் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த யோக்கீம், ஆன்மரியாள் ஆகியோர் 29.09.1907 இல் கிறிஸ்தவ மறையைத் தழுவினர். ஞானப்பிரகாசர் சுவாமிகள், இறப்பியேல்பிள்ளை, அந்தோனிஸ் ஆகியோரை மக்களிடம் அனுப்பி மறையைப் போதித்தார். முதல் திருப்பலி 1907 மார்கழி 3 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது. யாழ். நகர்ப் பகுதியில் கத்தோலிக்க மக்கள் பலரும் இதில் கலந்து கொண்டதாக அருட்திரு.ஞா.பிலேந்திரன் அடிகள் வடபகுதி கத்தோலிக்க ஆலயங்கள் சிலவற்றின் வரலாற்று நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆலயத்தில் தென்கிழக்கு ஆசியாவில் மறைபோதகத்தை மேற்கொண்டு பல்லாயிரம் மக்களை மனந்திருப்பி, சிலுவையை உயர்த்தி சேவை செய்த புனித பிரான்சிஸ் சவேரியாரை எழுந்தேற்றம் செய்து வணங்கி வருகின்றனர். இந்தப் புனிதர் ஸ்பெயின் நாட்டில் சவியர் என்னும் இடத்தில் செல்வந்தக் குடும்பத்தில் 1506 ஆம் ஆண்டில் பிறந்தார். கல்வி, கலைகளில் சிறந்தவரான இவர் பரீஸ் சர்வகலாசாலையின் பேராசிரியராக விளங்கியபோது புனிதா இஞ்ஞாசியாரின் போதனையால் கவரப்பட்டு உலகப் பற்றை விடுத்து இறைபணியேற்று குருவானார்.

உலகின் கடை எல்லை வரை கிறிஸ்தவ மறையை அறிவிக்கும் நோக்கில் 1542 ஆம் ஆண்டு இந்தியாவில் கோவாப் பகுதிக்குச் சென்று மணப்பாடு, கீழ்க்கரை, பெரியபட்டணம், வேர்க்காடு, கொழும்புத்துறை, கடுக்கை போன்ற பல பகுதிகளில் சேவையாற்றி 50 ஆயிரத்துக்கு மேற்பட்டோரை திருமறையில் இணைத்தார். அத்துடன் சீனா, மலாக்கா, ஜப்பான், இலங்கை போன்ற நாடுகளில் போதகப்பணியை மேற்கொண்டார். பல்வேறு அதிசயங்கள், அற்புதங்களைப் புரிந்தார்.

1548 ஆம் ஆண்டு நல்லூர்ப் பகுதிக்கும் வந்த இவர் சங்கிலி மன்னனின் அரண்மனையைத் தரிசித்ததாகவும் இவர் கை ஊன்றி நின்று உரையாடிய அரண்மனை முகப்பு இன்றும் அழிவின்றிக் காணப்படுவதாகவும் கத்தோலிக்க வரலாறும், மக்கள் வாய்மொழி கதைகளும் தெரிவிக்கின்றன. சங்கிலி மன்னனைச் சந்தித்த நினைவாக திருநெல்வேலியில் சவேரியார் ஆலயம் அமைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இந்தப் புனிதர் 1552 ஆம் ஆண்டு சான்சியன் தீவிலிருந்து கப்பலில் பயணம் செய்யும்போது மார்கழி 3 ஆம் திகதி இறந்தார். இந்தியாவில் கோவா பட்டணத்தில் அடக்கம் செய்யப்பட்ட திருவுடல் இன்றுவரை அங்குள்ள பாம்யேசு கோயிலில் அழியாது காணப்படுகிறது. இவர் வழியாக இறைவன் பல வளங்களையும், நலன்களையும் பொழிந்து வருகிறார். (தொடரும்)

> **புனிதர் 1552 ஆம் ஆண்டு சான்சியன் தீவிலிருந்து கப்பலில் பயணம் செய்யும்போது மார்கழி 3 ஆம் திகதி இறந்தார். இந்தியாவில் கோவா பட்டணத்தில் அடக்கம் செய்யப்பட்ட திருவுடல் இன்றுவரை அங்குள்ள பாம் யேசு கோயி லில் அழியாது காணப்படுகிறது. இவர் வழியாக இறைவன் பல வளங்களையும், நலன்களையும் பொழிந்து வருகிறார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவில் வெளிச்சம் இன்றி சைக்கிள் செலுத்தத் தடை

## களுவாஞ்சிக்குடி பொலிஸ் நடவடிக்கை

**இரவு வேளையில் வெளிச்சம் ஏதுமின்றிச் செலுத்தப்படுகின்ற சைக்கிள்கள் காரணமாகவே களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் அண்மைக்காலமாக அதிக விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன என்று கூறப்பட்டது.**

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் இரவு வேளையில் வெளிச்சம் ஏதுமின்றிச் செலுத்தப்படும் சைக்கிள்களை சுற்றி வளைக்கும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இடம்பெறும் வீதி விபத்துக்களை தவிர்க்கும் வகையில் பொலிஸார் விசேட செயற்றிட்ட மொன்றை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின்போது சுமார் 100 சைக்கிள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதோடு நேற்றுக் காலை முதல் சைக்கிள் உரிமையாளர்களால் டைனமோக்கள் பொருத்தப்பட்ட பின்னர் அவற்றை படிப்படியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இரவுவேளையில்வெளிச்சமின்றிச் செலுத்தப்படுகின்ற சைக்கிள்கள் கார ணமாகவே களுவாஞ்சிக் குடி பிரதேசத்தில் அண்மைக்காலமாக அதிக விபத்துக்கள் இடம் பெற்றிருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு கைப்பற்றப்பட்ட சைக்கிள் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படமாட்டாது, எனினும் தொடர்ந்து வெளிச்சமின்றி இரவு வேளையில் சைக்கிள்கள் செலுத்தப்பட்டால் அவற்றின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (வ)

## கண்டி நகரின் நவீன சந்தையில் கொள்ளை

கண்டியில் உள்ள நவீன சந்தை ஒன்றினுள் நுழைந்த இருவர், அங்கிருந்தவர்களை அச்சுறுத்தி பணத்தைத் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கண்டி, வில்லியம் கொபல்லாவ மாவத்தையில் உள்ள நவீன சந்தையிலேயே கடந்த சனிக்கிழமை இரவு 8 மணியளவில் மேற்படி கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றதாக கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

தலைக்கவசம் அணிந்தவாறு மோட்டார் சைக்கிளில் வந்த இவர்கள் இருவரும் குறித்த நவீன சந்தைக்குள் புகுந்து அங்கிருந்தவர்களை கைத்துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தி பணத்தை கொள்ளையடித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

அவர்கள் சுமார் 238,890 ரூபா பணத்தை அபகரித்துச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி கொள்ளைச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

(வ)

## வறிய மாணவர்கள் 300 பேருக்கு பாதணிகள்




மட்டக்களப்பு, டிசெ.11

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பிரதேசத்தில் வறுமைக்கோட்டுக்கு கீழுள்ள குடும்பங்களைச் சேர்ந்த 300 மாணவர்களுக்கு பாதணிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன.

முபீன் பௌண்டேஷன் நிறுவனத்தால் ஏறாவூர் அஸ்கர் வித்தியாலயத்தில் இம்மாணவர்களுக்கான பாதணிகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் யு.எல்.எம். என்.முபீன், மட்டக்களப்பு மாநகரசபையின் உறுப்பினர் என்.கே. றம்ழான், மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் யு.எல். எம்.செயினு தீன், சமுர்த்தி முகாமையாளர் ஏ.எல்.சுல்மி உட்பட பலர் கலந்துகொண்டனர். (வ)

## யுலிபீல்ட் தோட்டத்துக்கு தகரப்பந்தல் கையளிப்பு




கொட்டகலை, யுலிபீல்ட் தோட்டத்துக்கான தகரப்பந்தலொன்றை கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பி.திகாம்பரத்தின் ஆலோசனைக்கேற்ப மத்திய மாகாணசபை உறுப்பினர் சி. பொன்னையாவின் நிதியொதுக்கீட்டில் மேற்படி தகரப்பந்தல் கையளிக்கப்பட்டது.

இந்தநிகழ்வில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொதுச்செயலாளர் எஸ்.பிலிப், தேசிய அமைப் பாளர் எஸ்.ஸ்ரீதரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (வ)

## கண்டியில் இனவிரோத சுவரொட்டிகள்

### மக்கள் விசனம்



கண்டி, டிசெ.11

''2025 இல் இலங்கை சாரிஸ் தான் ஆகும். முஸ்லிம் கடைகளில் பணம் கொடுத்து பொருள்களை வாங்குவோமா?'' என்று இன விரோதமான சுவரொட்டிகள் கண்டி நகரத்திலும் அதனை அண்டியுள்ள பகுதி சிலவற்றிலும் ஒட்டப்பட்டுள்ளன. எந்தவித இன மத முரண்பாடுகள் இன்றி சகல இனங்களும் ஒற்றுமையாக வாழ்ந்துவரும் கண்டியில் இவ்வாறான சிங்கள மொழியில் ஒட்டப்பட்டுள்ள இந்தச் சுவரொட்டிகளால் மக்கள் விசனம் கொண்டுள்ளனர். (வ)

## மனித உரிமைகள் தின நிகழ்வு மட்டக்களப்பில்

மட்டக்களப்பு,டிசெ.11

சர்வதேச மனித உரிமைகள் தினம் மட்டக்களப்பில் நேற்று திங்கட்கிழமை அனுட்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு சார்ள்ஸ் மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி நிகழ்வை இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் மட்டக்களப்பு அலுவலகமும் எகெட் கரிட்டாஸ் நிறுவனமும் இணைந்து நடத்தின.

இந்தநிகழ்வில் எகெட் கரிட்டாஸ் நிறுவனத்தின் மட்டக்களப்பு மற்றும் கல்முனை பிராந்திய இயக் குநர் அருட்தந்தை கிறைட் டன் அவுட்ஸ்கோன், இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் மனோகரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

குறித்த தினத்தை யொட்டி மேற்படி நிகழ்வு நடைபெற்ற வளாகத்தில் மனித உரிமை தொடர்பான பதாதைகளும் கட்டப்பட்டிருந்தன. (வ)

## வவுணதீவு மத்தியஸ்தர் சபை தலைவர் கைது

மட்டக்களப்பு வவுண தீவு மத்தியஸ்தர் சபையின் தலைவர் பொலிஸாரினால் கடந்த சனிக்கிழமை காலை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொள்ளையிடப்பட்ட உழவு இயந்திரம் ஒன்றை தனது பாதுகாப்பில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்ட அவர் நீதிவான் முன்னி லையில் முன்னிலைப்படுத் தப்படவுள்ளதாக தெரிவித்த பொலிஸார் அவரிடமிருந்த உழவு இயந்திரமும் கைப்பற்றப்பட்டுள்ளது என்று கூறினார். (வ)

## கல்முனை மாநகரசபையை முதல்நிலைக்கு கொண்டுவர நடவடிக்கை முன்னெடுப்பு

### முதல்வர் மீராசாகிப் கூறுகிறார்

''சவால்கள் மத்தியிலும் நாட்டில் முதன்மை நிலையிலான மாநகர சபையாகக் கல்முனை மாநகர சபையை திகழச் செய்யும் இலக்கை நோக்கிய பயணத்தை நாம் முன்னெடுத்துள்ளோம் என்று கல்முனை மாநகர சபை முதல்வர் கலாநிதி முஹமட் சிராஸ் மீராசாகிப் அறிவித்துள்ளார்.

கல்முனை மாநகர சபையில் 26 முஸ்லிம், தமிழ் இளைஞர்களுக்கு ஒரே தடவையில் வேலை வாய்ப்பு வழங்கப்படுதல் தொடர்பான நியமனக் கடிதங்கள் வழங்கும் விழா அண்மையில் நடைபெற்றது.

இந்த விழாவுக்குத் தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மாநகர சபை வளாக அரங்கில் நடைபெற்ற இந்த விழாவில் காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் செல்லையா இராசையா, சம்மாந்துறை பிரதேச சபைத் தவிசாளர் ஏ. எம்.எம் நௌஸாத் உட்பட முக்கியஸ்தர்கள் பலர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கல்முனை மாநகரசபையை கடந்த காலங்களை விடவும், வித்தியாசமான முறையில், மக்கள் மயப்படுத்தப்பட்ட மாநகர சபையாக மாற்ற வேண்டுமென்ற சிந்தனையுடனேயே நானும், கௌரவ உறுப்பினர்களும் செயற்பட்டு வருகின்றோம். இந்த வகையில் தான் சகல செயற்பாடு களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மாநகர சபையை எமது சபை, புதிதாகக் கையேற்ற காலம் முதல் மக்கள் மயப்படுத்தப் பட்ட மாநகரசபையாக மாற்றும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

இந்த வழிமுறையில் சவால்கள், பிரச்சினைகளுக்கு மத்தியிலும் நாட்டில் முதன்மை நிலையிலான, அபிவிருத்தி கண்ட மக்கள் சேவையில் அர்ப்பணிப்புக் கொண்ட சபையாக கல்முனை மாநகரசபையை மாற்றும் பயணத்தில் நாம் பயணிக்க ஆரம்பித்துள்ளோம்.

இவ்வாறான முன்மாதிரியான பயணத்திற்குச் சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் -என்றார். (வ-30)

## மாற்றுத் திறனாளிகள் சிறப்புக்குக் காரணம் பயிற்சிகளும் ஆசிரியர்களின் தியாகமுமே

### மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர் கருத்து

வியக்கத்தக்க வகையில் திறமையாக மாற்றுத் திறனாளிகள் இயங்குவதற்கு அவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியும் ஆசிரியர்களின் தியாகமுமே காரணமாகிறது' என்று மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர் திருமதி அனுசியா சிவராசா தெரிவித்தார்.

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு கண்டி கல்வி வலயத்திலுள்ள தமிழ்ப் பாடசாலைகளின் மாற்றுத் திறனாளிகளது கலைவிழா நேற்று முன்தினம் பேராதனை இந்துக் கல்லூரியில் இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவில் மாற்றுத் திறனாளிகளுக்கு என்று விசேட தொழிற் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அவர்கள் சாதாரண மனிதர்களை விட பலமடங்கு திறமையாக அந்தப்பணியைச் செய்து முடிக்கின்றனர்.

அவ்வாறான திறமையானவர்களை நாம் இங்கும் கண்டோம். உடல் ஊனமுற்றோர் அல்லது விசேட உதவி தேவைப்படுவோர் எனக் குறிப்பிடப்படும் மாற்றுத் திறனாளிகளின் திறமைகளை எம்மால் காண முடிந்தது.

சாதாரண மாணவர்களுடன் ஒன்றாக இயங்கி ஆடிப்பாடி மதிழ்ந்ததைக் காணமுடிந்தது. இறைவனின் படைப்பில் குறைபாடு உடையோர் என்று ஒரு பிரிவு இல்லை என்று கூறுமளவுக்கு அவர்களது திறமைகளைக் கண்டோம். அதற்குக் காரணம் அவர்களது பயிற்சியேயாகும்.

பயிற்சி வழங்குவது என்பது சாதாரண காரியமல்ல. அதற்காக ஆசிரியர்கள் எடுத்துக் கொண்ட தியாகம் வரவேற்கத்தக்கது.

இவ்வாறான விசேட உதவி தேவைப்படும் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவுவது எமக்குக் கிடைத்த பாக்கியமாகும்- என்றார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நல்லவர்களின் நட்பு கிடைக்கும். வீண் விவாதங்களைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியுண்டு.

**இடபம்:** தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். உறவினர்கள், நண்பர்கள் மதிப்பார்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். உத்தியோகத்தில் தடைப்பட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். வீண் அலைச்சல் நீங்கும்.

**மிதுனம்:** எடுத்த வேலையைத் தடையின்றி முடிப்பீர்கள். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அயலிலுள்ளவர்களின் அன்புத்தொல்லைகள் விலகும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**கடகம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற அதிரடியாகச் செயற்படுவீர்கள். தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு. பிரியமானவர்களைச் சந்தித்து மகிழுவீர்கள். உடன் பிறந்தவர்கள் உறுதுணையாக நடந்து கொள்வார்கள்.

**சிங்கம்:** சிக்கனமாகச் செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். அரச காரியங்களிலிருந்த பின்னடைவு நீங்கும். மன உளைச்சல் நீங்கும். விடாப்பிடியாக செயற்பட்டு பணிகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் நம்பிக்கைக்குரியவர்களின் ஆலோசனையை ஏற்பீர்கள்.

**கன்னி:** முன்கோபம், பதற்றம் விலகும். எடுத்த காரியங்களை முடிக்க முடியாமல் அவதிப்பட்ட நிலை மாறும். தந்தையின் உடல் நிலை சீராகும். சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.

**நாளை**

கார்த்திகை -27 புதன்கிழமை 12.12.2012
திதி: சதுர்த்தசி மா. 05.16 வரை
நட்சத்திரம்: அனுசம் மு.இ 08.39 வரை
சுபநேரம்: 04.50 - 06.20 வரை
ராகுகாலம்: 12.20 - 01.50 வரை

**துலாம்:** உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை தலை தூக்கும். உறவினர், நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். மற்றவர்கள் விடயத்தில் அநாவசியமாகத் தலையிட வேண்டாம். சிலர் உதவுவதை போல் உபத்திரவம் தருவார்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகக் கிடைக்கும்.

**விருச்சிகம்:** வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். யாரிடமும் உணர்ச்சி வசப்பட்டு பேசாதீர்கள். சகோதர வகையில் பிணக்குகள் வரும். வியாபாரத்தில் வேலையாள்களை விட்டுப்பிடிப்பது நல்லது.

**தனுசு:** மனதில் பட்டதை பளிச்சென்று பேசி அனைவரையும் ஆச்சரியப்படுத்துவீர்கள். வியாபாரத்தில் மகிழ்ச்சி தங்கும். பழைய சரக்குகளை புதிய யுக்தியால் விற்றுத்தீர்ப்பீர்கள். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும்.

**மகரம்:** சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.

**கும்பம்:** அடிமனதில் இருந்த பயம் விலகும். துணிச்சலுடன் சில முடிவுகளை எடுப்பீர்கள். அலைச்சல் தந்த வேலைகளை உடனே முடிப்பீர்கள். பணவரவு திருப்தி தரும். உடல் நிலை சீராகும். வெளிவட்டாரம் மகிழ்ச்சி தரும்.

**மீனம்:** பழைய பிரச்சினைகள் தலை தூக்கும். குடும்பத்தாரின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப செயற்படுங்கள். உங்கள் மீது சிலர் வீண் பழி சமத்துவார்கள். வாக்குறுதியை நிறைவேற்றப் போராட வேண்டி வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களைப் பற்றிக் குறை கூறிக்கொண்டிருக்க வேண்டாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | | 2 | | | | 6 | |
| | 9 | 6 | 7 | 5 | | 2 | | 4 |
| 4 | 1 | | | 8 | | 3 | | |
| 5 | 6 | | | | | | | |
| 1 | | | 4 | 6 | 2 | | | 3 |
| | | | | | | | 4 | 8 |
| | | 5 | | 9 | | | 2 | 6 |
| 6 | | 1 | | 7 | 4 | 9 | 8 | |
| | 8 | | | | 5 | | | 1 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 8 | 6 | 5 | 3 | 1 | 7 | 4 | 9 |
| 3 | 4 | 9 | 2 | 6 | 7 | 1 | 5 | 8 |
| 1 | 5 | 7 | 9 | 4 | 8 | 6 | 2 | 3 |
| 8 | 9 | 2 | 3 | 7 | 5 | 4 | 6 | 1 |
| 4 | 7 | 3 | 6 | 1 | 2 | 9 | 8 | 5 |
| 6 | 1 | 5 | 4 | 8 | 9 | 3 | 7 | 2 |
| 7 | 3 | 1 | 8 | 5 | 4 | 2 | 9 | 6 |
| 9 | 6 | 8 | 7 | 2 | 3 | 5 | 1 | 4 |
| 5 | 2 | 4 | 1 | 9 | 6 | 8 | 3 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# 60ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்
30 * 11 * 1946

இறைவன் மடியில்
13 * 10 * 2012

அமரர்

## சந்தியாப்பிள்ளை நீயூமன்

இளவாலையைப் பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலியா, மெல்போனை வாழ்விடமாகவும் கொண்ட அமரர் சந்தியாப்பிள்ளை நீயூமன் அவர்கள் 13.10.2012 அன்று ஆஸ்திரேலியாவில் காலமானார் என்பதை கண்ணீருடன் அறியத் தருவதோடு, அவரின் ஆத்ம சாந்திக்கான திருப்பலி இன்று (11.12.2012) செவ்வாய்க்கிழமை பி.ப 4.00 மணிக்கு இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் என்பதனையும் அறியத் தருகிறோம்.

தகவல்:
அருட்திரு மரிய செபஸ்ரியன் அமதி (சகோதரன்),
அருட்சகோதரி மேரி சோபியா தி.கு (மைத்துனி).

(24356) (5.6.7)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணுலகில் வந்தது
25.06.1929

விண்ணுலகை அடைந்தது
11.11.2012

## அமரர் துரைசிங்கம் இலட்சுமி

வாழ்க்கை எனும் முட்கள் நிறைந்த பாதையில்-
அம்மா நீ எமக்காக வாழ்ந்தாய்!
எத்தனை இரவுகள் எமக்காக அழுதாய்!
ஏன் எங்களை ஏமாற்றி தனி மரமாக -நீ
மட்டும் சென்றாய்? எத்தனை வித்தைகள்
காட்டி சிரிக்க வைத்தாய்
உன் பூமுகத்தை மறக்க முடியவில்லை- அம்மா
உன்னைக் கடைசி வரை பார்க்க முடியாத
பாவியானேன் அம்மா!
மறு ஜென்மத்தில் நீ எனக்கு மகளாக
மீண்டும் வருவாயாக அம்மா!

கடந்த 11.11.2012 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் துரைசிங்கம் இலட்சுமி அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசியிலும் ஆறுதல் கூறி எமது துயரில் பங்கு கொண்ட உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (11.12.2012) செவ்வாய்க்கிழமை மு.ப.11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கருணை இல்லம்
கரணவாய் மேற்கு.
கரவெட்டி.

மகன்- ரூபன்(அப்பன்-ஜேர்மனி)
பேரன்மார்:
ஜித், சுரேன்(அப்புச்சி) மற்றும் குடும்பத்தினர்.

(25665)(5.6.7)

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
17★09★1927

இறப்பு
02★12★2002

கொக்குவில் கிழக்கு

## அமரர் இராசையா செல்லையா

(சின்னத்துரை)
(இளைப்பாறிய வருமானவரி உத்தியோகத்தர்)

திதி: 11.12.2012

எங்கள் அன்பு அப்பாவே!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
பத்து ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும்
எங்களை விட்டு அகலாது.
உயிரோடும் உணர்வோடும் கலந்துவிட்ட
உங்கள் நினைவலைகள்
என்றென்றும் எம்முடன் நிலைத்திருக்கும்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(26545) (5.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் ஆயரின் கருத்து மிகவும் கவலை அளிக்கிறது

## அரசு தெரிவிப்பு

ஆஸ்திரேலியாவுக்குப் படகுமூலம் புகலிடம் தேடிச் செல்லும் இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை வெளியிட்ட கருத்து தொடர்பில் அரசு கவலை வெளியிட்டுள்ளது.

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழ்ப் புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்தும் நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறு மன்னார் ஆயர், ஆஸ்திரேலிய அரசிடம் கோரியிருந்தார்.

நாடு திரும்பும் புகலிடக் கோரிக்கையாளர்கள் படையினரால் துன்புறுத்தப்படலாம் என அவர் தெரிவித்திருந்தார்.

அரசியல் புகலிடம் கோரி வெளிநாடு சென்று, நாடு கடத்தப்படுவோர் நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றமை வழமையானதே எனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதேவேளை, மதகுருவொருவர் இவ்வாறான கருத்தை வெளியிட்டமை, தமக்கு வருத்தமளிக்கிறது என ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவிலிருந்து நாடு கடத்தப்படும் புகலிடக் கோரிக்கையாளர்கள் அரசியல் புகலிடம் கோருவோர் அல்ல எனவும், அவர்கள் அனைவரும் பொருளாதார நோக்கங்களுக்காக புகலிடம் கோரியோர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

படகுப் பயணிகள் தொடர்பில் ஆஸ்திரேலியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் மிகச் சிறந்த புரிந்துணர்வு காணப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(த)



நேற்று முன்தினம் சபாநாயகர் வழங்கிய தேநீர் விருந்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# நிறைவேற்றுத்துறையின் ஆதிக்கத்துக்கு எதிராக கிளர்ந்தெழுகிறது நீதித்துறை

## நாளை பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவும் முடிவு

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான ஐந்து குற்றச்சாட்டுக்களுள் மூன்று நிரூபிக்கப்பட்டுள்ளன என அரசு அறிவித்துள்ள நிலையில், நீதியரசர் விடயத்தில் அரசின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை புதன்கிழமை பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்று சபைக் கூட்டம் நேற்று முன்தினம் கொழும்பில் அவசரமாகக் கூடியது. அதன்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குற்றப் பிரேரணையை விசாரணை செய்த தெரிவுக்குழு தொடர்பில் தமக்கு நம்பிக்கை இல்லை எனக் கூறி, பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டார நாயக்க கடந்த வியாழக் கிழமை இடம்பெற்ற தெரிவுக்குழு விசாரணைகளின்போது திடீரென வெளிநடப்பு செய்தார்.

அதன் பின்னர் அடுத்த நாள் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தெரிவுக்குழு அமர்வின்போது, அக்குழுவில் அங்கம் வகித்த எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளும் தெரிவுக்குழுவிலிருந்து வாபஸ் பெற்றனர்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவுக்குழுவிலிருந்து வாபஸ் பெற்றதன் பின்னர், அரசதரப்பு தெரிவுக்குழு பிரதிநிதிகள் குற்றவியல் பிரேரணையை விசாரணை செய்து அதன் இறுதி அறிக்கையை, தெரிவுக்குழு தலைவர் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா, சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் கையளித்தார்.

அதுமட்டுமல்லாது, பிரதம நீதியரசருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள 14 குற்றச்சாட்டுக்களுள் 5 குற்றச் சாட்டுகள் விசாரிக்கப்பட்டு அவற்றுள் 3 நிரூபிக்கப்பட்டுள்ளன என்றும் அரசு அறிவித்தது.

தெரிவுக்குழுவின் மேற்படி தீர்ப்பின் பின்னர், நீதித்துறை மீது நிறைவேற்று அதிகாரத்தின் ஆதிக்கம் செலுத்தப்பட்டுள்ள நிலைமை தொடர்பில் ஆழமாக ஆராய்ந்து அடுத்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் நேற்று முன்தினம் அவசர கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டம் நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு நடத்தப்பட்டுள்ளது.

அரசின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், நாளை மறுதினம் புதன்கிழமை, நாடளாவிய ரீதியில் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை, குறித்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு, தீர்ப்பு வழங்கும் அதிகாரம் உள்ளதா என்பது தொடர்பில் எதிர்வரும் 13ஆம் 14ஆம் திகதிகளில் உயர் நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(த-சி)

## அரச ஊழியர்களின் வைத்திய அறிக்கை பெற நடவடிக்கை

கொழும்பு,டிசெ 11

அரச சேவைகளிலுள்ள அனைவரினதும் சுகாதாரம் தொடர்பிலான வைத்திய அறிக்கையை பெற்றுக் கொள்ளும் வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதன்படி அனைத்து அரச ஊழியர்களுக்கும், தங்களின் சுகாதார நிலை தொடர்பில் சரியான ஆலோசனையைப் பெற்றுக் கொடுக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய சுகாதார வாரம் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து, கல்வி அமைச்சின் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள சுகாதார மத்திய நிலையத்தை திறந்து வைப்பதற்காக நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்சியில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த மத்திய நிலையம் வார நாள்களில் காலை 8.30 முதல் பிற்பகல் 2.00 மணி வரை திறக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது விசேட வைத்தியர்களின் சேவையையும் அரச சேவையாளர்களுக்கு பெற்றுக்கொள்ளச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இங்கு ஒசுசல ஒன்றையும் திறந்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(த)

## 18ஆம் திகதி ஆழிப்பேரலை முன்னெச்சரிக்கை ஒத்திகை

கொழும்பு,டிசெ 11

எதிர்வரும் 18ஆம் திகதி சுனாமி முன்னெச்சரிக்கை ஒத்திகை நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதற்கு அனர்த்த முகாமைத்துவ நிலையம் தீர்மானித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

நாட்டின் 14 கரையோரப் பிரதேசங்களைத் தெரிவு செய்து இந்த ஒத்திகை நடவடிக்கை இடம்பெறவுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதி பணிப்பாளர் பிரதீப் கொடிபிலி தெரிவித்தார். சுனாமி அனர்த்தம் ஒன்று ஏற்படுமாயின் அதன் போது செயற்படும் விதம் குறித்து இதன்போது விளக்கமளிக்கப்படவுள்ளது.

இதற்கு முன்னதாகவும் சுனாமி ஒத்திகை நடவடிக்கைகள் நாட்டின் பல பாகங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (த)

## நீதியரசருக்கு எதிரான பிரேரணை தொடர்பில் பொதுநலவாய அமைப்பு விசாரிக்கவேண்டும்

### ஐ.தே.க. அவசர கோரிக்கை

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணை தொடர்பில் பொதுநலவாய நாடுகள் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், இந்த அரசு பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகள் கோட்பாடுகளிலிருந்து முற்றாக விலகிச் செல்கின்றமை அம்பலமாகியுள்ளது என ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் கமலேஷ் சர்மாவிடம், மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ளும் நோக்கில் அரசு, நீதித்துறையை கட்டுப்படுத்த முயற்சிக்கிறது.

பழிவாங்கும் நோக்கத்துடனேயே பிரதம நீதியரசருக்கு எதிராக அரசு குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(த-சி)

# பிரச்சினைகளைத் தீர்க்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்குக

## ஐ.நா. பிரதிநிதிகள் குழுவிடம் பெண்கள் அமைப்புகள் எடுத்துரைப்பு

கொழும்பு, டிசெ. 12

வடக்கு, கிழக்கு பெண்களின் பிரச்சினைகள் குறித்து அரசிடம் தாம் முன்வைத்த கோரிக்கைகளுக்கு, எந்த விதமான மறுமொழிகளும் கிடைக்காதுள்ளதால், இது விடயம் குறித்து ஐ.நா, அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று ஐ.நாவுக்கான பிரதிநிதிகள் குழுவிடம் பெண்கள் அமைப்புகள் நேற்றுமுன்தினம் எடுத்துரைத்துள்ளன.

இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற வடக்கு, கிழக் குப் பிரதேசத்தில் உள்ள பெண்களின் நிலைமைகள் மற்றும் அவர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்தும், அந்தப் பிரதி நிதிகள் குழுவிடம் பெண்கள் அமைப்புகள் எடுத்துரைத்துள்ளன.

பல நாடுகளையும் சேர்ந்த ஐ.நா. வதிவிடப் பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கையின் ஐ.நாவுக்கான பிரதிநிதி பாலித கொஹன தலைமையில் நேற்றுமுன்தினம் வட பகுதிக்குச் சென்றிருந்தது.

யாழ்ப்பாணம் சென்ற இக்குழுவினர், அங்குள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து அங்குள்ள நிலைமைகளைக் கேட்டறிந்த பின்னர், கிளிநொச்சியிலுள்ள பெண்கள் அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான சங்கத்தின் தலைவி விசாகா தர்மதாசா தலைமையில் நடைபெற்ற மேற்படி சந்திப்பின்போதே பெண்களின் பிரச்சினைகள் குறித்து அவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றது.

பெண்களின் பாதுகாப்பு, அபிவிருத்தி, பெண்களின் விவகாரங்கள், பெண்களின் பிரதிநிதித்துவம், உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இங்கு பேசப்பட்டிருக்கின் றது.

வடக்கு-கிழக்கில் உள்ள மக்களின் தனித்துவத்தைப் பாதுகாக்கும் வகையிலான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும், இதன்போது வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் வடகிழக்குப் பிரதேசப் பெண்கள் சார்பில் இந்தச் சங்கத்தினரால் பல கோரிக்கைகள் அரசிடம் முன்வைக்கப்பட்டுள்ளன.

அவற்றுக்கு அரசின் முழுமையான கவனம் கிடைக்காத நிலையிலேயே ஐ.நா பிரதிநிதிகளிடம் இந்தப் பிரச்சினைகள் எடுத் துரைக்கப்பட்டிருக்கின்றன.

ஐ.நாவின் பெண்கள் உரிமை தொடர்பிலான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் வகையில் இலங்கைப் பெண்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஐ.நா, அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலும் மற்றும் வேலைத்திட்டங் களுக்கான உதவி ஒத்துழைப்பை வழங்கி உதவ வேண்டும் என இந்தச் சந்திப்பின்போது கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுஜீவா வைத்தியசாலை திருத்தம்

நேற்றைய விளம்பரத்தில் எமது வைத்தியசாலைக்கு சுதேச வைத்திய அமைச்சர், பிரதியமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர், ஆயுள் வேத அமைச்சின் செயலாளர், ஆயுள் வேத ஆணையாளர், கொழும்பு தேசிய ஆயுள் வேத வைத்தியசாலை பணிப்பாளர் ஆகியோர் 14.10.2012 அன்று விஜயம் செய்து குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கினர் என்று உள்ளது. அதை 14.10.2011 (கடந்த வருடம்) என்று திருத்தி வாசிக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்

Dr. கெ.ஜெயலன் Dr. ச.ஜெயலன் Dr. க.இராஜரட்ணம்

077 5594147, 021 5685333

(26658) (6.7.4)

## அங்கத்துவத்தையும் வருமதி, சென்மதிகளையும், பணிக்கு சமுகம் தருதலையும் உறுதிப்படுத்தல்

மேற்படி புதுக்குடியிருப்பு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் தற்போது தனது சொந்த இடத்தில் தனது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளமையால் 2009 ஆம் ஆண்டுக்கு முன் அங்கத்தவர்களாக இணைந்து இடப் பெயர்வு வரை தொழில் புரிந்த அங்கத்தவர்கள், பணி செய்த பணியாளர்கள், மந்துவில், புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள சங்க அலுவலகத்திற்கு அலுவலக நாள்களில் வருகை தந்து எதிர் வரும் 26.12.2012 ஆம் திகதிக்கு முன் கீழ் குறிப்பிடும் விடயங்களுக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

- வருமதி, சென்மதிகளை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் அல்லது அது தொடர்பான விண்ணப்பம்.
- மீள் குடியமர்வின் பின் தொழில் புரிய விரும்பும் அங்கத்தவர்கள் தங்களது அங்கத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கான விண்ணப்பம்.
- இது வரை பணிக்கு சமுகம் தராதவர்கள் பணிக்கு சமுகம் தருவதற்கான விண்ணப்பம்.

தலைவர்,
ப.தெ.வ.அ.கூ.சங்கம்.
புதுக்குடியிருப்பு.

(26659)

## எயிட்ஸ் தின நிகழ்வு

தென்மராட்சி,டிசெ 11

சர்வதேச எயிட்ஸ் தின நிகழ்வு நாளை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெறும். சுகாதார வைத்திய அதிகாரி க.தயாளன் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் கலந்துகொள்வார். (ம-9)

## முக்கிய அறிவித்தல்

ஒட்டுசுட்டான் கமநலச் சேவை நிலையத்திற்குட்பட்ட கமக்கார அமைப்பினரால் 30.11.2012 இல் பிடிக்கப்பட்ட ↑ M.K வெள்ளைப்பசு N.K + கறுப்பு நாம்பன் என்னும் குறி அடையாளமுள்ள இரு கட்டாக் காலி கால் நடைகளுக்கு இது வரை எவரும் உரிமை கோரப்படாததால் அறிவித்தல் கிடைத்ததிலிருந்து 48 மணி நேரத்திற்குள் உரிமை கோரத்தவறின் 13.12.2012 அன்று கமநலச் சட்டத்திற்கமைவாக பகிரங்க ஏலத்தில் விடப்படும் என அறியத்தருகிறேன். ஒட்டுசுட்டான் கமநலச் சேவை நிலையத்தில் 13.12.2012 அன்று மு.ப 10 மணிக்கு ஏலவிற்பனை நடைபெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரும்பாக உத்தியோகத்தர்,
க.ந.சே.நிலையம்,
ஒட்டுசுட்டான்.

(C/2125)

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தின் ஆளணி உதவியாளராகவும் பிரதேச செயலக நலன்புரிசங்க நிர்வாக உறுப்பினருமான **க.மாணிக்கதாஸன்** அவர்களின் அன்புத் தந்தை

**கந்தையா கணேஷ்** அவர்களின்

மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரதேச செயலர்,
அனைத்து உத்தியோகத்தர்களும்.
நலன்புரிசங்கம், பிரதேச செயலகம்,
வேலணை.

(26623) (6.7.2)

## 12 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
1974 * 02 * 02

மறைவு
2000 * 11 * 23

**மகேந்திரம் கேதீஸ்வரன் (குஞ்சன்)**

திதி:-11.12.2012 நினைவு கொள்கின்றோம்!

உழவனூர், தருமபுரம். மனைவி, பிள்ளைகள்.

## ஏழாண்டு நினைவு உதய தீபம்



உதயம்
02.04.1941

மறைவு
29.11.2005

**அமரர் வினாசித்தம்பி உதயச்சந்திரன் (திரயோதசி)**

அன்பிற்கும் பண்பிற்கும் அணி சேர்த்த
எங்கள் அருமை அப்பாவே
பாரினிலே பண்புடனே வாழ்ந்து
பாசமாய் நேசத்துடன் எமை வழி நடத்தி
எம்மோடிருந்த பாசமுகம் பாராமல்
ஏக்கத்துடன் தவிக்கிறோமப்பா
ஏழாண்டு சென்றாலும் எம் மனதில் அன்பாக இருப்பீரப்பா
ஓம் சாந்தி!

74, பத்திரகாளி கோயிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

(26586)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## சிவராசா சியாமளா



மலர்வு
08.10.1979

உதிர்வு
14.12.2009



எங்கள் அன்புச் சியாவே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து மூன்றாண்டு காலம்
ஆகியும் எங்கள் மனம் ஒரு போதும் உம் பிரிவை ஏற்க
மறுக்குதம்மா எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்டாயம்மா
எம் அன்புச் செல்வமே
பூவோடும் பொட்டோடும்
வாழ ஆசைப்பட்ட உன்னை ஆண்டவன்
அவசரமாக அழைத்தது ஏனம்மா நாங்கள்
காலமெல்லாம் கண்ணீரோடு
கலங்கி நிற்பதை பார்ப்பதற்காகவா
ஆறாது ஆறாது எம்மனம், எம்முடல்
நீறாகிப் போகும்வரை ஆறாது

**- தந்தை, தாய், சகோதரம், மைத்துனர், பெறாமக்கள்.**

அக்கா சியாவே!
என்னை வாழவைக்க இறைவனிடம் தவம் இருந்தாய்,
நான் வாழும் போது பார்ப்பதற்கு நீயில்லையே
நான் மணமகனாய் வரும்போது
ஆசீர்வதிப்பாய் என்றிருந்தேன் என்னை கண்ணீர்
சிந்த வைத்து மறைந்தாயோ
நான் கவலைப்படும்போது அணைத்து ஆறுதல் சொன்னாய்,
இன்று உன் பிரிவால் அழுகின்றேன்
ஆறுதல் சொல்ல வாராயோ!

என்றும் உம் பிரிவால் வாடும்:
**உன் அருமைத் தம்பி S.ரகு**

நிரந்தர முகவரி:- தம்பியோடை,
வதிரி, கரவெட்டி.
தற்காலிக முகவரி:- இல.35
மகாத்மா வீதி, நெல்லியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும்மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# பிரதேச அபிவிருத்திக்குப் பங்காற்றும் முகாமையாளர் கருத்தரங்கு மன்றம்

## நாளைய நூறாவது அமர்வில் 'விஞ்ஞானமும் அபிவிருத்தியும்'

சமூகமட்டத்தில் பல துறைகளிலும் அறிவை விருத்தி செய்து சகல தரப்பு மக்களிடையேயும் தெளிவானதும் அறிவு பூர்வமானதுமான புரிந்துணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தோடு 2004ஆம் ஆண்டளவில் யூரோவில் நிறுவனத்தினரும் புத்தி ஜீவிகளும் இணைந்து முறைசாராக் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

இதன் பலனாக காலக்கிரமத்தில் துறைசார் நிபுணர்களையும் தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளக் கூடியவர்களையும் அழைத்து கருத்தரங்குகளை ஒழுங்காக நடத்துவதென முடிவெடுக்கப்பட்டது.

அதற்கமைய ஒவ்வொரு பௌர்ணமி விடுமுறை தினத்திலும் யூரோவில் மாநாட்டு நிறுவன மண்டபத்தில் கருத்தரங்கை நடத்துவதென முடிவானது. முதலில் இலங்கை வங்கி இந்தப் பொறுப்பை ஏற்க முன்வந்தது.

முதலாவது கருத்தரங்கு 24.03.2007 இல் நிதியும் முதலீடுகளும் என்ற தலைப்பில் நடத்தப்பட்டது. இதன் வளவாளராக இலங்கை வங்கியைச் சேர்ந்த என்.சிவரட்ணம் கலந்து கொண்டு சிறப்பித்தார். அன்றிலிருந்து 04.11.2012 வரையில் 99 கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. 99 ஆவது கருத்தரங்கில் 'கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் தேசிய நல்லிணக்கமும் உடன்பாடான சிந்தனைகளும்' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது.

இந்த வகையில் நாளை, புதன்கிழமை 100 ஆவது கருத்தரங்கு 'விஞ்ஞானமும் அபிவிருத்தியும்' என்ற தலைப்பில் நடைபெறவுள்ளது.

எனவே ஆர்வலர்கள் எதிர்காலத்தில் இவ்வமைப்பினால் ஒழுங்கு செய்யப்படும் கருத்தரங்குகளில் பங்கு கொண்டு தங்கள் பங்களிப்பினை ஆக்கபூர்வமாக பயன்படுத்தி சமூகத்திற்கும், மக்களுக்கும் நன்மைகளை ஏற்படுத்த முன்வரவேண்டும்.

நாளை நடைபெறவுள்ள 100 ஆவது கருத்தரங்கை முன்னிட்டு முக்கிய கலந்துரையாடல்களின் தொகுப்புக்கள் உள்ளடக்கிய ஒரு நினைவுச்சஞ்சிகையையும் வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது என ஒருங்கிணைப்பாளர் என்.சிவரட்ணம் தெரிவித்துள்ளார். (3)

# ஆலய சூழலில் கழிவுகள் கவலையில் பக்தர்கள்



யாழ்ப்பாணம்,டிசெ.11

நல்லூர் வெயிலுகந்தப் பிள்ளையார் ஆலயச் சுற்றாடல் தற்போது கழிவுகள் நிரம்பி வழியும் இடமாக மாறிவருவதாக பக்தர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேற்படி ஆலயத்தின் சுற்றாடலில் அண்மைக்காலமாக ஒன்றுகூடும் இளைஞர்கள், மதுவை அருந்திவிட்டு ஆலயத்தின் பின்பக்கமாக மதுப் போத்தல்களை உடைத்தெறிவதாகவும் அத்துடன் பியர் ரின்களையும் காட்சிக்கு வைக்கப்பட்டது போல அங்கே பரப்பி விடுவதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, ஆலயச் சுற்றாடலில் வசிக்கும் மக்களும் தம் வீட்டுக் கழிவுகளை ஆலயத்தின் பின்பக்கமாகவே கொண்டு வந்து போடுவதையும் அவதானிக்க முடிகின்றது.

இதனால் ஆலயச் சுற்றாடல் துர்நாற்றம் வீசுவதுடன் கோயிலுக்கு வருவோரும் பல அசௌகரியங்களை அனுபவிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் முன்னைய காலங்களில் இப்படியான கழிவுகளை யாழ்.மாநகர சபை உடனுக்குடன் அகற்றி வந்ததாகவும், தற்போது இந்தக் கழிவுகளை அகற்றுவதில் அவர்களும் அக்கறை காட்டுவதில்லை எனவும் மக்கள் குறை கூறுகின்றனர்.

எனவே, இந்தவிடயத்தில் சம்பந்தப்பட்டோர் உடனடியாகக் கவனமெடுத்து ஆலயச் சுற்றாடலைத் தூய்மையாக வைத்திருப்பதுடன், வழி பாட்டுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் இந்தக் கழிவுகளை அகற்ற வேண்டும் எனவும் பக்தர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (3-288)

# செயலமர்வு

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க கிளைக் குழு உறுப்பினர்களுக்கான செயலமர்வு அண்மையில் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் சி.பூபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற செயலமர்வில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசக் கல்வி உத்தியோகத்தர் எஸ். சிவகுமார், பிரதேச கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர். (3-9)

# சுகாதார வாரத்தில் இரத்ததானம்

அளவெட்டி, டிசெ.11

தேசிய சுகாதாரவாரம் 10 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை ஒருவார காலம் நாடுமுழுவதும் அனுஷ்டிக்க ஏற்பாடாகி உள்ளது. இந்தநிகழ்வின் 7 ஆம் நாள்நிகழ்வு 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரத்ததானம் செய்யும் நிகழ்வாக அனுஷ்டிக்கப்படும். இந்தநாளில் யாழ். போதனா வைத்தியசாலை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை ஆகியவற்றில் காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை இரத்ததான நிகழ்வு இடம்பெறும். விரும்பியவர்கள் இந்த நிகழ்வில் கலந்து இரத்ததானம் செய்யலாம் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (3-36)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை மடியில்
08.02.1930

ஆண்டவன் அடியில்
11.11.2012

### அமரர் Dr. செல்லமுத்து பீதாம்பரம்

கடந்த 11.11.2012 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் செல்லமுத்து பீதாம்பரம் அவர்களின் 31 ஆம் நாள் நினைவு தினம் இன்று (11.12.2012) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற உள்ளதால் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், உள்நாடு, வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி, மின்னஞ்சல் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்கள் அனைவருக்கும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். (25544)

பெரிய வளவு,புலோலி வடக்கு,
பருத்தித்துறை.
T.P : 021 226 4334, 0715353797

குடும்பத்தினர்.

## வீடு விற்பனைக்கு

சாவற் கட்டுப் பகுதியில்
6 ¾ பரப்பில் உள்ள வீடும்
காணியும் விற்பனைக்குண்டு.
தொ ர்பு: 0774969919
(28660) (6.7.4)

## காணி விற்பனைக்கு

நீர் வேலி இராச வீதியில் அமைந்துள்ள வைரவகோயிலுக்கு அருகில் (றோட்டுக்கு கிழக்காக ) இரண்டாவதாக உள்ள 10 ½பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு.
தொ ர்பு: 0772562513, 0755783800
(28656)(6.7.4)

## விற்பனைக்கு

அயன் கேற் 13' 8¼' , 12' 8¼' அகலம்,
உயரம் கொண்ட 2 கேற்றுகள் உண்டு.
மேலும் பல அளவுகளில் கேற்றுகள்,
மரக்கதவுகள், நிலைகள் எம்மிடம் உண்டு.
தொ ர்பு:0712362490
(28658) (4.8.7)

## Maths Personal and Group Classes

Grade - 8, 9, 10, 11
Kokuvil,Kondavil,Chavakachcheri.
by: K.Kiri
077 064 1094
(வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்)

## வீடு வாடகைக்கு

கோயில் வீதி, அரசசார் பற்ற நிறுவன வெளிநாட்டு உயரதிகாரிகள் வசித்த இணைந்த குளியலறையுடன் 3 அறைகள், மண்டபம், குசினி, சாப்பாட்டறை,வேலையாள் குளியலறை, பெரிய காணி, அரசசார்பற்ற நிறுவனங்கள் விரும்பப்படும்.
தொ ர்பு: 077 5487009
(26418) (6.7.4)

## 31 ஆம் நாள் நினைவு



தோற்றம்
16.08.1939

மறைவு
11.11.2012

### அமரர் சின்னத்துரை அருமைப்பிள்ளை

கடந்த 11.11.2012 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியம் இன்று (11.12.2012) செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், தொலைபேசி, துண்டுப்பிரசுரம் மூலம் அனுதாபத்தை தெரிவித்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல. 09, கொண்டலடி லேன்,
பண்டாரக்குளம் வீதி,நல்லூர்.
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## Sam Sung Company Vacancies (male)

IN Malasiya
மேற்படி கம்பனியில் ஆண்களுக்கான
உடனடி வேலை வாய்ப்பு
★ உணவு, தங்குமிடம் இலவசம்
★ கவர்ச்சிகரமான சம்பளம்
(Note: 30 பேருக்கான வெற்றிடம் உள்ளது)
தொ ர்பு :
077 945 9569
(26587)


# சுந்தர்சன் நிறுவனத்தின்

# மாபெரும் மலிவு விற்பனை

அனைத்துப் பொருட்களும் உத்தரவாதத்துடன்



Double/Single Door Fridge
Washing Machine
LCD, LED, CRT TVs
Water Filter
Electric Kettle
Toasters
Rice Cooker with Steamer
Iron Box

Table Fan
Pedestal Fan
Rechargeable Torch
Blenders
Electric Oven
Gas Cooker
Induction Cooker
Non Stick Pans

Home Theater System
Bulbs
Chandeliers
Wall Lamps
Table Lamps
Egg Beaters
Switches

Mobile Phones
Wusley, Pearl Rich CFL Bulbs
DVD Players
Plastic Buckets & Basins

இத்தினத்தில் கொள்வனவு செய்யும் அதிஷ்டசாலி வாடிக்கையாளர்கள் 50 பேருக்கு ரூபா. 175,000 பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்

15.12.2012 முதல் 22.12.2012 வரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி





தோற்றம்
04.02.1927

மறைவு
11.11.2012

# அமரர் கனகன் வள்ளி

அன்னையென வந்தெம்மை ஆளாக்கி, பற்றாக எமக்கூட்டி பலகாலமிருந்து
பரிகாரம் பண்புடனே சொல்லிவைத்து, பேரர் உற்றாரோடு இசைந்திருந்து
இன்சுவைப் பாடல் தந்து – உண்ணாது
உருமாறி உலகைவிட்டு சென்றனையோ!
இவ்வுலகில் நாமுள்ளவரை உள்ளார்ந்த
தெய்வமதாய்த் தொழுதிறைஞ்சுவமே!!!.

கடந்த 11.11.2012 அன்று சிவபதமடைந்த எமது அன்னையின் பிரிவுத்துயரில் பங்கு கொண்டவர்க்கும், உதவி புரிந்தோர்க்கும், அனுதாபம் கொண்டோர்க்கும், இரங்கல் செய்தி தந்தோர்க்கும் இனிது நன்றி பகர்வதுடன், இன்று [11.12.2012] செவ்வாய்க்கிழமை அன்னா ரின் இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## என்றும் உம் நினைவுகளோடு:

சகோதரி: **கதிரி**

பிள்ளைகள்: **தில்லைநாதன், மலர்மணி, சின்னம்மா, சரவணமுத்து, செல்லப்பா, சின்னராசா**(டென்மார்க்), **செல்வராசா**(சுவிஸ்), **பொன்னம்மா**(லண்டன்).

மருமக்கள்: **கனகமணி, பவளம்மா, கனகசிங்கம்** (நோர்வே), **மகாலிங்கம், சறோஜினிதேவி, அற்புதமலர், மகேஸ்வரி**(டென்மார்க்), **றெஜீனா**(சுவிஸ்), **இராசேந்திரன்**(லண்டன்).

பேரப்பிள்ளைகள்: **றோகினி**(சுவிஸ்), **சுகந்தினி** (சுவிஸ்), **அஸ்வினி, சுகிர்தன்** (சுவிஸ்), **கீர்த்திகன்**(சுவிஸ்), **உமாசங்கர்** (சுவிஸ்), **உமாகௌரி** (ஆதாரவைத்தியசாலை–சாவகச்சேரி), **உமாநிதி,**(அபிவிருத்தி உத்தியோகத்தர்–யாழ்.தபாலகம்), **உமாதர்சினி** (லண்டன்), **உமாகாயத்திரி, உமாதாரணி**(டென்மார்க்), **சிவாஜினி**(விதுஷா களஞ்சிய உரிமையாளர்), **முல்லைமாறன்**(கிராமஅலுவலர், சமாதானநீதிவான், கவின்கோல்ட் உரிமையாளர்), **சுதாஜினி**(ஆசிரியர்), **கனகவிஜயன்**(நோர்வே), **நந்தினி**(சுவிஸ்), **குமுதினி, வினோதன்**(சுவிஸ்), **வினோதினி** (ஜேர்மனி), **நிமலநாதன், நிர்மலாதேவி, நித்தியா, நிமலகாந்தன்**(இத்தாலி), **உதயராஜ்** (லண்டன்), **அருள்ராஜ்** (லண்டன்), **ஜீவிதா, ஜீவிதராஜ், ஐக்சிதா, அனோஜா, சிந்துஜா**(டென்மார்க்), **டனிதாஸ்**(டென்மார்க்), **கவிசன்**(டென்மார்க்), **பிரகா**[illegible](சுவிஸ்), [illegible]**லோச்சனா, சுபிதா, சோபனா, சூரியா** (லண்டன்).

(26608)(2.6.7)

**- மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி-**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கமலாதேவி இராஜதுரை



காரைநகர்,கோவளத்தைப் பிறப்பிடமாகவும் இல.12, பனிதுடுமுல்ல, நாவலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி இராஜதுரை 10.12.2012 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- செல்லம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் நாவலப்பிட்டி குகன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் இராஜதுரையின் அன்பு மனைவியும், இராஜகுமாரி(ஆசிரியை, கிறேஹட், இல-I தமிழ் வித்தியாலயம்), சாந்தகுமாரி, சிவரூபி, சிறிறஞ்சன்,சிறிதரன் ஆகியோரின் பாசமிகு தாயும், பிரபாகரன் (கனடா), பேரின்பநாயகம் (உரிமையாளர் சரஸ்வதி மில், வவுனியா), நந்தினி ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற Dr.தர்மலிங்கம் மற்றும் விமலாதேவி (கனடா), சறோஜினிதேவி ஆகியோரின் அன்பு சகோதரியும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், கனகம்மா, பத்மநாதன், புவனேஸ்வரி மற்றும் கலாநிதி(கனடா), நாகராஜா (கனடா), கற்பகநாதன் (அப்புத்தளை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் பிரவீன் (கனடா), மயூரி (இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம், வவுனியா), கஜன் (வவுனியா தமிழ் மகா வித்தியாலயம்) கபிலா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(11.12.2012) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாலை 4 மணிக்கு நாவலப்பிட்டி பௌவாகம பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.இராஜதுரை (கணவர்)
12,பனிதுடுமுல்ல,
நாவலப்பிட்டிய.
(26665)(5-6-7)

## கந்தவனம் கைலாசபிள்ளை



மல்லாகம் காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தவனம் கைலாசபிள்ளை நேற்றுமுன்தினம்(09.12.2012) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார்காலஞ்சென்றவர்களான கந்தவனம் லச்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் சண்முகம் -நாகம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற பாலேந்திரன் மற்றும் திருநாவுக்கரசு ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் கணவரும் காலஞ்சென்ற அருணாசலம், அமரசிங்கம், விசாலாட்சி மற்றும் மயில்வாகனம் சிற்றம்பலம், சின்னத்தம்பி ஆகியோரின் சகோதரனும் சாந்தினி, தயாளினி, குமுதினி விவேகானந்தன், விசியானந்தன், விபுலானந்தன் காலஞ்சென்ற நித்தியானந்தன் ஆகியோரின் தகப்பனாரும். செல்வகுமார், தம்பிராசா, கலாதரன், சுகந்தினி, ஜனனி, தேனுகா ஆகியோரின் மாமனும் சுஜிதரன், அகிலன், கிரிதரன், கோகுலன்,பிறேமிலா, பிறேமினி, லோயன், சஞ்ஜீவ், லக்ஷியா, சுவேனி, விதுசன், மக்ஸிம், நெல்சன், மொனிசா, மதுசா, மகிசா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (12.12.2012) புதன்கிழமை பிற்பகல்3.00மணிக்கு நடை பெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னை அகம்
ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு.
(26676)(14)
தகவல்.
குடும்பத்தினர்

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு காலை உணவுடன் 'கோல்டன் சிரப்'

கொழும்பு, டிசெ.11

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான நாடாளுமன்ற உணவுச் சாலையில் 80 ரூபாவுக்கு வழங்கப்படும் காலை உணவுடன் மேலதிகமாக 'கோல்டன் சிரப்பை யும் சேர்த்து வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி பெண் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரால் காலை உணவுடன் 'கோல்டன் சிரப்பும்' சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று முன்வைக்கப்பட்ட யோசனைக்கு நாடாளுமன்றச் செயற்குழுவின் அனுமதி கிட்டியுள்ளது.

இதற்கு மேலதிகமாக கம்பஹா மாவட்டத்தின் ஐக்கிய தேசியக் கட்சியின் மேலுமொரு பெண் நாடாளுமன்ற உறுப்பினரால் மதிய உணவுடன் பன்றி இறைச்சி மற்றும் மாட்டிறைச்சியும் வழங்கப்பட வேண்டும் என்ற யோசனையும் முன்வைக்கப்பட்டிருந்தது.

எனினும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியால் அந்த யோசனைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளமை காரணமாக பன்றியிறைச்சி வழங்கப்படுவதற்கு சபாநாயகர் தடைவிதித்துள்ளார்.


தற்போது நாடாளுமன்ற உணவுச் சாலையில் காலை உணவு தொடர்பாக பாற்சோறு, அப்பம், கௌபி, கடலை, பயறு என்பவை வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஒரு வேளை காலை உணவுக்கு 80 ரூபா அறவிடப்படுவதோடு, மதிய உணவு தொடர்பாக 150 ரூபா அறவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனாலும் ஒருவேளை மதிய உணவு தொடர்பாக ஆயிரத்து 500 ரூபாவுக்கு மேல் செலவிடப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரத்தில் கூடிய நாடாளுமன்ற உள்ளக செயற்குழுவில் பங்கேற்றிருந்த பிரதி நிதியமைச்சரை கீதாஞ்ஜன குணவர்த்தன, நாடாளுமன்ற உணவுச் சாலையில் பன்றியிறைச்சி மட்டுமல்லாது மாட்டிறைச்சியும் விநியோகிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-22)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## பொன்னர் கனகசபை
(இளைப்பாறிய ஆசிரியர்)

தோற்றம்
04.12.1934

மறைவு
23.11.2011

திதி:- அபரபக்க திரயோதசி

செவிவழியே நல்லதொரு சேதி கேட்கக் காத்திருந்தீர்
தனிவழியே இறையடியைத் தேடிச்சென்றீர்களோ
விழி நிறைய நீர் சொரிந்து எந்நாளும்
கலங்குகின்றோம்
கதிர் ஒளி போல் மீண்டும் வந்து
எம் கவலை இருள் அகற்றுங்கள்.

தம்பிமார், மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்
பேரக்குழந்தைகள்.

முருகன் கோயிலடி.
புலோலி வடமேற்கு,புலோலி.
(25546)(2.6.7)

# மரண அறிவித்தல்

## சிவகுருநாதன் சிவலோகநாதன்

அளவெட்டி மத்தி, கும்பழாவளையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுருநாதன் சிவலோகநாதன் 07.12.2012 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி சிவகுருநாதன் மற்றும் இராசம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ் சென்றவர்களான சிவநேசன், கோணேஸ்வரி, சிவகணநாதன், சிவயோகநாதன், யோகேஸ்வரி மற்றும் சிவசெந்தில்நாதன், சிவகுகநாதன், சிவலிங்கநாதன், அழகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், யோசப்பின் ராணியின் அன்புக் கணவரும்,யூடித் றொசானி, நீல் பிலிப், ஆன்றொசானி ஆகியோரின்அன்புத் தந்தையும், விஜயரட்ணம், பிரிந்தா இயூசி மோஸ்தா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (12.12.2012) புதன் கிழமை கனடாவில் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த.சிறிகந்தநாயகி
(கிளி சகோதரி)
வேளாவை,
அளவெட்டி மத்தி, அளவெட்டி.
(26529) (6.7.4)

# 31 ஆம் நாள் நினைவலைகள்



மண்ணுலகில்
19.11.1927

விண்ணுலகில்
11.11.2012

அமரர்
## சுப்ரமணியம் குலசிங்கம்

எம் குலவிளக்கே! எமக்கு நல்வழி காட்டி
எம்மை வாழவைத்த அன்புத் தெய்வமே!
எமதுயிராய் எம் சிந்தையெல்லாம் நிறைந்து
வாழ்வின் உன்னதமான வழிநெறிகளை
எம்முன் வாழ்ந்து காட்டியவரே!
என்றும் உங்கள் நினைவுகளைச் சுமந்து
உங்கள் நல்வழியில் நின்று
நீங்கள் வாழ்ந்த வாழ்வுநெறிகளுடன்
இவ்வுலக வாழ்வதனில் மேன்மையுடன் நாம் வாழ்ந்து
உங்கள் பெயர் நிலைக்க வைப்போம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
பகவான் ஸ்ரீ நாராயணப் பெருமாளைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்.
குடும்பத்தினர்.

நிரந்தர முகவரி: சந்தையடி, மானிப்பாய்.
வதிவிட முகவரி:- சுழாவடி, ஆனைக்கோட்டை (26662)(2.6.7)

# மரண அறிவித்தல்

## திருமதி தங்கம்மா கந்தையா



சாத்தாவத்தை, மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா கந்தையா நேற்று (10.12.2012) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட் டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பர் கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான இளையவி - சீதேவி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தவராசா மற்றும் குணசேகரம், கணேசலிங்கம்(சின்னக்கிளி), ஜெயராசா ஆகியோரின் பாசமிகு தாயும் இராஜேஸ்வரி, பவானி சோமரஞ்சிதம், கலாரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமியும், கிருசாந்தி, சிம்சோன், நிரோசன், நீரஜா, வசுமதி, பகிஷன், ஜெகதீஸ்வரன், கஜீவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஏனோக்கின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2012) செவ்வாய்க் கிழமை ந.ப 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்.
சாத்தாவத்தை லேன்,மானிப்பாய்.
(26663)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

யாழ். நகரின் ஆனைப்பந்தி சந்திக்கு அருகில் சகல வசதிகளையும் கொண்ட கீழ் வீடு உடன் வாடகைக்குண்டு. வாகனத் தரிப்பிடமும் உண்டு.

தொடர்பு: 0773243003

(26668) (6.7.4)

## ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர் ஐக்கிய நாணய சங்கம் வளர்ச்சி நிதிக்கான அதிஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு இல 4700
2 ஆம் பரிசு இல 3483
3 ஆம் பரிசு இல 1793

### ஆறுதல் பரிசுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | இல. 5518 | 6. இல. | 0298 |
| 2. | இல. 5816 | 7. இல. | 0643 |
| 3. | இல. 2150 | 8. இல. | 1848 |
| 4. | இல. 5200 | 9. இல. | 5682 |
| 5. | இல. 4278 | 10. இல. | 3643 |

மேற்படி பரிசு பெறும் இலக்கங்களை உடையவர்கள் 0212059429 தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு பரிசை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நிர்வாகம்.

(26667)

## Sky Computers (Pvt) Ltd

அனைத்துப் பாடத்திற்குமான
புதிய பிரிவுகள் ஆரம்பம்

(பிரத்தியேகமாக/ குழுக்களாக விரும்பிய நேரத்தில் கற்கும் வசதி)

- Dip in Ms Office 2010 - 3 Months
- Dip in DTP - 2 Months
- Dip in Hardware - 2 Months
- Dip in Graphic Design - 2 Months
- Dip in Web Design - 3 Months
- Internet & E-mail - 1 Month
- Computer Type Setting - 2 Months
- Kids Program - 2 Months



### Spoken English with Grammar

புதிய பிரிவுகள் ஆரம்பம்
11-12-2012 - 3.00 pm (Tue, Thu)
அடிப்படையிலிருந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும்.

By:Britto

இங்கு கல்வி பயிலும் மாணவர்களிற்கு மிகக் குறைந்த விலையில் கணினி வழங்கப்படும்.

162, Main Street, Jaffna. TP:-021 222 1417

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 03 * 08 * 1936



உதிர்வு 22 * 11 * 2003

### அமரர் சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை

திதி: 11.12.2012

ஆண்டுகள் ஒன்பது ஓடினும் உம் நினைவு
அனுதினமும் எம் நினைவில் நிறைந்திருக்கும்
உங்களது ஆத்மா சாந்தியடைய ஆண்டவன் பாதம் பணிகின்றோம்.

அச்செழு வடக்கு, நீர்வேலி.

பிள்ளைகள். மருமக்கள்.
பேரப்பிள்ளைகள். பூட்டப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி கணபதிப்பிள்ளை இராசமணி (சின்னவா)



குச்சம் ஒழுங்கை, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளைஇராசமணி(சின்னவா) 09.12.2012 ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திருமதி செந்தில்வேல்-தங்கக்கண்டு, ஆறுமுகசாமி, சக்திவேல் (சின்னத்துரை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கலாதேவி, நிர்மலா தேவி (குஞ்சு), ஜமுனா(செல்வா), குமரேசன் ஆகியோரின் தாயும் காலஞ்சென்ற குகநேசன் மற்றும் குகதாசன்,மேனகா ஆகியோரின் மாமியும், செம்பருதி, வித்தகன், உமைநேசன், அபிராமி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.12.2012) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊறணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குச்சம் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/2128)(5-6-7)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

### இராசதுரை இரத்தினசோதிராஜா

தாயின் மடியில் 27.02.1947
இறைவன் அடியில் 12.11.2012



கடந்த 12.11.2012 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

**அமரர் இராசதுரை இரத்தினசோதிராஜா**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் (09.12.2012) ஞாயிற்றுக்கிழமை காலை வில்லூன்றி தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிரியைகள் இன்று (11.12.2012) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

22/2, கொண்டலடி லேன்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
T.P.0755773487

(26670)(2.6.7)

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்

### 2013 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

1.கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித் திகதி :- 17.12.2012 நண்பகல் 12 மணி வரை
2.கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 18.12.2012 மு.ப 10 மணி வரை
3.கேள்வி திறக்கப்படும் திகதி :- 18.12. 2012 மு.ப 11 மணி
4. கேள்வித் தொகையின் 2/3 பகுதியை செலுத்தி ஒப்பந்தம் செய்ய வேண்டிய இறுதித் திகதி :- 26.12.2012

### 2013 ஆம் ஆண்டு இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை

| இல | குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (இதர வரிகள் தவிர) | கேள்விவைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) (இதர வரிகள் தவிர) |
|---|---|---|---|---|
| 01 | ஆட்டிறைச்சிக் கடை 01 | 600,000.00 | 6,000.00 | 1,000.00 |
| 02 | ஆட்டிறைச்சிக் கடை 02 | 600,000.00 | 6,000.00 | 1,000.00 |
| 03 | மாட்டிறைச்சிக் கடை 01 | 1,221,000.00 | 12,210.00 | 1,000.00 |

குறிப்பு : மேலதிக விவரங்களை 03.11.2012ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பார்வையிடவும்

நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி
10.12.2012.

(C/2842)(2.6.7)

இ.தேவசகாயம்பிள்ளை,
தவிசாளர்,
நகராட்சிமன்றம் சாவகச்சேரி.

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை (மல்லாகம்)

### சந்தைகள், இறைச்சிக்கடைகள், சந்தைக் கடைத் தொகுதிகள் என்பன குத்தகைக்கு / வாடகைக்கு விடுவதற்கான

### மீள்கேள்வி அறிவித்தல் 2013

கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி : 18.12.2012 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 18.12.2012 செவ்வாய்க்கிழமை பி.ப 2.00மணி வரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி : 18.12.2012 செவ்வாய்க்கிழமை பி.ப 3.00மணி

| இல | குத்தகை விவரம் | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித்தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| | மல்லாகம் உப அலுவலகம் | | | | |
| 01 | அளவெட்டி மலைவேம்படிச் சந்தை | - | 45,000.00 | 500.00 | 250.00 |
| 02 | இறால் மடம் சந்தை | - | 1,000.00 | 250.00 | 250.00 |
| 03 | மல்லாகம் மாட்டிறைச்சிக்கடை | 1050.00 | 372,000.00 | 1,000.00 | 500.00 |
| 04 | கும்பலை மாட்டிறைச்சிக்கடை | 400.00 | 372,000.00 | 1,000.00 | 500.00 |
| 05 | அளவெட்டி மலைவேம்படி கோழிக்கடை இல - 06 | 650.00 | 139,500.00 | 1000.00 | 500.00 |
| 06 | அளவெட்டி மலைவேம்படி கோழிக்கடை இல - 07 | 650.00 | 139,500.00 | 1000.00 | 500.00 |
| | தெல்லிப்பழை உப அலுவலகம் | | | | |
| 01 | கூத்தன்சீமாச் சந்தை | - | 45,000.00 | 500.00 | 250.00 |

குறிப்பு :

- மாத வாடகை யாவும் விலை மதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் அறவிடப்படும்.
- கேள்விப்பத்திரப் பணம் , கேள்வித்தொகை,மாத வாடகை ஆகியவற்றிற்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT 12%) , தேசத்தை கட்டியெழுப்பும் வரி (NBT 2%) யும் மேலதிகமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
- கேள்விப்பத்திரம் கோருபவர்கள் ஆள் அடையாள அட்டையுடன் அதன் போட்டோப் பிரதியையும் கொண்டு வருதல் வேண்டும்.
- இறைச்சிக்கடை விண்ணப்பம் பெறுபவர்கள் முன்பு கடை நடத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என்பதை உறுதிப்படுத்திய கடிதம் சமர்ப்பிக்க வேண்டும்.
- போதிய காரணங்களால் கேள்வியை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.
- கேள்விப் படிவம் பூரணப்படுத்தப்பட்டு அரக்கு முத்திரையிட்ட கடித உறையில் குறித்த தினத்திற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ சேர்ப்பதுடன் கேள்விப் படிவத்தின் ஒரு பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" அவர்களுக்கும் அனுப்புதல் வேண்டும்.
- ஏனைய மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்திலும், மல்லாகம், தெல்லிப்பழை உப அலுவலகங்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்களை மேற்படி உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
- மல்லாகம் சந்தை, அளவெட்டி மலைவேம்படி சந்தை, கூத்தன்சீமா சந்தைகளிலிருந்து 1km தூரத்திற்கு உட்பட்ட கடைகளிலோ அல்லது வேறு எவ்விடத்திலும் மரக்கறி , மீன் விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது.
- மல்லாகம் சந்தை, அளவெட்டி மலைவேம்படி சந்தைகளிலிருந்து 1km தூரத்திற்கு உட்பட்ட கடைகளிலோ அல்லது வேறு எவ்விடத்திலும் கோழி இறைச்சி விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை (மல்லாகம்).
11.12.2012

(C/2129)(2.6.7)

சோமசுந்தரம் சுகிர்தன்.
தவிசாளர் ,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை
காங்கேசன்துறை (மல்லாகம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளியீடு

திருகோணமலை ஆலடி விநாயகர்
தேவஸ்தானம் வெளியிட்ட இறுவட்டு 150/=
திருமதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன்
பாடியது.
பிள்ளையார் கதை C.D
தொடர்பு:முத்துமாரி அம்மன்
தேவஸ்தானம் திருநெல்வேலி
திருநெல்வேலி, 021222 3544
திரு கோணமலை, 0267210991 -0
(அ/2131) (6.7.4)

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை
## வரவு - செலவுத் திட்டம் - 2013

மக்கள் பங்கேற்புடனான பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் 2013 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டம் மக்கள் பார்வைக்காக 10.12.2012 தொடக்கம் 17.12.2012 வரை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவல கம், பொது நூலகம், முள்ளிப்பற்று உப அலுவலகம் ஆகியவற்றில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.**
பரணந்து பொரினிக் அன்ரன்,
தவிசாளர்.
(2636) (5.6.7)


## ALLIANCE FRANÇAISE DE JAFFNA
**யாழ். பிரெஞ்சு நட்புறவுக் கழகம்**
**The Only Official Centre for French Language in Jaffna**
**பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்**

Alliance Française de Paris ஆலும் இலங்கையிலுள்ள French Embassy ஆலும் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனம் "Alliance Française de Jaffna" மட்டுமே.

சர்வதேச தரம் வாய்ந்த Alliance Française de Jaffna இல் France மற்றும் (French) பிரெஞ் பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் கற்றுக் கொள்கிறார்கள்.

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்.....

*புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பமாகின்றன. உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.*

**61, Kachcheri-Nallur Road, Jaffna TP.No: 021.2228093**
**E-mail: alliancejaffna@yahoo.com**
(ருக்கா வீதியும் கச்சேரி—நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டடம்)






**Carrington Overseas Students Services**
Head Office : No. 04, Sudarshana Mawatha, Nawala (Near Kirimandala Mw)
TP: 0112877654,0112873807,0725050447,0725051444,0779213632,0725050440
Branch Office :No 253/1/2, Chilaw Road, Periyamulla, Negambo. TP: 0312231303,0722226637,0773470404
(அ/2539)


## மரண அறிவித்தல்

### *பெ(f) லீஷியா மனோநிதி நியூட்டன் ஜெனநாதன்*
**(உத்தியோகத்தர், நவீல்ட் பாடசாலை, கைதடி)**



பெருங்குளம் சந்தி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், இல.22, சந்தன மாதா கோயில் வீதி, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோநிதி நியூட்டன் ஜெனநாதன் 08.12.2012 சனிக்கிழமை அதிகாலை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார்காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கிறிஸ்ஸ லோகஸ் தம்பதியரின் அன்பு மருமகளும், நியூட்டன் ஜெனநாதனின் (முகாமையாளர் தேசிய சேமிப்பு வங்கி, சாவகச்சேரி) அன்பு மனைவியும், திருமதி ஆளின் வெஸ்லி யோசப் (ஆஸ்திரேலியா), அலோய் நிரேஷ் ஆகியோரின் அன்புத் தாயும், வெஸ்லி யோசப்பின் (ஆஸ்திரேலியா) அன்பு மாமியும், திருநேசன் (கனடா), திருக்குமார், மனோகரி (லண்டன்), றோஹான் ஞானசீலன் (கனடா), றோஹனா ஞானலதா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், வினோதானந்தன் (இளைப்பாறிய தொழில் நுட்ப உத்தியோகத்தர்) மனோகரன், நவீனராஜன்,ஜஸ்மின் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை நாளை (12.12.2012) புதன் கிழமை பி.ப 3.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக பரி.யோவான் (சுண்டுக்குளி) சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார் ,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

22, சந்தனமாதா கோயில் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (அ/2132)(6.7)
தகவல்:
குடும்பத்தினர்.

## கைதானோரில் ஒருவருக்குப் பிணை

யாழ்ப்பாணம், டிசெ.11

யாழ்ப்பாணத்திலிருந்து படகுமூலமாக பலர் ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முகவராகச் செயற்பட்ட குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 10 பேரில் 5ஆவது சந்தேக நபர் யாழ். மேல் நீதிமன்றினால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

காங்கேசன்துறை கடற்பரப்பில் படகுடன் கைது செய்யப்பட்டவர்கள் ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல உதவிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 10 பேரில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வைரமுத்து ஜெயச்சந்திரன் என்பவரும் 5ஆவது சந்தேக நபராகக் கைது செய்யப்பட்டார். பருத்தித்துறை நீதிமன்றினால் 10 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். கடந்த ஓகஸ்ட் மாதம் தொடக்கம் இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையிலேயே 5ஆவது சந்தேக நபர் சார்பில் யாழ். மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது. அதனைப் பரிசீலித்த யாழ். மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே. விஸ்வநாதன், சந்தேகநபர் நோயால் பீடிக்கப்பட்டிருப்பதை கருத்தில் கொண்டு பிணையில் விடுவித்தார்.

இதன்படி ஒரு இலட்சம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா 2 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும் அவர் விடுவிக்கப்பட்டார். சந்தேக நபர் ஒவ்வொரு மாதத்திலும் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிக்கும் இடையில் காங்கேசன்துறையில் உள்ள குற்ற விசாரணைத் திணைக்களப் பிரிவில் கையெழுத்திட வேண்டும் என்று நீதிபதி நிபந்தனை விதித்தார். (த-4)

## ஆய்வு கூட உரிமையாளருக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.11

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் சகல மருத்துவ ஆய்வு கூட உரிமையாளருக்குமான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வைத்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த கலந்துரையாடலில் மருத்துவ ஆய்வுகூட உரிமையாளர்கள் அனைவரும் மருத்துவ ஆய்வு கூட தொழில்நுட்பவியலாளருடன் கலந்து கொள்ளுமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (ஓ)

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு பஞ்சலிங்கம் [பிரதம மருத்துவ தொழிநுட்ப உத்தியோகத்தர்]



சங்கரத்தை,வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட கார்த்திகேசு பஞ்சலிங்கம் (யாழ். போதனா வைத்தியசாலை,மகரகம புற்றுநோய் வைத்தியசாலை) 09.12.2012 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம்,சண்முகநாதன், திருமதி சேனாதிராசா பாக்கியம், அருமைநாதன், மகாலிங்கம் மற்றும் பரமநாதன் (மலேசியா), நாகலிங்கம், நவரத்தினம்( லண்டன்), திருமதி ஜெயரஞ்சிதன் செல்வலட்சுமி ஆகியோரின் அருமைமிகு சகோதரனும், திருமதி சண்முகநாதன் இரத்தினேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை சேனாதிராசா மற்றும் திருமதி பரமநாதன் சுசீலா (மலேசியா) காலஞ்சென்ற திருமதி அருமைநாதன்தவம் (மலேசியா) மற்றும் திருமதி மகாலிங்கம் இந்திராணி(ஆஸ்திரேலியா),திருமதி நாகலிங்கம் வள்ளிநாயகி,காலஞ்சென்ற நாகலிங்கம் ஜெயரஞ்சிதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

சங்கரத்தையில் நடைபெறவுள்ள அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொழும்பு-011 272 7515, 078 510 1007
சங்கரத்தை- 021 321 3491, 077 717 3227 (26669)(5-6-7)
தகவல்:
குடும்பத்தினர்.


## CIMA Classes at CAPSTONE

| Level | Starting on |
|---|---|
| Operational Level (Level 2) | Saturday, 15th December 2012 |
| Management Level (Level 3) | Wednesday, 12th December 2012 |

**Free!**
Exemption processing for degree holders

**Lecture Panel**
- Mr. S. Mayooran[B. Sc. Eng. (Hons), CIMA passed finalist]
- Mr. Abdul Basith [B. Sc. (Fin) (spcl), CIMA passed finalist]
- Mr. V. Adrian [CIMA finalist]
- Mr. B. Mugunthan[BBA (Hons), MBA (Fmspl)]
- Mr. B. Niransan[B. Sc. (Fin) (spcl), MAAT, ICASL Finalist]

**Call 021 222 0727**
154 A/1, Navalar Road, Jaffna. (அ/2135)(6)

Capstone is the choice only for students who expect good quality delivery from lecturers.

**Book in advance to get a seat in the next Foundation batch, starting in January.**


## UNIVERSITY OF JAFFNA
## BID NOTICE

The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed Bids from the qualified contractors for the following services.

| Service Details | Refundable deposit (Rs.) | Non-refundable deposit (Rs.) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|
| Providing Facilities Management Services for Allied Health Science Unit, University of Jaffna. | 10,000.00 | 500.00 | C9 (any field) or any organizations currently providing complete Facilities Management Services for any similar building |
| Providing Facilities Management Services for various Locations, University of Jaffna. | 10,000.00 | 500.00 | C9 (any field) or any organizations currently providing complete Facilities Management Services for any similar building |

Bids form may be obtained from the Deputy Registrar / Capital Works & Planning Unit, University of Jaffna upon producing valid registration book or related document and receipt for the cash payment for the above fee at the Shroff's Counter, University of Jaffna until 21.12.2012.

Perfected Bids should be sealed and marked with the job and the name of the service on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna P.Box 57, Thirunelvely, Jaffna or deposited in the tender box kept at Registrar's Office, University of Jaffna.

Bids will be accepted till 2.00 p.m. on 04.01.2013 and open immediately thereafter.

Bidders or their accredited representatives could be present at the time of opening of Bids.

Bid forms may be inspected by the Bidders free of charge at the Capital Works & Planning Unit of this University during office hours, if necessary.

P.O.Box 57,
Thirunelvely,
Jaffna.
(அ/2133)(6)

Registrar
University of Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2013 ஆம் ஆண்டுக்கான திட்டங்களை முன்னெடுக்கும் வில்லியம் அங்கிலிஸ்

2012 ஆம் ஆண்டில் ஒரு மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலாத்துறை அபிவிருத்தி ஆணைக்குழு அறிவித்துள்ளது. எதிர்காலத்தில் இலங்கையின் ஹோட்டல், உணவுவிடுதி, நீர்விளையாட்டு ஆகிய துறைகளில் பணியாளர்களுக்கு அதிகமான வரவேற்பு காணப்படவுள்ளது. இதனால் சர்வதேச ரீதியில் முதற்தர உபசரிப்பு முகாமைத்துவ கற்கைநெறிகளை வழங்கும் Australia & Melbourne நகரின் புகழ்பெற்ற William Angliss (Australia அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்றது) நிலையமானது SLIIT ஊடாக உபசரிப்பு முகாமைத்துவ கற்கை நெறிகளை வழங்க முன்வந்துள்ளது.

CAHM நிறுவனத்தின் தலைவர் எரல் வீரசிங்க கருத்து தெரிவிக்கையில் இலங்கையின் நீண்டகால தேவையாக இருந்த விசேட பயிற்றுநருக்கான அவசியத்தைப் பூர்த்தி செய்ய SLIIT மற்றும் Colombo Academy of Hospitality Management(CAHM) ஊடாக சிறந்த அடித்தளத்தை ஏற்படுத்தவுள்ளோம். சர்வதேச ரீதியில் சிறந்த உபசரிப்பு கற்கை நெறிகளை வழங்கும் William Angliss நிறுவனமானது CAHM, SLIIT ஊடாக சிறந்த கற்கைநெறிகளை வழங்கவுள்ளது. இப்பங்காண்மையில் இணைந்து கொண்டமை குறித்து பெருமையடைகிறோம் என்றார்.

William Angliss கல்வியகமானது ஆஸ்திரேலியா அரசாங்கத்தினால் சான்றளிக்கப்பட்ட நிறுவனமாகவும், சுற்றுலாத்துறை பயிற்சி, உபசரிப்பு, சமையற்கலை தொடர்பான விசேட பயிற்சிகளையும் வழங்குகிறது. முதன் முதலாக, 1940ஆம் ஆண்டு Melbourne நகரப் பாடசாலை மாணவர்களுக்கு சமையற்கலை பயிற்சிகளை வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின் 1960களில் உபசரிப்பு பயிற்சிகளையும் பின்னர் சுற்றுலாத் துறை கற்கைகளையும் வழங்கியது. 1994ஆம் ஆண்டு முதல் William Angliss நிறுவனமானது சர்வதேச ரீதியில் தனது கல்வித்திட்டத்தை விஸ்தரித்திருந்தது. இந் நிறுவனம் 2012ஆம் ஆண்டில் எட்டு பல்கலைக்கழகங்களுடனும், சீனா, தாய்லாந்து மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இணைப் பல்கலைக் கழகங்களுடனும் சர்வதேச ரீதியில் முன்னணியில் திகழ்கிறது. ஒவ்வொரு வருடமும் 21,500 மாணவர்களும், 45 நாடுகளைச் சேர்ந்த 1,300 சர்வதேச மாணவர்களும் William Angliss நிலையத்துடன் இணைந்து கொள்வதுடன், 100,000 பேர் பட்டப்படிப்பினை பூர்த்தி செய்கின்றனர்.

இக் கற்கைநெறிகளுக்கு சர்வதேச பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி வேலை வாய்ப்பு வீதம்; 90% மாக காணப்படுகிறது. William Angliss நிலையத்தின் மூலம் வழங்கப்படும் கல்வியானது வேலைவழங்குநர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. CAHM மற்றும் SLIIT நிலையமானது உபசரிப்பு கற்கைகளில் Certificate III யையும், ஹோட்டல் செயற்பாடு, டிப்ளோமா உபசரிப்பு மற்றும் உயர் டிப்ளோமா உபசரிப்பு கற்கை நெறிகளுக்கு உயர் சான்றிதழையும் வழங்குகிறது. மேல் குறிப்பிட்ட கல்வியை பூர்த்தி செய்த மாணவர்கள் பட்டப் படிப்பை தொடர்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. (த)

## கவீன் பொலிமர்ஸ்ஸின் 28 ஆவது வருட நிறைவு



கண்டி, அம்பதென்னையில் அமைந்துள்ள கவீன் பொலிமர்ஸ் நிறுவனம் தனது 28ஆவது வருட நிறைவை முன்னிட்டு தனது ஊழியர்களை விருது வழங்கி கௌரவித்துள்ளது.

கடந்த வருடம் சிறந்த ஊழியர்களாக தெரிவு செய்யப்பட்ட 12 ஊழியர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இதன்போது, வருடத்தின் சிறந்த ஊழியராக இந்திக்க சிறிவர்த்தன தெரிவு செய்யப்பட்டார். (த)

## ஆர்ப்பிகோ இறப்பர் பிரின்டிங் ரோலர் பிரிவின் மூலம் கருத்தரங்கு ஏற்பாடு

றிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி பிஎல்சி குழுமத்தின் அங்கத்துவ நிறுவனமான ஆர்பிகோ இறப்பர் புரொடக்ட் லிமிடெட் அச்சுத் துறையை சேர்ந்தவர்களுக்கு கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. இந்த கருத்தரங்கின் மூலம் அச்சு பிரதிகளின் போதான தரத்தை உயர்த்துதல், உலகளாவிய ரீதியில் அச்சுத் துறையில் பயன்படுத்தப்படும் நவீன நுட்பமுறைகள் மற்றும் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்த விடயங்கள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டிருந்தது. இந்த திட்டத்தை INGRIN எனும் இலங்கை அச்சு மற்றும் கிராஃபிக் கல்வியம் முன்னெடுத்திருந்தது. றிச்சர்ட் பீரிஸ் குழுமத்தின் மற்றுமொரு சமூகப் பொறுப்புணர்வு திட்டமாக இந்த கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த கருத்தரங்கு நாவின்னவில் அமைந்துள்ள றிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி பிஎல்சி நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் சுமார் 150 பங்குபற்றுநர்களின் பங்களிப்புடன் அண்மையில் இடம்பெற்றது.

இந்த கருத்தரங்கை ஆரம்பித்து வைத்து றிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி பஎல்சி நிறுவனத்தின் உள்நாட்டு உற்பத்திகள் மற்றும் விநியோக பிரிவின் முகாமைத்துவ பணிப்பாளர் சுனில் லியனகே கருத்து தெரிவிக்கையில், றிச்சர்ட் பீரிஸ் பிஎல்சி நிறுவனத்தின் அங்கத்துவ நிறுவனமான ஆர்பிகோ இறப்பர் மூலம் சந்தையில் உயர்தரம் வாய்ந்த இறப்பர் உருளைகள் விநியோகிக்கப்படுகின்றன.

இது நாட்டின் அச்சுத் துறைக்கு அவசியமானதாக அமைந்துள்ளது. அச்சுத் துறையுடன் எமது உயர்வான ஈடுபாட்டின் காரணமாக, இலங்கையின் அச்சுத் துறையில் உள்ளவர்கள் தமது செயற்பாடுகளில் திறமை வாய்ந்தவர்களாக காணப்பட்ட போதிலும், சர்வதேச ரீதியில் அச்சுத்துறையில் இடம்பெறும் அபிவிருத்திகள் குறித்து அறிவு குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர். இதன் காரணமாக நாம் இந்தச் சமூகப் பொறுப்புணர்வு திட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்தோம். இதன் மூலம் முழு அச்சுத்துறைக்கும் அனுகூலம் கிடைக்கும் என நாம் எதிர்பார்க்கிறோம். (த)



சாவகச்சேரி எல்.ஐ.சி. நிறுவன கிளை வாடிக்கையாளர் தெல்லிப்பழை கிழக்கு சுதாகரன் கிருஷ்ணபவானி அகால மரணமடைந்ததையடுத்து அவருக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு அவரின் மகளிடம் கிளை முகாமையாளர் எம்.கோபிதாஸன் கையளிக்கிறார். அருகில் கிளையின் விற்பனை மேற்பார்வையாளர்களான எஸ்.வாமதேவன், பீ.நிரஞ்சன் ஆகியோர் உள்ளனர். (த-9)

## இறக்குமதி மூலமான வரி சேகரிப்பு வீழ்ச்சி

வாகன இறக்குமதியில் வீழ்ச்சி ஏற்பட்டதை தொடர்ந்து, 2012இன் இரண்டாம் அரையாண்டில் இறக்குமதி மூலமான வரி சேகரிப்பில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதென உயர்மட்ட சுங்க அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ஆயினும் சிமெந்து, செரமிக் டைல் வகைகள் மற்றும் ஸ்ரீல் போன்ற நிர்மாணத் துறையுடன் தொடர்புடைய பொருள்களின் இறக்குமதி அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சாதாரணமாக ஆண்டொன்றில் சுங்கத்தினரால் பெருமளவு தீர்வைகள் ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் பெருமளவு திரட்டப்படுவதாகவும், ஆயினும் இந்த ஆண்டில் இந்த நிலை மாற்றமடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

## சுப்பர் மார்க்கெட் அதிகாரிகள் திறைசேரி அதிகாரிகளுடன் பேச்சு

2013ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூ.500 மில்லியன் ஒரு காலாண்டுக்கு மொத்த புரள்வாக பெறும் சுப்பர்மார்க்கெட்களுக்கு 12 வீதம் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியை 2013 ஜனவரி மாதம் 1ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்துவது குறித்த தீர்மானத்துக்கு எதிராக தமது கண்டனத்தையும் மாற்று யோசனைகளையும் வழங்கும் வகையில் திறைசேரி அதிகாரிகளுடன் சுப்பர் மார்க்கெட்களைச் சேர்ந்த அதிகாரிகள் சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தனர்.

இந்தச் சந்திப்பின் மூலம் தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் வகையில் திறைசேரி அதிகாரிகளுக்கு விளக்கங்களை தாம் வழங்கியிருந்த போதிலும், இதற்காக எந்தவொரு பதிலையும் திறைசேரி உடனடியாக வழங்கவில்லை என லாஃவ்ஸ் சுப்பர் மார்க்கெட்டின் தலைவர் டபிள்யு.கே.எச்.வேகாபட்டிய தெரிவித்தார். ஆயினும் தாம் சாதகமான ஒரு பதிலை திறைசேரியிடமிருந்து எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார். (த)

## நெஸ்லேயின் இலங்கைக்கான முகாமை கட்டமைப்பு மாற்றம்

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான அலொய்ஸ் ஹொவ்பவர் நெஸ்லே நிறுவனத்தின் மலேசியா மற்றும் சிங்கப்பூர் நாடுகளுக்கான தொழிற்பாடுகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

சர்வதேசமட்டத்தில் இடம்பெற்றுவருகின்ற சிரேஷ்ட முகாமைத்துவக் கட்டமைப்பு மாற்றங்களுக்கு அமைவாக நெஸ்லே லங்கா பீஎல்சி நிறுவனத்தின் தற்போதைய முகாமைத்துவப் பணிப்பாளரான அலொய்ஸ் ஹொவ்பவர் - நெஸ்லே நிறுவனத்தின் மலேசியா மற்றும் சிங்கப்பூர் பிராந்தியத்தின் தொழிற்பாடுகளுக்கான தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் நெஸ்லே குழுமம் அறிவித்துள்ளது. ஹொவ்பவர் 2013 பெப்ரவரி 1ஆம் திகதி முதல் தனது புதிய பணிகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

தற்போது நெஸ்லே நிறுவனத்தின் தெற்காசியப் பிராந்தியத்திற்கான தலைமை விற்பனை அதிகாரியாகப் பணியாற்றிவருகின்ற மலேசியப் பிரஜையான கணேசன் அம்பலவாணர் 2013 ஜனவரி 1ஆம் திகதி முதல் நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார். 1991இல் நெஸ்லே நிறுவனத்தில் இணைந்த அம்பலவாணர் - வர்த்தக நாம முகாமைத்துவத்துறையில் பல்வேறு பதவி நிலைகளை வகித்துள்ளதுடன், தொடர்ந்து இனிப்புத் தின்பண்டங்கள் உற்பத்தித் தொழிற்துறையில் வர்த்தகத் தொழிற்பாட்டு முகாமையாளராகவும் பணியாற்றியிருந்தார். நெஸ்லே மலேசியா நிறுவனத்தின் விற்பனைத் தொழிற்பாடுகளுக்கான பணிப்பாளராக 200[illegible]ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட அவர் தனது முதலாவது சர்வதேசமட்டத்திலான நியமனமாக தற்போது வகித்து வருகின்ற பொறுப்பை 2008 ஆம் ஆண்டில் ஏற்றிருந்தார்.

ஹொவ்பவர் 2010ஆம் ஆண்டு முதல் நெஸ்லே லங்கா நிறுவனத்தில் பணியாற்றி வந்துள்ளார். உலகளாவிய நெஸ்லே குழுமத்தில் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக அங்கம் வகித்து வந்துள்ள அவர், உள்நாட்டு முகாமைத்துவத்தைப் பொறுத்தவரையில் மிகவும் உறுதியான தலைமைத்துவ வழிகாட்டல் ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளதுடன், ஆசியா நாடுகளின் வியாபாரக் கட்டமைப்புக்களைப் பொறுத்தவரையில் சிறந்த பரிச்சயத்தையும் கொண்டுள்ளார். (த)

## தெற்காசியாவின் வளர்ச்சி வீதம் எதிர்வு கூறல் குறைக்கப்பட்டுள்ளது

ஆசிய அபவிருத்தி வங்கியால் வெளியிடப்படும் 2013ஆம் ஆண்டுக்கான தெற்காசிய நாடுகளுக்கான மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சி வீத எதிர்வுகூறல் குறைக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை போன்ற நாடுகளுக்கான இந்த எதிர்வு கூறல் குறைக்கப்பட்டுள்ளது.

முன்னர் 2013ஆம் ஆண்டில் மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சி வீதம் 6.4 வீதமாக அமைந்திருக்கும் என எதிர்வுகூறிய ஆசிய அபிவிருத்தி வங்கி தற்போது இந்த எண்ணிக்கையை 6.2 வீதமாக குறைத்துள்ளது.

அதுபோன்று 2012ஆம் ஆண்டுக்கான எதிர்வு கூறலையும் ஏற்கனவே குறிப்பிட்டிருந்த 5.5 வீதத்திலிருந்து 5.3 வீதமாக தற்போது குறைத்துள்ளது.

கடந்த ஆண்டு தெற்காசிய பிராந்தியத்தின் மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சி வீதம் 6.2 ஆக அமைந்திருந்தது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத்தை நசுக்கியதை எதிர்த்த இன்றைய கால போராட்டம் முக்கியமானது

## கொழும்பு மாநகரசபை உறுப்பினர் பாஸ்கரா

அரசு ஜனநாயகத்தை நசுக்கியதை எதிர்த்த இன்றைய காலப்போராட்டம் மிகமுக்கியமான உரிமைக்கான போராட்டம்.

கொழும்பு மாநகரசபை உறுப்பினர் சி.பாஸ்கரா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தவிடயம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டு இன்னும் விடுதலை செய்யப்படாமல் இருப்பது கண்டிக்கத்தக்கது.

பல்கலைக்கழக மாணவர் சமுதாயத்தின் மிக முக்கியமான ஒரு சொத்து, நாட்டின் முதுகெலும்பு. வருங்காலச் சந்ததியினரின் வளர்ச்சிக்கு அவர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது.

இந்த நாட்டில் மூன்று தசாப்த கால அகிம்சை, மூன்று தசாப்த கால ஆயுதப் போர் முடிவுக்கு வந்த காலத்தில் ஜனநாயகம் மிளிர்வதாக கூறிக்கொள்ளும் அரசு ஜனநாயகத்தை நசுக்கியதை எதிர்த்த இன்றைய காலப் போராட்டம் மிக முக்கியமான உரிமைக்கான போராட்டம்.

நாம், கைதிகள் விடுதலை, காணாமல் போனோரை மீட்டுத் தரும்படியான போராட்டம், நில, கடல் ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டம், மீள்குடியேற்றத்தை வலியுறுத்தும் போராட்டம் போன்றவற்றை நடத்தியிருக்கிறோம்.

இப்போது சாத்வீக போராட்டத்தை நசுக்கியதை எதிர்த்து போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள் கார்த்திகைத் திருநாள் அன்று அமைதியாக போரில் இறந்தவர்களை நினைத்து தீபம் ஏற்றிய போது இராணுவத்தினர் மிலேச்சத்தனமாக விடுதியில் புகுந்து தாக்கியிருந்தனர்.

தாக்கியதைக் கண்டித்து மறுநாள் சாத்வீக போராட்டம் நடத்தியவேளை அதனை தடுக்கத் கண்ணீர்ப்புகை வீசியதோடு கண்மூடித்தனமான தாக்குதலும் நடத்தியிருந்தனர்.

இதனைக் கேட்டு நிலமையை ஆராயச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனின் வாகனம் உடைக்கப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டு இன்னும் விடுதலை செய்யப்படாது புலிச்சாயம் பூசப்படுவதுடன் அகிம்சைப் போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கும், உரிமைக்காக குரல் கொடுப்பவர்களுக்கும் புலிச்சாயம் பூசப்படுவது. தமிழர்கள் உரிமையைக் கேட்டால் புலிஎன்று கூறுவது போன்ற கபட நிகழ்வு நீக்கப்பட வேண்டும்.

ஜே.வி.பி. 1971, 1989 ஆண்டுகளில் அன்றைய அரசுக்கு எதிராக பெரும் புரட்சியைச் செய்திருந்தது. ஆனால் இன்று கூட அவர்கள் புரட்சியில் இறந்தவர்களை ஏப்ரல், நவம்பர் மாதங்களில் நினைவு கூருகின்றனர் அதே வேளை நவம்பர் 13 அன்று தலைவர் றோகணன விஜயவீரவின் இறந்த நாளையும் தீபம் ஏற்றி கொண்டாடுகின்றனர்.

இப்படி இருக்கும்போது போரில் இறந்த தமது சகோதர உறவுகளைத் தீபம் ஏற்றி நினைவு கூரும்போது நசுக்குவது ஜனநாயகம் உள்ள நாட்டுக்கு ஏற்புடையது அல்ல.

அது மட்டும்அன்றி உலகின் நிர்ப்பந்தத்துக்கு ஏற்ப தன்னால் உருவாக்கிய நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைபடுத்துவதாக பொய் கூறிக்கொண்டு நடைமுறைபடுத்தாத போதும் இன்று பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் உலகுக்கு நடைமுறை படுத்துவதாக பொய் பிரசாரம் செய்வதை பொய் என பறைசாற்றிய நிகழ்வாக இராணுவம் மாணவர்களைத் தாக்கி கைது செய்த இவ் நிகழ்வு உள்ளது.

போரில் தனது பிழையை ஏற்றுக்கொள்ளும் ஐக்கிய நாடுகள்சபை, மற்றைய நாடுகளும் பிழை என்று மன்னிப்பு கேட்டு விலகாமல் பரிகாரம் தேடி எமது உரிமைகள், உணர்வுகளை மதித்து நாம் சுதந்திரமாகவும் சக இனத்தவர்கள் போல் வாழவும் வழியேற்பட நடைமுறைசாத்தியமான நிகழ்வுகளைச் செய்தல் வேண்டும்.- என்றுள்ளது. (ம)

## நாட்டில் பல இடங்களிலும் வானில் தெரியும் மர்மப்பொருள்

### பார்வையிட்டுள்ளனர் மக்கள்

நாட்டின் பல பகுதிகளிலும் வானில் மர்மப்பொருள்களைப் பார்வையிட்டதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

அதிக வெளிச்சத்துடன் இவ்வாறான பொருள்களை காலை மற்றும் மாலை வேளைகளில் கண்டதாக பலர் தெரிவித்துள்ளனர். சிலாபம், பண்டாரவளை, பதுளை, அநுராதபுரம், நொச்சியாகம உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளில் இவ்வாறான மர்மப் பொருள்கள் பற்றிய செய்திகள் வெளியாகியுள்ளன.

நாட்டின் பல பகுதிகளிலும் தென்படும் மர்மப் பொருள்கள் தொடர்பில் விசேட விசாரணைகள் நடத்தப்பட உள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

சில மாதங்களாகவே இவ்வாறான மர்ம வான் பொருள்களை மக்கள் பார்வையிட்டுள்ளனர். நொச்சியாகம பிரதேசத்தில் மிகப் பிரகாசமான பொருளொன்று வானிலிருந்து மரமொன்றில் இறங்கியதைப் பார்த்ததாக பாடசாலை மாணவியொருவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மன்னார் வானில் மர்மப்பொருள் ஒன்று தென்பட்டதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். நேற்றுஅதிகாலை மன்னாரில் அதிக வெளிச்சத்துடன் கூடிய பொருளொன்று மெதுவாக தரைக்கு வந்திறங்கியதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

விமானமொன்று தீப்பற்றி எரிவதைப் போன்று இந்த வெளிச்சம் காட்சியளித்ததாகத் தெரிவித்துள்ளனர்.

## அகதிகளை நவுறுதீவுக்கு கொண்டுசெல்ல அதிகசெலவு

### மாதம் ஒன்றுக்கு 6.1 மில். டொலர்

இலங்கையர் உட்பட்டவர்கள் ஆஸ்திரேலியாவுக்கு படகுமூலம் சென்றதன் பின்னர் அவர்களை-நாவுறுதீவுக்கு கொண்டு செல்வதற்காக மாதம் ஒன்றுக்கு 6.1 மில்லியன் டொலர்கள், வரை செலவாகின்றதாக அந்த நாட்டு 'தி டெலிகிராப்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது

அகதிகளை வானூர்திகளில் அழைத்துச் செல்வதற்காகவே மேற்படி தொகை செலவிடப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த தொகையில் பொருளாதார அகதிகளை நாடுகளுக்கு அனுப்பும் செலவுகளும் அடங்குவதாக மேற்படி பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. (வ)

## சுகாதார வாரம் நேற்று ஆரம்பம்



யாழ்ப்பாணம்,டிசெ.11

வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் நடத்தும் தேசிய சுகாதார வாரத்தின் ஆரம்ப நாள் நிகழ்வுகள் நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றன.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வரவேற்புரையை வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி ர.யூட் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, திருக்குடும்ப கன்னியர் மடம்,யாழ்.இந்து மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலை மாணவர்களின் நடன நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் வடமாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் செயலாளர் ரவீந்திரன், யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் பவானந்தராஜா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரீன், மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த தேசிய சுகாதார வார நிகழ்வுகளில் இன்று செவ்வாய்க்கிழமை சுத்திகரிப்பு தினமாகவும், நாளை புதன்கிழமை விழிப்பூட்டல் தினமாகவும் நாளை மறுதினம் வியாழக்கிழமை கண்காணிப்பு தினமாகவும், எதிர்வரும் 14 ஆம் திகதி நிவாரண தினமாகவும், எதிர்வரும் 15 ஆம் திகதி மதிப்பீடு செய்தல் தினமாகவும், எதிர்வரும் 16 ஆம் திகதி மதரீதியான கவனவீர்ப்பு தினமாகவும், எதிர்வரும் 17 ஆம் திகதி உணர்வுபூர்வ நினைவு தினமாகவும் அனுஷ்டிக்கப் படவுள்ளது.

அத்துடன் நாளை புதன்கிழமை யாழ்.பிரா்ந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இருந்து யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கு வரையான நடைபயணம் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ம-14-17)

## அளவெட்டியில்ஆரம்பமானது புத்தகக் கண்காட்சி

அளவெட்டி, டிசெ.11

அளவெட்டி அபிவிருத்தி மன்றமும் அளவெட்டி மகாஜனா சபையும் இணைந்து நடத்தும் 'புத்தகக் கண்காட்சி' நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பமாகியது. இந்தக் கண்காட்சி எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அளவெட்டி மகாஜனா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கவும், ''விடுமுறையைப் புத்தகங்களுடன் கழிப்போம்'' என்ற தொனிப் பொருளில் இந்தக் கண்காட்சி இடம்பெறுகின்றது என அளவெட்டி அபிவிருத்தி மன்றத் தலைவர் வே.சிவராசா தெரிவித்தார். மகாஜனா சபை நூலகத்தில் உள்ள நூல்கள் காட்சி, மற்றும் அளவெட்டி மக்களின் வாசிப்புக்கென லண்டன் வாழ் அளவையூர் மைந்தன் பொ.கனகேஸ்வரன் தமது பெற்றோர்கள் நினைவாக அன்பளிப்புச் செய்த ஆங்கில நூல்களும் வைக்கப் படவுள்ளன.

இவற்றுடன் தமது வீடுகளில் சேகரித்து வைத்துள்ள நூல் ஆர்வலர்களிடமுள்ள நூல்களும் பெறப்பட்டு அவர்களது பெயர்களுடன் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (3-38)

### ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண

# தமிழர் தாயகப் பிரதேசங்களில் ஐ.நா படையை நிறுத்த வேண்டும்

## தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வலியுறுத்து

ஈழத்தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வரை ஐக்கிய நாடுகள் படையை தமிழர் தாயகப் பிரதேசங்களில் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் தி.வேல்முருகன் தெரிவித்தார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் மீதான இலங்கை அரசின் கொடுந்தாக்குதல்களும் சட்டவிரோத கைது நடவடிக்கைகளும் தொடர்கதையாகி வருகின்றன. கடந்த நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் நாளை கடைப்பிடித்தனர் என்ற ஒரே குற்றச்சாட்டுக்காக மாணவர்களை வேட்டையாடி வருகிறது இலங்கை அரசு. வவுனியாவில் நேற்றுமுன்தினம் கூட 2 மாணவர்களை நள்ளிரவில் கைது செய்திருக்கிறது. இதுவரை மொத்தம் 10 மாணவர்களை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்திருக்கிறது.

மாணவர்களை மட்டுமல்ல, யாழ்ப்பாணத்தில் 17 அப்பாவித் தமிழர்களை பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் கீழ் திடீரென கைது செய்துள்ளது இலங்கை அரசு. கைது செய்யப்படுகிறவர்களின் கதி என்ன? அவர்கள் எந்த நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தப் பட்டனர்? எந்த சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கின்றனர் என்ற விவரத்தைக் கூட இனப்படுகொலை மேற்கொண்ட மஹிந்த ராஜபக்ஷ அரசு தெரிவிக்க மறுத்து வருகிறது.

தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் கொடுமையை கேட்டறிய வந்த ஐ.நா. பிரதிநிதிகள் குழுவினரிடம் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரை தமிழர் பிரதேசத்தில் ஐ.நா. படையை நிறுத்த வேண்டும் என்று தமிழர்கள் வலியுறுத்தி இருக்கின்றனர். யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் தூதரோ இதுவரை வாய்மூடி மௌனியாக இருந்து வருகிறார். இலங்கையில் மாணவர்கள் மீதும் அப்பாவித் தமிழர்கள் மீதும் சிங்களத்தின் தொடரும் கோரக்கொடுமையை மத்திய அரசு தட்டிக் கேட்க வேண் டும்.

ஈழத்தமிழர்கள் கோருவது போல் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரை ஐக்கிய நாடுகள் படையை தமிழர் தாயகப் பிரதேசங்களில் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். ஈழத் தமிழர்களின் இந்த நியாயமான கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக சாதி, மத, கட்சி எல்லைகளைக் கடந்து தமிழர் சக்திகள் ஓரணியில் ஒன்று திரளவும் தமிழக வாழ்வுரிமைக் கட்சி உரிமையோடு அழைக்கிறது -என்றுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் இந்து பாய்ச்சல்; பணிந்தது பருத்தி.ஹாட்லி

## சாருஷன்,றொசாந்த்,பானுஷன் சாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.11

பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையே இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்படும், பிரிவு III இற்கான கிரிக்கெட் ஆட்டமொன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி ஒரு இன்னிங்ஸ் மற்றும் 49 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இந்தப் போட்டி பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது .இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியும் ஒன்றையொன்று எதிர் கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரி அணியினர் முதலில் களத் தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தனர்.

இதன் அடிப்படையில் தமது முதல் இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி.எனினும் தனது சொந்த மைதானத்திலேயே எதிரணியின் பந்து வீச்சை எதிர் கொள்ள முடியாமல் ஹாட்லி அணி ஆரம்பத்தில் இருந்தே தடுமாறத் தொடங்கியது.

கொக்குவில் இந்து அணியின் பந்து வீச்சாளர்கள் ஆக்ரோஷமாக செயற்பட்டதால், மந்த கதியிலேயே ஹாட்லி அணியால் ஓட்டங்களை சேகரிக்க முடிந்தது. சாருஷனும், றொசாந்தும் கூட்டணி அமைத்து போட்டுத் தாக்க,35.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 77 ஓட்டங்களுக்குள் சுருண்டது பருத்தித்துறை ஹாட்லி அணி.

ஹாட்லி அணி சார்பில் ஜதர்சன் 26 ஓட்டங்களையும், ஆனந் 13 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பில் சாருஷன் 12 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 37 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும், றொசாந்த் 10.3 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 11 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும், தனுக்ஷன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி ஒரு ஓட்டத்தைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணியின் ஓட்ட வேகத்தை கட்டுப் படுத்துவதில் ஹாட்லி பந்து வீச்சாளர்கள் ஓரளவுக்கு வெற்றி கண்டனர். ஆயினும் பானுஷனின் அரைச்சதமும், றொசாந்தின் பொறுப்பான ஆட்டமும் கைகொடுக்க கொக்குவில் இந்து அணி சிறப்பான இலக்கு நோக்கி நகர்ந்தது. அந்த அணி தனது முதல் இன்னிங்ஸை 40 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை இடைநிறுத்திக் கொள்வதாக அறிவித்தது.

கொக்குவில் இந்து சார்பில் பானுஷன் ஆட்டம் இழக்காமல் 59 ஓட்டங்களையும், றொசாந் 42 ஓட்டங்களையும் ,டிருசன் 31 ஓட்டங்களையும், சந்தோஷ் 24 ஓட்டங்களையும், சந்துரு 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி சார்பில் ஆனந் 15 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 48 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், மதிவாணன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 31 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், மதன் 3 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 18 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கினையும், ரமணன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 20 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஹாட்லிக் கல்லூரி அணி வீரர்களை மீண்டும் பதம் பார்த்தனர் கொக்குவில் இந்துவின் பந்து வீச்சாளர்கள். இதனால் முதல் இன்னிங்ஸைப் போலவே இரண்டாவது இன்னிங்ஸிலும் ஹாட்லி அணி அடுத்தடுத்து இலக்குகளை பறிகொடுத்தது. அத்தோடு ஓட்டங்களைப் பெறமுடியாமலும் தடுமாறியது. இறுதியில் ஹாட்லி அணி 31 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 65 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதனால் இந்த ஆட்டத்தில் கொக்குவில் இந்து அணி ஒரு இன்னிங்ஸ் மற்றும் 49 ஓட்டங்களால் ஹாட்லி அணியை வீழ்த்தியது.

ஹாட்லி அணி சார்பில் கிருத்திகன் 26 ஓட்டங்களையும், நீகன் 8 ஓட்டங்களையும், மதன் 6 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் இரண்டாவது இன்னிங்ஸிலும் கலக்கிய சாருஷன் 15 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 39 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும், டிருசன் 9.1 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 9 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், றொசாந்த் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 11 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கினையும் வீழ்த்தினர் .

(ந-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ .11

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும், கழகத்தின் முன்னாள் வீரர்களான சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காகவும் நடத்தப்படும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை மின்னொளியில் இடம்பெறும் ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

**மாலை 6 மணி**

உதயதாரகை விளையாட்டுக் கழகம் எதிர் லயன்ஸ் விளையாட்டுக்கழகம்

★ ★ ★

பிறிமா வெற்றிக் கிண்ணத்துக்காக மாகாணங்களுக்கு இடையிலான 15 வயதுப் பிரிவு அணிகளுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை கண்டி பொலிஸ் பார்க் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு-

வட மாகாண அணி எதிர் மத்திய மாகாண அணி

(ந-23)

## ஆளுநர் வெற்றிக் கிண்ண சதுரங்கப் போட்டி இன்று

ஆளுநர் வெற்றிக் கிண்ணத்துக்கான வடமாகாண அமைச்சுகளுக்கு இடையிலான சதுரங்கப்போட்டிகள் மருதனார்மடத்தில் உள்ள வடமாகாண விளையாட்டுத் திணைக்கள மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 5 மணிவரை இடம் பெறவுள்ளன என்று வடமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரை தெரிவித்துள்ளார். (ந-23)

## யாழ்.லீக் இறுதிக்குள் சென். நீக்கிலஸ் வி.க.

யாழ்ப்பாணம்,டிசெ.11

யாழ். உதைபந்தாட்ட லீக், தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் அரையிறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றியீட்டி இறுதியாட்டத்துக்கு முன்னேறியது.

**நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல்க் கணக்கில் வெற்றியீட்டி இறுதிக்கு முன்னேறியது.**

குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் இடம்பெற்ற இந்த அரையிறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி ஆரம்பத்தில் இருந்தே தனது முழுத்திறனையும் வெளிப்படுத்தி விளையாடியது. அந்த அணியின் வீரர்கள் எதிரணியின் வியூகங்களை உடைத்தெறிந்து கொண்டு கோல்களைப் பெறுவதில் குறியாக இருந்தார்கள். மூன்று முறை அந்த முயற்சிகளில் வெற்றியும் பெற்று, கோல்களை தமது அணி சார்பில் பெற்றனர்.

இதேவேளை,பதிலுக்கு யூனியன் விளையாட்டுக்கழகமும் சவாலான ஆட்டத்தை வெளிப்படுத்தத் தவறவில்லை. தமது பங்குக்கும் யூனியன் அணி ஒரு கோலை அடித்தது. ஆயினும் யூனியன் அணியின் போராட்டம் இறுதியில் தளர்ந்து போனது. இதனால் ஆட்ட நேர நிறைவில் சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம் 3:1 என்ற கோல் கணக்கில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணியை வெற்றிகொண்டு இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ந-23)

### ஜனாதிபதிக் கிண்ண கரப்பந்து ஞாயிறன்று

யாழ்ப்பாணம், டிசெ.11

ஜனாதிபதி தங்கக் கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட ரீதியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை பன்னாலை கணேச விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

ஆண்களுக்கான போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

பெண்களுக்கான போட்டியில் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் களமிறங்கவுள்ளது. (ந-23)

## 'றக்பி 'பயிற்சி முகாம் நேற்று



யாழ்ப்பாணம், டிசெ.11

வடமாகாண பாடசாலைகளில் 'றக்பி' விளையாட்டினை அறிமுகப்படுத்தும் நோக்குடன் வட மாகாணப் பாடசாலை 'றக்பி' பயிற்றுநர்களுக்கான வதிவிடப் பயிற்சி முகாம் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நேற்று ஆரம்பமானது.

கொழும்பில் இருந்து வருகை தந்த சிறிலங்கா 'றக்பி' யூனியனின் அபிவிருத்தி குழுவின் உறுப்பினரும் இலங்கை தேசிய 'றக்பி' அணியின் உதவிப் பயிற்றுநருமான சனத் மார்ட்டிஸ், சர்வதேச 'றக்பி' குழுவின் இலங்கைக்கான போதனாசிரியர்களான நிஹால் குணரெட்ண, ஆனந்த கஸ்தூரி ஆராய்ச்சி, மற்றும் சிறிலங்கா 'றக்பி' யூனியனின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் டினேஸ் ஜனக்காந்த் ஆகியோர் இதன் போது பயிற்சிகளை வழங்கினர்.இந்த வதிவிடப் பயிற்சி முகாமில் 30 க்கும் மேற்பட்ட பயிற்றுநர்கள் பங்கு கொண்டனர். (ந-23)

## ஊவாவிடம் தோற்றது வடக்கு

யாழ்ப்பாணம், டிசெ.11

பிறிமா வெற்றிக் கிண்ணத்துக்காக 15 வயதுப்பிரிவு மாகாண அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டித் தொடரின்ஆட்டமொன்றில் வடமாகாண அணி வெற்றியை பறிகொடுத்தது.கண்டி பொலிஸ் பார்க் மைதானத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் வட மாகாண அணியை எதிர்த்து ஊவா மாகாண அணி மோதிக் கொண்டது.முதலில் துடுப்பெடுத்தாடிய வட மாகாண அணி 32.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் எஸ். கோமிதரன் 30 ஓட்டங்களைப்பெற்றார்.

பந்து வீச்சில் ஊவா மாகாண அணி சார்பில் நிருசலித்த 4 இலக்குகளை வீழ்த்தினார்.77 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஊவா மாகாண அணி 19.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை மாத்திரம் இழந்து 79 ஓட்டங்களை பெற்று வெற்றியிலக்கை எட்டியது. (ந-23)



[illegible] அணிகளுக்கிடையே யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டு சங்கம் [illegible] டித் தொடரில் மூன்றாமிடத்தை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பெற்றுக் கொண்டது. அந்த அணியின் வீரர்கள், விருந்தினர்களுடன். (ந-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சச்சின், டோனியை நீக்க துணிச்சல் இல்லையா?

நாக்பூர் டெஸ்ட் ஆட்டத்துக்கான இந்திய வீரர்கள் தேர்வில் பின்பற்றப்பட்ட பாரபட்சமான அணுகுமுறை பெரும் சர்ச்சையைக் கிளப்பி உள்ளது. செயல்பாட்டின் அடிப்படையில் யுவராஜ், ஹர்பஜன், சகீர்கான் நீக்கப்பட்ட போதும் திறனின்றித் தவிக்கும் சச்சின், டோனியை நீக்காதது தேர்வுக்குழுவில் துணிச்சல் இல்லை என்பதை வெட்ட வெளிச்சமாக்கி உள்ளது.

கொல்கத்தாவில் நடந்த இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்டில் இங்கிலாந்து அணி 7 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதனால் இந்திய அணி 1-2 என்று பின்தங்கி உள்ளது. இந்த நிலையில் நாக்பூரில் நடக்கவுள்ள 4 ஆவது டெஸ்ட் ஆட்டத்துக்கான இந்திய அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. இதில் மோசமான திறன் காரணமாக யுவராஜ் சிங், ஹர்பஜன் சிங், சகிர்கான் நீக்கப்பட்டனர்.

**சச்சினுக்கு வாய்ப்பு**

இந்த நிலையில் சமீபகாலமாக திறனின்றி திணறும் சச்சினுக்கு, நாக்பூர் டெஸ்டிலும் வாய்ப்பு அளிக்கப்பட்டிருப்பது அதிர்ச்சி கலந்த ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது. ஏனெனில் இவர் கடைசியாக விளையாடிய மூன்று டெஸ்டில் மொத்தம் 110 ஓட்டங்கள் (சராசரி 22.00) மட்டுமே எடுத்துள்ளார். ஆனால் இவரை விட கூடுதலாக ஓட்டங்கள் எடுத்துள்ள யுவராஜ் சிங் (125 ஓட்டங்கள், சராசரி 25.00) நீக்கப்பட்டுள்ளார்.

பொண்டிங் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் மோசமான திறன் காரணமாக தாமாகவே முன்வந்து ஓய்வை அறிவித்தனர். ஆனால் தனது திறன் குறித்து நன்கு அறிந்த சச்சினுக்கு ஓய்வு பெறும் எண்ணம் தோன்றாதது ஆச்சரியம் அளிக்கிறது. சமீபத்தில் சச்சினை சந்தித்த தேர்வுக்குழுவினரிம், தன்னை அணியில் இருந்து நீக்குவது குறித்து தேர்வுக்குழுவே முடிவு செய்து கொள்ளலாம். இந்த விடயத்தில் தலையிட மாட்டேன், என்று வெளிப்படையாகத் தெரிவித்தார். இருந்தபோதிலும் சச்சினுக்கு தொடர்ந்து வாய்ப்பு அளிக்கப்படுவதால், தேர்வுக்குழுவினர் மீது விமர்சனம் எழுந்துள்ளது.

**சொதப்பும் டோனி**

இந்திய அணித்தலைவர் டோனியின் சமீபத்திய செயல்பாடு திருப்தி அளிக்கவில்லை. கடைசியாக இவர் விளையாடிய மூன்று டெஸ்டில் 92 ஓட்டங்கள் (சராசரி 18.40) மட்டுமே எடுத்துள்ளார். தவிர இவரது அணித்தலைவர் வியூகமும் கைகொடுக்கவில்லை. இதனால் மும்பை டெஸ்ட் ஆட்டத்தை தொடர்ந்து கொல்கத்தா டெஸ்டில் மோசமான தோல்வியை சந்திக்க வேண்டியதாயிற்று.

கடந்த ஆண்டு டோனி தலைமையிலான இந்திய அணி, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா அணிகளுக்கு எதிராக டெஸ்ட் தொடரை முழுமையாக இழந்தது. அப்போது, அணித்தலைவர் பொறுப்பில் இருந்து டோனியை நீக்க வேண்டும் என்று முன்னாள் வீரர்கள் பலர் கருத்து தெரிவித்தனர். இதனை கண்டு கொள்ளாத தேர்வுக்குழு, தொடர்ந்து டோனியை அணித் தலைவராக நியமித்தது. தற்போது இங்கிலாந்துக்கு எதிராக சொந்த மண்ணில் இந்திய அணி தொடரை இழக்கும் அபாயத்தில் உள்ளது. இனிமேலாவது தேர்வுக்குழுவினர் செயல்படு அல்லது வெளியேறு என்ற 'போர்முலா' வை பின்பற்றும் பட்சத்தில், மோசமான தோல்வியிலிருந்து தப்பலாம்.

**ஹர்பஜன் ஏமாற்றம்**

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடர் மூலம், தனது 100 ஆவது டெஸ்டில் விளையாடும் கனவுடன் அனுபவ சுழற்பந்துவீச்சாளர் ஹர்பஜன் சிங் காத்திருந்தார். ஆனால் இவருக்கு அஹமதாபாத்தில் நடந்த முதல் டெஸ்டில் வாய்ப்பு கிடைக்கவில்லை. பின்னர், மும்பையில் நடந்த இரண்டாவது டெஸ்டில் இடம் கிடைத்தது. மொத்தம் 2 இலக்குகள் மட்டுமே கைப்பற்றிய இவருக்கு, கொல்கத்தாவில் நடந்த மூன்றாவது டெஸ்டில் இடம் கிடைக்கவில்லை. தற்போது நாக்பூர் டெஸ்ட் ஆட்டத்துக்கான இந்திய அணியில் இருந்து நீக்கப்பட்டதன் மூலம், அவரது 100 ஆவது டெஸ்ட் கனவு நீடிக்கிறது.

கொல்கத்தா ஆடுகளத்தில் இவருடைய முந்தைய செயல்பாடு சிறப்பாக இருந்தும் பதினொருவர் அணியில் இடம் கிடைக்காதது தேர்வுக்குழுவினர் மீது அதிருப்தியை ஏற்படுத்தியது. (5)



# இதெல்லாம் சகஜமப்பா...

கொல்கத்தா டெஸ்டில் இங்கிலாந்து அணித் தலைவர் குக் 17 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது கொடுத்த நல்ல பிடிபெடுக்கும் வாய்ப்பை 'ஸ்லிப்பில்' நின்ற புஜாரா தவறவிட்டார்.

இது குறித்து இந்திய அணியின் களத்தடுப்பு பயிற்சியாளர் ட்ரெவர் பென்னி கூறுகையில், 'ஸ்லிப்' பகுதியில் நின்று பிடியெடுப்பு மேற்கொள்வது தொடர்பான பயிற்சியில் புஜாரா கொஞ்ச காலமாக ஈடுபட்டு வருகிறார்.

இதில் சிறந்த களத்தடுப்பு வீரராக அவர் ஜொலிக்க இன்னும் காலம் பிடிக்கும். பிடியை நழுவ விட்டது நிச்சயம் பெரிய தவறு தான்.

ஆனால் கிரிக்கெட்டில் இது போன்று நடப்பது சகஜம். அஷ்வின், புஜாரா, ஹேராக்லி உள்ளிட்டோர் சிறந்த களத்தடுப்பு வீரர்கள்.

அவர்கள் 'ஸ்லிப்' திசையில் பிடியெடுப்புச் செய்வதில் தொடர்ந்து பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். வலைப் பயிற்சியில் நன்றாக செயல்படுகிறார்கள்.

'ஸ்லிப்பில்' பிடியெடுப்பு மேற்கொள்வதில் ராகுல் டிராவிட், வி.எஸ்.லக்ஸ்மன் வல்லவர்கள். ஓய்வு பெற்றுவிட்ட அவர்களது இடத்தை ('ஸ்லிப்பில்' பிடியெடுப்பு மேற்கொள்வதில்) நிரப்புவதில் அனேகமாக இவர்கள் போதுமானவர்களாக இருப்பார்கள்.

ஆனாலும் இந்த டெஸ்டில் எங்களது களத்தடுப்பு சரியாக அமையவில்லை. வாய்ப்புகளை நழுவ விட்டு ஓட்டங்களை கொஞ்சம் கூடுதலாக விட்டுக்கொடுத்து விட்டோம் என்று தெரிவித்துள்ளார். (5)

# பாக். வீரர்களை ஐ.பி.எல்லில் இணைக்கக் கூடாது

ஐ.பி.எல் தொடருக்கான வீரர்கள் ஏலத்தில் பாகிஸ்தான் வீரர்களை தெரிவு செய்ய வேண்டாம் என்று அணி உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டதாக தெரிகிறது.

ஐந்து ஆண்டுகளுக்குப் பின்பு இந்தியா, பாகிஸ்தான் அணிகள் பங்கேற்கும் கிரிக்கெட் தொடர் மத்திய அரசின் அனுமதியுடன் எதிர்வரும் 25 ஆம் திகதி தொடங்குகிறது.

தவிர, அடுத்த ஆண்டு நடக்கும் 6 ஆவது ஐ.பி.எல் 'ரி-20' தொடரில் பாகிஸ்தான் வீரர்கள் பங்கேற்க அனுமதி கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான வீரர்கள் ஏலம் ஜனவரியில் நடைபெறவுள்ளது.

இதில், சூதாட்ட சர்ச்சையில் சிக்கிய பாகிஸ்தான் வீரர்களை தெரிவு செய்தால் பாதுகாப்பு பிரச்சனைகள், அரசியல் கட்சிகளின் எதிர்ப்புகள் போன்றவற்றை சந்திக்க வேண்டும்.

தவிர, ஐ.பி.எல் போட்டியில் பங்கேற்ற வீரர்கள் சூதாட்டத்தில் சிக்கியது, செக்ஸ் முறைப்பாடு மற்றும் போதை மருந்து விருந்தில் பங்கேற்றது என்று பல்வேறு சர்ச்சைகளால் ஐ.பி.எல் தொடருக்கு ஏற்கனவே அவப்பெயர் ஏற்பட்டுள்ளது.

இதனால், மீண்டும் சிக்கல் ஏற்படுவதைத் தவிர்க்க பாகிஸ்தான் வீரர்களை ஏலத்தில் எடுக்க வேண்டாம் என்று ஐ.பி.எல்., அணி உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

கடந்த 21 ஆம் திகதி நடந்த கூட்டத்தில் இது குறித்து முடிவு செய்யப்பட்டுள்ளது.

பணம் கொழிக்கும் ஐ.பி.எல் தொடரில் இந்த முறை பங்கேற்கலாம் என்று எதிர்பார்த்திருந்த பாகிஸ்தான் வீரர்களுக்கு இந்த செய்தி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (5)

# தோல்வியின் எதிரொலி டோனியின் பொம்மை எரிப்பு



இங்கிலாந்து அணியுடனான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் 7 இலக்குகள் வித்தியாசத்தில் இந்திய அணி தோல்வியைத் தழுவியது. இதனையடுத்து இந்திய அணியில் அதிரடி மாற்றங்கள் செய்யப்பட்டுள்ள அதே வேளை, இந்திய ரசிகர்கள் தமது எதிர்ப்பையும் காட்டத் தொடங்கியுள்ளனர்.

**உருவ பொம்மை எரிப்பு**

இந்தத் தொடரில் தொடர்ந்து இரண்டாவது தோல்வியை இந்தியா சந்தித்தது. இதனால் ஆத்திரமடைந்த கொல்கத்தா ரசிகர்கள் இந்திய அணித் தலைவர் டோனியின் உருவ பொம்மையை வீதியில் எரித்து, தங்களது வெறுப்பை தெரிவித்தனர்.

**கட்டாய வெற்றி**

இரு அணிகள் மோதும் நான்காவது மற்றும் கடைசி டெஸ்ட் ஆட்டம் நாக்பூரில் எதிர்வரும் 13 ஆம் திகதி தொடங்குகின்றது. இங்கிலாந்தை பொறுத்த வரையில் இந்த ஆட்டத்தை சமநிலையில் முடித்தாலே 28 ஆண்டுகளுக்கு பின்னர் இந்திய மண்ணில் தொடரை கைப்பற்றலாம். ஆனால் இந்திய அணி கட்டாயம் [illegible] பெற்றால் மட்டுமே தொடரை [illegible] செய்ய முடியும்.

**12 ஆண்டுகளுக்குப் பின்னர்**

இந்திய அணி 12 ஆண்டுகளுக்குப் பின்னர், இந்திய மண்ணில் தொடர்ந்து இரண்டு டெஸ்டில் தோல்வியை பதிவு செய்தது. இதற்கு முன்னர் கடந்த 2000 இல் சச்சின் தலைமையிலான இந்திய அணி, தென்னாபிரிக்க அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சொந்த மண்ணில் தொடர்ந்து இரண்டு தோல்வியை (மும்பை, பெங்களூர்) பதிவு செய்தது.

**முதன்முறை**

இங்கிலாந்து வீரர் கெவின் பீற்றர்சன் இந்திய அணிக்கு எதிராக முதல் முறையாக டெஸ்ட் ஆட்டத்தில் 'டக் அவுட்டானார்'. சர்வதேச அரங்கில் 9 ஆவது முறையாகும்.

**9 ஆவது தோல்வி**

கொல்கத்தா மைதானத்தில் இது வரை 38 போட்டியில் பங்கேற்றுள்ள இந்திய அணி, 9 ஆவது தோல்வியைப் பதிவு செய்தது. தவிர, கடந்த 13 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த மைதானத்தில் இந்திய அணி தனது முதல் தோல்வியை பதிவு செய்தது. [illegible] ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைப் பொறுப்பில் இருந்து விலக மாட்டேன்

அணித்தலைமைப் பொறுப்பில் இருந்து விலகும் எண்ணம் தற்போது கிடையாது, என்று இந்திய அணித்தலைவர் டோனி தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் வெற்றித் தலைவராக விளங்கியவர் டோனி (வயது-31). இவரது தலைமையில் இந்திய அணி 'ரி-20' உலகக் கிண்ணம் (2007), 50 பந்துப் பரிமாற்ற உலகக் கிண்ணம் (2012) என்று வெற்றி மேல் வெற்றிகளை குவித்து வந்தது.

சமீபகாலமாக அணித் தலைவர் டோனியின் வியூகம் எடுபடவில்லை. கடந்த ஆண்டு இங்கிலாந்து, ஆஸ்திரேலியாவில் நடந்த டெஸ்ட் தொடரை முழுமையாக இழந்தது. தற்போது சொந்த மண்ணில் இங்கிலாந்துக்கு எதிராக நடக்கும் டெஸ்ட் தொடரிலும் டோனி தலைமையிலான இந்திய அணி அடுத்தடுத்து தோல்விகளை சந்தித்து வருகிறது. இதனால் தொடரை இழக்கும் இக்கட்டான நிலையில் உள்ளது.

இந்த ஆண்டு இவரது தலைமையில் விளையாடிய 7 டெஸ்டில், இந்திய அணி 3 வெற்றி, 4 தோல்வியை பெற்றது. இந்த நிலையில் முன்னாள் வீரர்கள் சிலர், அணித்தலைமைப் பதவியில் இருந்து டோனி விலக வேண்டும், துடுப்பாட்டத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று கருத்து தெரிவித்து வருகின்றனர்.

இது குறித்து டோனி கூறியதாவது:

மும்பை டெஸ்ட் ஆட்டத்தை தொடர்ந்து கொல்கத்தாவிலும் தோல்வி அடைந்தது வருத்தம் அளிக்கிறது. இந்த ஆட்டத்தில் எங்களது துடுப்பாட்டவீரர்கள் பெரிய அளவில் சோபிக்கத்தவறினர். முதல் இன்னிங்சில் 450 ஓட்டங்களுக்கு மேல் எடுத்திருக்க வேண்டும். இரண்டாவது இன்னிங்சில் எங்களது துடுப்பாட்டம் படு மோசமாக இருந்தது.

அணித்தலைமைப் பொறுப்பில் இருந்து விலகுகிறேன் என்று எளிதாக கூறிவிடலாம். ஆனால் பதவி விலகும் எண்ணம் தற்போதைக்கு கிடையாது. அதற்கான நேரம் இதுவல்ல. ஒரு அணி இக்கட்டான நிலையில் இருக்கும் போது பதவி விலகுவது சரியல்ல. பொதுவாக ஆட்டத்தில் வெற்றி, தோல்வி என்பது சகஜம். ஒவ்வொரு ஆட்டத்தையும் சவாலாக எடுத்துக் கொண்டு அணியை திறம்பட வழிநடத்தி மீண்டும் வெற்றிப் பாதைக்கும் திரும்புவோம் என்ற நம்பிக்கை உள்ளது. தற்போது கவனம் முழுவதும், நாக்பூரில் நடக்கவுள்ள கடைசி டெஸ்ட் ஆட்டத்தின் மீது உள்ளது. இந்த ஆட்டத்துக்கு அனுபவம், திறமையான இளம் வீரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். கடந்த ஆட்டத்தில் செய்த தவறுகளை திருத்திக் கொண்டு எழுச்சி பெற முயற்சிப்போம். பதவி விலகுவது குறித்து தேர்வுக்குழு மற்றும் இந்திய கிரிக்கெட் சபை நிர்வாகிகள் மட்டுமே முடிவு செய்ய முடியும்.

தோல்விக்கு பயிற்சியாளரை மட்டும் குறை கூறுவது சரியல்ல. அணியில் உள்ள ஒட்டுமொத்த வீரர்களும் பொறுப்பேற்க வேண்டும். டங்கன் பிளட்சர் பயிற்சியாளர் பணியில் சிறப்பாக செயல்படுகிறார். துடுப்பாட்டம் குறித்த நிறைய விடயங்களை கற்றுக் கொடுக்கிறார். இளம் வீரர்களை சரியான பாதையில் வழி நடத்துகிறார் - என்றார். (5)

# அதிரடியாக அடுத்தடுத்து மாற்றங்கள் சேவாக்கும் அணியிலிருந்து வெளியேற்றம்



நாக்பூர் டெஸ்ட் ஆட்டத்துக்கான இந்திய அணியில் இருந்து யுவராஜ் சிங், ஹர்பஜன் சிங், சகிர்கான் நீக்கப்பட்டனர். இந்த நிலையில் 'ரி-20' அணியில் இருந்து சேவாக்கும் நீக்கப்பட்டுள்ளார்.

இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 4 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் நாக்பூரில் எதிர்வரும் 13 ஆம் திகதி தொடங்குகிறது. இந்த ஆட்டத்துக்கான இந்திய வீரர்கள் தேர்வு, கொல்கத்தாவில் நேற்று முன்தினம் நடந்தது. இதில் மோசமான திறன் காரணமாக யுவராஜ் சிங், ஹர்பஜன் சிங், சகிர்கான் நீக்கப்பட்டனர். இவர்களுக்குப் பதிலாக ரவிந்திர ஜடேஜா, பியுஸ் சாவ்லா, பர்விந்தர் அவானா ஆகியோர் வாய்ப்பு பெற்றனர்.

சமீபத்திய ரஞ்சி கிண்ணத் தொடரில் அபாரமாக ஆடிய ரவிந்திர ஜடேஜா, முதல் தர போட்டியில் மூன்று முறை முச்சதம் அடித்த முதல் இந்திய வீரர் என்ற புதிய வரலாறு படைத்தார். இதன்மூலம் டெஸ்ட் அணியில் இடம் பிடித்த இவர், தனது தேர்வை நியாயப் படுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சகிர்கான் நீக்கப்பட்டதை அடுத்து அசோக் டிண்டா அல்லது பர்விந்தர் அவானாவுக்கு விளையாடும் பதினொருவர் அணியில் வாய்ப்பு கிடைக்கலாம்.

### சேவாக் 'அவுட்'

டெஸ்ட் தொடர் முடிந்த பின்னர், இந்தியா-இங்கிலாந்து அணிகள் இரண்டு சர்வதேச 'ரி-20' ஆட்டத்தில் பங்கேற்கின்றன. முதல்ஆட்டம் புனேயில் எதிர்வரும் 20 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இரண்டாவது ஆட்டம் மும்பையில் 22 ஆம் திகதி இடம் பெறவுள்ளது.

இந்த ஆட்டங்களுக்கான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. இதில் தொடக்க வீரர் சேவாக் நீக்கப்பட்டார். டெஸ்ட் தொடருக்கு தேர்வு செய்யப்படாத சுரேஷ் ரெய்னா, ரோகித் சர்மா உள்ளிட்டோர் 'ரி-20' போட்டிக்கான அணியில் இடம் பெற்றுள்ளனர். இளம் வீரர்களான புவனேஸ்வர் குமார், பர்விந்தர் அவானா, ரவிந்திர ஜடேஜா ஆகியோருக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. நாக்பூர் டெஸ்ட் ஆட்டத்துக்கான அணியில் இருந்து நீக்கப்பட்ட யுவராஜ் சிங்கும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

### டெஸ்ட் அணி

டோனி (அணித்தலைவர்), கம்பீர், சேவாக், சச்சின், ஹோக்லி, ரவிந்திர ஜடேஜா, புஜாரா, அஷ்வின், அசோக் டிண்டா, பிரக்யான் ஓஜா, ரஹானே, பியுஸ் சாவ்லா, இஷாந்த் சர்மா, முரளி விஜய், பர்விந்தர் அவானா.

### 'ரி 20' அணி

டோனி (அணித்தலைவர்), கம்பீர், அஜின்கியா ரஹானே, விராத் ஹோக்லி, ரோகித் சர்மா, சுரேஷ் ரெய்னா, யுவராஜ் சிங், மனோஜ் திவாரி, அஷ்வின், ரவிந்திர ஜடேஜா, பியுஸ் சாவ்லா, அசோக் டிண்டா, புவனேஸ்வர் குமார், பாலாஜி, பர்விந்தர் அவானா. (5)

# 'ரிவர்ஸ் ஸ்விங்' வித்தையை சகீரிடம் கற்றேன்

## - அண்டர்சன்



'ரிவர்ஸ் ஸ்விங்' பந்துவீச்சில் வல்லவரான சகீர்கானிடம் இருந்து புதிய நுட்பத்தைக் கற்றுக் கொண்டேன் என்று இங்கிலாந்து அணியின் வேகப் பந்து வீச்சாளர் அண்டர்சன் தெரிவித்துள்ளார்.

இந்தியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 3 ஆவது டெஸ்ட் ஆட்டம் கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்த மைதானம் வேகப் பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக இருப்பதால், திணறிய இந்திய அணி வீரர்கள் 316 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தனர். எனவே வேகப்பந்து வீச்சாளர் அண்டர்சன் 3 இலக்குகளை(சச்சின், ஹோக்லி, அஸ்வின்) கைப்பற்றினார்.

இது குறித்து அவர் கூறுகையில், சச்சினின் ஆட்டமிழப்பு ஆட்டத்தின் திருப்புமுனையாக இருந்தது. அவரது இலக்கை கைப்பற்றியமை எனது வாழ்கையில் மறக்க முடியாத தருணங்களிலொன்று. நான் ஓய்வு பெற்ற பின் நிச்சயமாக சச்சினை ஆட்டமிழக்க செய்ததை பெருமையாக சொல்லிக் கொள்வேன் என்று கூறினார்.

கொல்கத்தா ஆடுகளம் 'ரிவர்ஸ் ஸ்விங்' பந்துவீச்சாளர்களுக்கு சாதகமாக இருந்தது. பந்தின் பளபளக்கும் பகுதியை மறைத்து வீசும்போது துடுப்பாட்ட வீரர்களால் பந்தை கணிக்க முடியாது.

இந்த நுட்பத்தை அண்டர்சன் நன்கு பயன்படுத்தினார். இந்த 'ரிவர்ஸ் ஸ்விங்' நுட்பத்தை தான் சகீர்கானிடம் இருந்து கற்றுக் கொண்டதாக அண்டர்சன் கூறியுள்ளார்.

அவர் கூறுகையில், கடந்த சுற்றுப் பயணத்தின் போது சகீர்கான் பளபளக்கும் பகுதியை மறைத்து பந்து வீசியதை அறிந்து கொண்டேன். அதன் பிறகு அதே போன்று பந்துவீசி பயிற்சி எடுத்துக் கொண்டேன். சகீர்கானின் நுட்பமே இந்த ஆட்டத்தில் எனக்கு கைகொடுத்துள்ளது என்று தெரிவித்துள்ளார். (5)

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆரம்பக்கல்வி ஆசிரியர்
*திருமதி சிவப்பிரகாசம் பரம்சோதி*
*(அருந்ததி ரீச்சர்)*
அவர்கள் காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துவதோடு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளரும், ஊழியர்களும்
AXSHAYA CONSTRUCTION, JAFFNA.
(28873)(3.14)


**விக்னா** கல்வி நிறுவனம். 52,ஸ்ரான்லி றோட், யாழ்.
ஆரம்பம்: 12.12.12 புதன் 12 மணி
A/L 2013 DAY
பொருளியல் M.C.சுதாகரன் (யாழ். மாவட்ட பிரபல ஆசான்)
*அரச பொருளாதாரம்
*Paper class சந்தைசெயற்பாடு
A/L 2014
*உற்பத்தி, செலவு நடத்தை (தேர்ச்சி 03)

நத்தார் பண்டிகையை முன்னிட்டு LAPTOPகளின் மலிவு விற்பனை
HP, COMPAQ c43 D/core - 57500/- (500GB, 2GB, 14" Display)
HP PAVIlion g6 i3 -71500/- (320GB, 2GB, 15" Display)
st.antony's 14ஆவது வருட சேவையில்
3 YEARS SERVICE WARRANTY
FREE - DONGLE 7.2mb/ BAG/ HEAD-PHONE/ HP MOUSE/ 8GB PENDRIVE
187, K.K.S Road, Jaffna.
0212224865, 0777271645

A/L பௌதிகவியல் / இணைந்த கணிதம் தமிழ் / ஆங்கில மொழிகளில் 2013, 2014, 2012 A/L repeat
பிரபல கல்லூரிகளில் சிறப்பாக கற்பித்து அனுபவம் பெற்று சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற ஆசிரியரால் 20 வருட வினாத்தாள்கள் உட்பட ஏராளமான பயிற்சிகளுடன் மேற்படி பாடங்கள் தனிப்பட்ட முறையில் கற்பிக்கப்படும். பெற்றோர் தொடர்பு விரும்பத்தக்கது. வகுப்புகள் நடைபெறுகிறது.
விபரங்களுக்கு: ஆசிரியர்
R. பாலசுப்பிரமணியம் B.Sc (cey)Dip.Ed
42/1, இந்துக்கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம்.
0776648751, 0775178727
(28585)(3.14)

ஐரோப்பிய நாடுகளுக்கு சட்டரீதியாக இலகுவாக விசா பெறலாம்
ஐரோப்பிய நாடுகளான லிதுவேனியா, போலந்து, சைப்பிரஸ் நாடுகளுக்கு சட்டரீதியான வணிக விசா ஆலோசனை.
திசைகாட்டி பிறைவேற் லிமிட் (PV 82703)
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0212219016
(26817)(3.14)
(சனி, ஞாயிறும் திறந்திருக்கும்)

Merry Christmas & Happy New Year
**Quick Learning Course**
**Spoken English With Grammar**
உரையாடல் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video Visuals மூலமாக நடாத்தப்படுகிறது.
December, 2012 G.C.E. (O/L) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு விசேட கட்டணக்கழிவு வழங்கப்படும்
**Diploma In English** (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைக்கேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.
திங்கள், செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில் வகுப்புகள் நடைபெறும்
BCHS
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No. 15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna
ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel: 021 2224550 Hotlines: 0777222422/0777585913/0714299935/0777730074
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vaiavarpulliam Kulam Vavuniya. Tel: 024 3245287
அனைத்து பிரிவுகளும் 2013, January 7ம் 12ம் திகதிகளில் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே தங்கள் பதிவுகளை உறுதிசெய்வதுடன் ஏற்ற நேர அட்டவணையை தெரிவு செய்து வீண் விரயத்தை தவிர்க்கவும்.

100
அன்புள்ளங்களே!
ஆஸ்திரேலியாவில் வணிகம் செய்ய......,
தொழில் புரிய.......,
நீங்கள் குடும்பமாக செல்லலாம். அதற்குரிய சட்டரீதியான ஆலோசனைகளை நாங்கள் தங்களிற்கு வழங்குவோம்.
மேற்படி ஆலோசனைத்துறையில் வடபுலத்தில் தனித்துவமான எம்மிடம் ஆலோசனை பெற்ற *27 ஆவது குடும்பத்தைச் சார்ந்த 100ஆவது நபரும்* இத்திட்டத்தில் வெற்றி யடைந்துள்ளமையை வெற்றிப் பெருமிதத்துடன் தங்களிற்கு அறியத்தருகின்றோம்.
இது தொடர்பான விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இன்னும் 5 தினங்களில் மேற்படி ஆலோசனைக்கு புதியவர்கள் இணைத்துக் கொள்வதை நிறுத்திக் கொள்ளப் போகின்றோம்.
மேலும் இத்திட்டம் மீள ஆரம்பிக்க வெகுநாள்கள் செல்லலாம். எனவே இத்தருணத்தை பயன்படுத்துவது உசிதம். மிகுதியை நேரில் பேசிக் கொள்வோமா?
*காலை 7 மணிமுதல் இரவு 7 மணிவரை எல்லா நாள்களும் உங்களுக்காக காத்திருப்போம்.*
உண்மையுள்ள
G.T.உலகசேகரம்
பொதுமுகாமையாளர்.
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்,
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
175, பருத்தித்துறை வீதி,ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.P.:021 221 9016


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.